

**ஆசிரியர் உரை**

# ஒவ்வொன்றும் ஐக்கியத்தின் பரீட்சை அல்ல

## Not Everything Is a Test of Fellowship

Louis Rushmore

**ஒ**வ்வொன்றும் ஐக்கியத்தின் பரீட்சை அல்ல. ஆனால், சிலுவைகள் உண்மையாகவே ஐக்கியத்தின் பரீட்சைதான். வாழ்க்கை ரீதியாகவும் சரி, மத ரீதியாகவும் சரி பல காரியங்கள் முன்பு பொருந்தியவைகள் இப்போது பொருந்தாதவைகளாக மாறி விடுகின்றன. அதே நேரத்தில், பல காரியங்கள் நேற்றும், இன்றும் என்றென்றும் பொருந்துகிறவைகளாகவே இருக்கின்றன. எனவே தான், மனித இனம் இவ்வுலகத்திற்கும், வருகின்ற உலகத்திற்கும் பொருந்துகிற காரியங்களை உள்ளடக்கிய தெய்வீக ஆலோசனை களைப் பின்பற்ற வேண்டும். **கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்** (எரேமியா 10:23).

குணாதிசய அடிப்படையில் பார்த்தால் மனிதர்கள் பெரும்பாலும் மித மிஞ்சிய நிலையைத்தான் கடைபிடிக்கிறார்கள் (அரசியல், மதம் சமூக அமைப்புகள், பணியிடம்) என் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சிலர் சட்டதிட்டங்கள், ஒழுக்க நெறிகள் என வரும் போது மிகவும் தளர்வாக இருக்கிறார்கள், சிலர் மிகவும் கடுமையாக இருக்கிறார்கள். கர்த்தருடைய சபையில் பார்த்தாலும் கூட, சில கிறிஸ்தவர்கள் வேதாகம அறிவுரைகளை நடைமுறைப்படுத்த அறவே முயற்சி எடுப்பதில்லை. ஆனால், அதே நேரத்தில் சில கிறிஸ்தவர்கள் வேதாகம அறிவுரைகளை நடை முறைப்படுத்த மிகக்கடுமையாக நடந்து கொள்வார்கள். அதே போல், சிலர் தேவனால் கொடுக்கப்பட்ட போதனைகளை நடைமுறைப் படுத்துவதில் தாராளமயப் போக்கை கடைபிடிப்பார்கள். சிலர் பிடிவாதமான கடுமையான போக்கை கடைப்பிடிப்பார்கள்.

இவர்கள் சில வேளைகளில் தேவன் கொடுக்காத சட்டதிட்டங்களை உண்டாக்கி விடுவார்கள். மேலும், கிஸ்துவின் சுவிசேஷத்தை ஒருவர் தன் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது கடினம் என்று அவர்கள் வசனத்தைத் திரித்துப் பேசுவார்கள் [கலாத்தியர் 1:6–9; வெளிப் படுத்தின விசேஷம் 28:18– 19].

அதே நேரத்தில், வேத வாக்கியங்களைப் பின்பற்றுவதில் தாராளமயக் கொள்கையை கடைபிடிப்பவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் தாங்கள் யாரோடு முரண்படுகிறார்களோ அவர்களை விட அதிகம் படித்தவர்களென்றும், அதிகம் முதிர்ச்சி அடைந்தவர் களென்றும் நினைக்கத் துணிகிறார்கள். ஓ! நாங்களும் உங்களைப் போல் தான் விசுவாசித்து வந்தோம். ஆனால், மறுபடியும் வேதவாக்கியங்களை ஊக்கமாகப் படித்தபடியால் இப்போது உங்களை விட விசுவாசத்தில் நாங்கள் அதிக முதிர்ச்சியடைந்துவிட்டோம் என்று சொல்லுகிறார்கள். **புதிய ஏற்பாடு எபேசியர் 5:19–ல் சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டு களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு** உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள் என்று சொல்லி ஆராதனையில் தேவனால் ஏற்றுக்கொள்வதற்கான இசை இது தான் என்று குறிப்பாக விளக்கின பிறகும் கூட, கிறிஸ்துவ ஆராதனை முறையில் இசைக்கருவிகளை இசைப்பது உட்பட பல காரியங்களை அறிமுகப்படுத்துவது தங்களைத் தாமே பெரியவர்களாக எண்ணும் ஒரு முயற்சியே ஆகும்.

புதிய ஏற்பாட்டு வேத வாக்கியங்களில் எவைகள் குறிப்பாகத் தடை செய்யப் பட்டுள்ளதோ அவைகள் அனுமதிக்கப்படும் போது அது கிறிஸ்தவத்தின் சாராம்சத்தை குறைத்து அவரவர் விருப்பப்படி காரியங்கள் நடைந்தேற வழிவகுத்துவிடுகிறது. அது நம்முடைய வாழ்க்கையை நெறி முறைப்படுத்தி இப்பூலோகத்திலிருந்து



பரலோகத்திற்குச் செல்ல வரைபடமாக இருக்க வேண்டிய வேதாகமத்தின் அதிகாரத்தை அவமாக்குகிறது. இது நம்முடைய வாழ்க்கையை முறைப்படுத்தவும், நெறிப்படுத்தவும் அவசியமான தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தை மட்டுப்படுத்துகிறது, கட்டு படுத்துகிறது. அது மாத்திரமல்ல அப்போஸ்தலருடைய உபதேசத்தை அப்படியே அப்புறப்படுத்துகிறது.

அப்போஸ்தலர்கள் 20:7 ஐ நாம் கவனிக்கும் போது, கர்த்தருடைய பந்தியை நாம் எப்போது அனுசரிக்க வேண்டும், எத்தனை நாட்களுக்கு ஒருமுறை அனுசரிக்க வேண்டும் என்பதைப் பற்றிய ஒரு முன்னு தாரணமான வசனமாகும்.

அங்கீகரிக்கப்பட்ட வேதாகம உதாரணங்களை அவமதித்த அவர்களால் வாரத்தின் முதல் நாள்தோறும் அனுசரிக்க வேண்டிய கர்த்தருடைய பந்தியில் மாதத்திற்கு ஒரு முறை, வருடத்திற்கு இரு முறை, வருடத்திற்கு ஒரு முறை அனுசரிக்கப்பட்டாலும் அவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. அதே போல், கர்த்தருடைய பந்தி எங்கே அனுசரிக்கப்பட்டாலும் உதாரணமாக திருமணத்தின் போது அனுசரிக்கப்பட்டாலும், அதை அனுமதிப்பதில் அவர்களுக்கு எந்த தயக்கமும் இல்லை.

முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகள் இப்போது வாழ்கின்ற ஒருவருக்குப் பொருந்த வேண்டுமென்றால், இப்போது வாழும் நபர் வேத வாக்கியங்களின் துணை கொண்டு அந்த கட்டளைகள் எனக்கும் பொருந்துகிறது என்று முடிவுக்கு வர வேண்டும். வேதாகமத் தொடர்பும், தகவல்களும் போதுமானதாக இல்லையென்றால், முதல் நூற்றாண்டில் கொடுக்கப்பட்ட கட்டளைகள் இப்போது வாழ்கின்றவர்களுக்குப் பொருந்தாது.

தேவனுடைய வார்த்தையிலிருந்து வழிவிலகிச் செல்கிறவர்கள் அப்படிச் செல்வதை நியாயப்படுத்தவும் (அதை எதிர்ப்பவர்களை அமைதிபடுத்தவும்) அவர்கள் எடுக்கும் கடைசி முயற்சி ரோமர் பதினான்காம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் விடும் அறை கூவலாகும். இந்த அதிகாரத்தைக் கூட அவர்கள் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள். இந்த ரோமர் பதினான்காம்

அதிகாரம் சகோதரர்கள் மத்தியில் காணப்பட்ட அபிப்பிராய பேதத்தை பற்றித் தான் பேசுகிறது. தேவனால் கொடுக்கப்பட்ட போதனையிலிருந்து அபிப்பிராய பேதங்களுக்காக வழிவிலகிச் செல்வதென்பது தரம் தாழ்ந்த செயலாகும்.

**கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து வழிவிலகிச் செல்லுதலைப் பற்றி பல தீர்க்கதரிசனங்கள் முன் உரைக்கப்பட்டிருக்கின்றன. இதைக் குறித்து பல எச்சரிப்புகளும் விடப்பட்டிருக்கின்றன.**

ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் **செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங் காலம் வரும்** (II தீமோத்தேயு 4:3–4). அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள் (ரோமர் 16:17,18) கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனவல்ல. **கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால் அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்குப் பங்குள்ளவனாகிறான்** (II யோவான் 9:11). ஒவ்வொன்றும் ஐக்கியத்தின் பரீட்சை அல்ல. ஆனால், சில காரியங்கள் உண்மையாகவே ஐக்கியத்தின் பரீட்சைதான். ✝



நிர்வாக ஆசிரியர் உரை

## நீ பயப்படாதே...

Fear Not

E.Z.S. Rajanayagam

சர்வ வல்ல தேவனுடைய அளவற்ற அநுக்கிரகத்தால், ஒப்பீடற்ற ராஜாவாகத் திகழ்ந்தவன் ஞானி சாலமோன். இவன் வேதாகமத்தின் பக்கங்களில் புகழ்மணம் வீசிக் கொண்டிருக்கும் தாவீது அரசனின் கடைசிப் புதல்வன். அளப்பரிய ஞானத்திற்காக அன்றைய உலகத்தால் அண்ணாந்து பார்க்கப்பட்ட இந்த ஞானியைக் கொண்டு பரிசுத்த ஆவி யானவர் பகிர்ந்தருளிய நீதிமொழிகளில் ஒன்று, **ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம்** என்பது [நீதி25:11]. இவ்வசனம் சிறப்புக் குரிய ஒன்று. இதற்குக் காரணம், இதில் இடம் பெற்றுள்ள வெள்ளித் தட்டோ, பொற்பழமோ அல்ல. மாறாக, இவ்வசனத்தில் இடம் பெற் றிருக்கும் **ஏற்ற** என்னும் பதம்தான். அப்படியானால் இதற்கான விளக்கம் என்ன என்ற கேள்வி வருகிறது. அப்படித்தானே!

நம் பரலோகத்தின் தேவன் இப்படி **ஏற்ற சமயங்களில்** வெளிப் படுத்தின வார்த்தைகள், இந்நாட்களில் கோவிட் – 19 ஐக் கண்டு பயத் தோடும், ஒருவித கலக்கத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு மிகுந்த நம்பிக்கையைக் கொடுக்கிறதாயிருக்கிறது. ஏனெனில், இன்றைய உலகம் இனம், தேசம், மதம் என்று எந்தப் பாகுபாடும் இல்லாமல் **கொரோனா** என்னும் கொடிய தொற்று நோயால் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறது. உலகின் அடுத்த கட்ட நகர்வு எப்படி யிருக்கும் என்று எவராலும் கணிக்க முடியவில்லை. ஆளாளுக்கு ஆருடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சீனா நாட்டில் தொடங்கி, பூமியின் மீதெங்கும் பரவி தன் கோரப் பிடிக்குள் உலகைக் கொண்டு வந்த கொரோனா, தன்னுடைய பிடியை ஒவ்வொரு நிமிடமும் இறுக்கிக் கொண்டே வருகிறது. சாவு எண்ணிக்கை ஆயிரங்களை அனாயசமாகக் கடந்து, இலட்சங்களை இலட்சியப்படுத்தாமல் போய்க் கொண்டிருக்கிறது.

தங்களைக் கெட்டிக்காரர்களென்றும், அவதாரப் புருஷர்கள் என்றும் எண்ணிப் பார் எங்கும் பவனி வந்த உலகத் தலைவர்கள் பேயறைந்தவர்கள் போல் காணப்பட்டு, தலைதப்பித்தால் போதும் என்று எண்ணி நான்கு சுவருக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள். இன்னும், தங்களை அசுர சக்தி படைத்தவர்கள் என்றும், யாராலும் அசைக்க முடியாத வல்லரசுகள் என்றும் வானம் முட்டப் பேசின சூரப்புலிகள், எத் திசையில் செல்வதென்று தெரியாமல் விழி பிதுங்கி பரிதாபமாகக் காட்சி தருகிறார்கள். முடிந்து போன இரண்டு உலகப் போர்களின் போது சீறி வந்த ஏவுகணைகளையும், குண்டு மழை பொழிந்த விமானங்களையும் கண்டு கிஞ்சித்தும் அஞ்சாத பொதுஜனம், கண்ணுக்கே புலப்படாத நுண் கிருமியைக் கண்டு குலை நடுங்கித் தலைமறைவு வாழ்க்கையைத் தாங்களாக முன்வந்து ஏற்று நடத்துகிறார்கள்.

அறிவு ஜீவிகளின் நிலை அதைவிட மோசமாக உள்ளது. சரித்திர மேதைகள் இப்படிப்பட்ட உலகம் தழுவிய பேரழிவுக்கு முன் உதார ணங்கள் உண்டா என்று கண்டுபிடிக்க சரித்திரத்தின் பக்கங்களை சத்த மில்லாமல் புரட்டிக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவ விஞ் ஞானத்தில் சிகரத்தை எட்டிவிட்டோம் என்று நெஞ்சை நிமிர்த்திய ஆராய்ச்சியாளர்கள், தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு, யாராவது மருந்து கண்டுபிடித்து விட்டோம் என்று சொல்ல மாட்டார்களா என்று பக்கவாட்டில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதார வல்லுநர்கள் நாசமாகிக் கொண்டிருக்கும் பொருளாதா ரத்தின் பாதிப்பு பாதாளத்தின் எந்த எல்லை மட்டும் போகும் என்பதைச் சொல்ல முடியாமல் திணறி, பட்டினிச் சாவைத் தடுத்தால் அதுவே பெரிய சாதனை என்றளவில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது தான் யதார்த்தம்.

சரி, பயப்படாதே, கலங்காதே என்று நாம் சொல்லுவோமானால், அதற்கான காரணங்கள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அது தானே சரி, கவனிப்போம்.

I. **பயத்துக்கான காரணத்தைக் காட்டிலும் கர்த்தர் பெரியவர்**

பரிசுத்த வேதாகமத்தின் முதல் வசனமே **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார் என்பது** (ஆதி 1:1). விண்ணுலகிலும், மண்ணுலகிலும், நீரிலுகிலுமுள்ள அனைத்தும் அவருடைய கரத்தின் கிரியைகள் தான். அவர் அதிசயங்களைச் செய்கிறவர் (சங் 72:18) அண்டசராசரங்களை மாத்திரமல்ல, மானிடராகிய நம்மை உண்டாக்கினவரும் அவரே. தேவ மனிதர்கள் இதை உணர்ந்திருக்கிறார்கள். ஆகையால் தான் தாவீது, **தேவனாகிய கர்த்தாவே நீர் பெரியவர் என்று விளங்குகிறது.**

**நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின் படியேயும் தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத் தவிர வேறே தேவனும் இல்லை என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தான்.** இந்த உண்மை புரியாமல் தன்னை ஒரு பொருட் டென்று எண்ணி வாழ்ந்து, தேவ வல்லமையையும் தேவச் செயலையும் அற்பமாக எண்ணியதின் விளைவாகவே இன்றைக்கு மானிடம் பரிதாபமாக நிற்கிறது.

ஆகையால், அருமையானவர்களே! நம்முடைய பூலோக வாழ்க்கையில் நாம் பயப்படுவதற்கான காரணம் எதுவாக இருந்தாலும், உலகை மிரள வைத்துக் கொண்டிருக்கும் கொரோனவாக இருந்தாலும் நாம் பயப்படத் தேவையில்லை. **நம் கர்த்தர் மகா பெரியவர்.**

## II. நம் ஜெபத்தைக் கேட்பவர் நம்மை உண்டக்கினவர்

ஜெபம் என்பது தேவனிடத்தில் ஏறெடுக்கும் மன்றாட்டு. ஜெபம் மனிதனுக்குக் கிடைத்த மாபெரும் சிலாக்கியங்களில் ஒன்று. ஜெபத்தின் மூலம் நாம் சர்வவல்வரோடு பேசுகிறோம். நம் தேவன் ஜெபத்தைக் கேட்பவர் மாத்திரமல்ல, ஜெபத்திற்குப் பதிலளிக்கிறவர் [II நாளா 7:14] அப்போஸ்தலன் பவுலடியார் பிலிப்பி பட்டணத்து சபைக்கு எழுதும் போது, நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லா வற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று [பிலி 4:6] கூறியுள்ளார்.

சர்வ வல்லவரால் நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம். கவிஞன் தாவீது இது குறித்துப் பாடும்போது, **நீர் உள்ளிந்திரியங்களைக் கைகொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். பிரம்மிக்கத்தக்க அதிசயமாய் நம்மை உருவாக்கினார்** என்று பாடியுள்ளார் [சங்.139:13,14]. அத்தோடு, நாம் அவருடைய குமாரானாகிய இயேசுவின் சுவிசேஷ வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்த போது **ஆவிக்குரிய ரீதியில் தேவனால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறாம்** [1பேது 1:23]. இதன் மூலம், **தேவனுடைய புத்திரர்** என்னும் சிறப்பு நிலை நமக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. இச்சிறப்பு நிலை, நம்மை பிரமிக்கத்தக்க அதிசயமாய் உருவாக்கின தேவனை, அப்பா, **பிதாவே** என்று கூப்பிடப்பண்ணு கிற புத்திர சுவீகார உரிமையைத் தந்திருக்கிறது [ரோமர் 8:15].

நம் தேவன் நம் ஜெபத்தின் காரியங்களைக் கேட்பதற்கும், பதில ளிப்பதற்கும் முற்றிலும் தகுதிபடைத்தவராக இருக்கிறாரே. ஏனெனில், அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும் [சங் 33:9].

உண்மை நிலை இப்படியாக இருக்கும் போது, நாம் ஏன் பயப்பட வேண்டும் ? சரீரத்திலும், ஆவியிலும் நம்மைப் படைத்தவர் வல்லமையுடையவர் என்பதை ஏற்றுக்கொண்டு, ஊக்கத்தோடும், பாரத்தோடும் ஜெபித்து நம்பிக்கையோடு நாட்களைக் கழிப்போம்.

III. **சோதனையான நேரங்கள் விசுவாசத்தை செயல்பட வைக்கும்**

இப்பூலோக வாழ்க்கையின் பல நேரங்களில், அடுத்த கட்டம் என்ன என்பது நம்மைக் கலங்கச் செய்து விடுகிறது. ஆம், பயம் நம்மை முடமாக்கிப் போடுகிறது. நான் என்ன செய்வேன். என்ன பேசுவேன், எங்கு போவேன், எப்படிச் சந்திப்பேன் என்றெல்லாம் கவலைப்பட ஆரம்பித்து விடுகிறோம். ஆயினும், எச்சூழலிலும் நாம் விசுவாசத்தை இழக்க வேண்டியதில்லை. இது குறித்து தாவீது, தான் பெலிஸ்தர் கையில் அகப்பட்டபோது, **நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்பு வேன்** என்று கூறியுள்ளார் [சங் 56:3]. இப்படிப்பட்ட நம்பிக்கை இருந்த படியால்தான். **உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்** [சங் 18:29] என்று கூற முடிந்தது.

இதே கருத்தை அப்போஸ்தலன் பவுல் புதிய ஏற்பாட்டில் எங்ஙனம் வெளிப்படுத்தியுள்ளார் பாருங்கள். **நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையிருக்கத்தக்கதாக மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களை தப்பிவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார். இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்** [II கொரி 1:9:10]. ஆகவே தான், **நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்** [II தீமோ 1:12] என்று நம்மைப் போன்றவர்களின் செவிகளில் விழத்தக்கதாக உரக்கக் கூற முடிந்தது.

ஆகையால், அருமையானவர்களே! தேவனிடத்திலும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் வைப்போம். நாம் அவ்வப்போது தொலைத்துப்போடும் விசுவாசத்தைச் செயல்பட வைக்கும் சூழ்நிலைகளைத் தயக்கமில்லாமல் எதிர்கொண்டு நம்பிக்கையோடு செயல்படுவோம். தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருக்கமாட்டார். [ரோமர் 8:32]. ஆகையால், சோதனைகளை ஏற்றுக்கொள்வோம். விசுவாசத்தில் உறுதி காட்டுவோம். வெற்றி வாழ்வை இம்மையிலும், மறுமையிலும் சுதந்தரிப்போம். ஆமென்!! ✝

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ஒவ்வொன்றும் ஐக்கியத்தின் ... | Louis Rushmore | ... 1 |
| நீ பயப்படாதே .... | E.Z.S. Rajanayagam | ... 5 |
| கிறிஸ்வின் மணவாட்டி | Jerry Bates | ... 11 |
| இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கான ... | Byron Nichols | ... 15 |
| சபையை முன்னேற்றுவோம் | J.C. Choate | ... 19 |
| மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா? | E.Z.Selvanayagam | ... 22 |
| கிறிஸ்தவ தகப்பன், கிறிஸ்தவ கணவன் | P.C. Philemon Rajah | ... 26 |
| கர்த்தரைச் சார்ந்துகொண்ட யூதபுத்திரர் | B. Arjunan | ... 30 |
| எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க ... | Benny Martin | ... 34 |
| **தேவன் – God** | | |
| உலகிலேயே மிகவும் அபாயகரமான பெண் | Stan Mitchell | ... 37 |
| **சாட்சியங்கள் – Evidences** | | |
| சங்கீதம் 19 : 1 - 3 | | ... 39 |
| **தேவனுடைய வார்த்தை – The Word of God** | | |
| வார்த்தையின் ஏழு அதிசயங்கள் | Charles Pugh III | ... 40 |
| அவளுடைய விலையேறப்பெற்ற .... | David A. Sargent | ... 42 |
| பகுத்துப் போதிப்பதற்கு வேதாகமத்தை .... | David R. Kenney | ... 44 |
| **இரட்சிப்பு – Salvation** | | |
| ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகம் | David R. Pharr | ... 46 |
| பெரிய கேள்வி? | Carroll Sites | ... 49 |
| மரணம் என்பது .... | Kevin L.Moore | ... 51 |
| **சபை – The Church** | | |
| சபை வளர்ச்சியை உண்டாக்குதல் | Wayne Barrier | ... 55 |
| நிலத்தடி கல்லறைளிலிருந்து வாசகங்கள் | Bobby Dockery | ... 57 |
| சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது | Cecil May Jr. | ... 61 |
| ஒன்று மற்றொன்றைப் போலவே .... | Bill Dillon | ... 64 |

## வாழ்வதற்கான உபதேசம் – Doctrine to Live by


| | | |
|---|---|---|
| கர்த்தருடைய நாமத்தை தொழுது ... | Owen D. Olbricht | ...65 |
| மீட்டமைப்பு வேண்டுகோளின் ... | Jim Howard | ... 67 |
| சத்தியம் முக்கியமானதா? | Bobby Key | ... 69 |
| ஒற்றுமையும், உபதேசமும் | Ben Jones | ... 71 |


## செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action


| | | |
|---|---|---|
| நம்பிக்கையற்ற நிலை? வேகமாக ... | Steve Higginbotham | ... 74 |
| அவர் தொடர்ந்து சுவிசேஷத்தைப் .... | Wayne Brewer | ... 76 |
| முதல் வகுப்பு 24 வருடங்கள்! | Jess Whitlock | ... 78 |


## ஆராதனை – Worship


| | | |
|---|---|---|
| ஞாயிறு ஆராதனையை மேலும் ... | J. Randal Matrenyren | ... 80 |
| கர்த்தருடைய பந்தியில் நன்றியை ... | Maxie B. Boren | ... 82 |
| இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் | Daltan Key | ... 85 |
| அக்கினியோடு விளையாடுதல் | Rick Cunninghams | ... 87 |


## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை – Daliy Christian Living


| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ மாதிரி ... | Neil Richey | ... 89 |
| எது ஒருவரை தேவனுடைய ... | Bob Plunket | ... 91 |
| பிரசங்கியாராகிய என் அப்பா | Mark N. Paley | ... 93 |


## கிறிஸ்தவ இல்லம் – The Christian Home


| | | |
|---|---|---|
| திருமணத்தைக் காப்பாற்றுதல் | Dale Grisson | ... 95 |
| உங்கள் குடும்பம் எப்படி இருக்கிறது? | John Gip Jon | ... 97 |
| வேதாகமத்தின் மகிழ்ச்சி அதிகாரம் | David Shannon | ... 99 |


## வேதாக கதாபாத்திரங்கள் – Bible Characters


| | | |
|---|---|---|
| கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய .... | Harvey Porter | ... 102 |
| முக்கிய வசனம் குறித்த .... | | ... 105 |
| வசன ஆராய்ச்சி | Mark.N. Posey | ... 107 |



### இணை ஆசிரியர் உரை

## கிறிஸ்துவின் மணவாட்டி

## The Bride Of Christ

### *Jerry Bates*

**வே**தாகமம் நாம் சபையை நன்றாகப் புரிந்துகொள்ள உதவும் படியாக பல உருவகங்களைப் பயன்படுத்துகிறது. ஒவ்வொரு உருவகமும் சபையின் குறிப்பிட்ட நிலைகளை வெளிப்படுத்து கிறது. ஒரேயொரு உருவகத்தைக் கொண்டு சபையின் ஒட்டு மொத்தக் காரியத்தையும் காட்ட முடியாது. வேதாகமத்தில் சபையைப் பற்றி எத்தனையோ உருவகங்கள் பதிவு செய்யப் பட்டிருந்தாலும் சபை மணவாட்டியாக உருவகப்படுத்தப்பட்டிருப்பது மிகவும் சுவாரஸ் யமானது. பவுல் II கொரிந்தியர் 11:2 ல் நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்பு கொடுக்க நியமித்தபடியால் உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கி யங்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். சில நிமிடங்கள் சபையைப் பற்றி பேசும் இந்த உருவகத்தை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.

முதலாவது, மணவாட்டியின் முதல் குணாதிசயம் உண்மையா யிருத்தல் அல்லது அர்ப்பணிப்பாயிருத்தல். நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி ஒருவர் விவாக உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கும் போது, அங்கே ஆழமான அர்ப்பணிப்பு அவசிய மாயிருக்கிறது. அந்த நம்பிக்கைக்கு ஒருவர் துரோகம் செய்து, உண்மையற்றவராய் மாறும் போது அது மன்னிப்பதற்குக் கடினமான காரியமாகிவிடுகிறது. அதே போல் இது கிறிஸ்தவர்கள் எப்படித் தங்கள் கற்பை கிறிஸ்துவினிடத்தில் காட்ட வேண்டுமென்பதையும் விளக்குகிறது. ஒருவர் கிறிஸ்தவராகும் போது அவர் தன்னை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்துக் கொள்கிறார். எப்படி ஒரு கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவருடையவர்களாகிறார்களோ அதேபோல் இந்த நபரும் கிறிஸ்துவோடு உடன்படிக்கை உறவை ஏற்படுத்திக் கொள்கிறார். அப்படியே கர்த்தரோடு இசைந்திருக் கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் [ I கொரிந்தியர் 6:17]. கர்த்தருடனான இந்த உறவை எல்லா உறவுக்கும், உடமைக்கும் மேலானதாகக் கருதவேண்டும் [ லூக்கா 14:26,27].

இரண்டாவது, மேலே விவரிக்கப்பட்ட காரியத்திற்கு நெருக்க மான ஒரு காரியத்தை நாம் பார்க்கப் போகிறோம். நமக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே காணப்படும் நெருக்கமான உறவுக்கும் நிகராக இவ்வுலகில் எந்த உறவும் இல்லை. இவ்வுலகில் ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் இடையே உள்ள உறவு நெருக்க மானது. இதற்கு இணையான உறவு இவ்வுலகில் எதுவுமில்லை. எபேசியர் 5:22–33 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் சபையை விவரிப்பதற்காக கணவன் மனைவி உறவை எடுத்துப் பயன்படுத்துகிறார். மேலும், பவுல் மனைவிகள் தங்கள் புருஷர் களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று சொல்கிறார். இன்றைய நாட்களில் பெரும்பாலான ஸ்திரீகள் இதைச்செய்வதற்கு விருப்பமில்லாதவர்களாயிருக்கிறார்கள். இருந்த போதிலும், நம் மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவின் குணாதிசயங்களை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் போது அவருக்குக் கீழப்படிவது நமக்குக் கடினமாக இருக்காது. இந்த மணவாளன் தன் மணவாட்டிக்காக தன் ஜீவனையே கொடுக்க ஆயத்தமாக இருந்தார் என்று நாம் பார்க்கிறோம். இந்தக் கணவன் மனைவி உறவின் மூலமாக பவுல் கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவர் களுக்குமிடையேயான நெருக்கமான உறவை விவரிக்கிறார். சபை கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் [ எபேசியர் 5:25–27]. ஒருவர் இதை உண்மையாகப் புரிந்து கொள்ளும் போது தன் ஜீவனை கிறிஸ்து வின் அதிகாரத்திற்கும், தலைமைத்துவத்திற்கும் கீழ்ப்படுத்துவது கடினமான ஒன்றாயிராது.

மூன்றாவது, கிறிஸ்துவின் அன்பு மற்றும் அக்கறையின் அபரிதமான ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்கிறோம். இயேசு கிறிஸ்து தம்முடைய சபைக்கு நித்திய இரட்சிப்பை அளிக்கிறார் [எபேசியர் 5:23]. அவர் மூலம் தம்முடைய சபையை போஷித்துக் காப்பாற்றுகிறார் [எபேசியர் 5:29]. நமக்கு ஒரு போதும் பசியும், தாகமும் இருக்காது [யோவான் 4:13,14:6:35]. ஆயினும், இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களெல்லாம் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்கே கிடைக்கிறதாக இருக்கிறது [எபேசியர் 1:3]. ஆகவே, நாம் அவருடைய மணவாட்டியாக அல்லது சபையின் அங்கமாயில்லையென்றால் இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை யெல்லாம் அனுபவிக்க முடியாது.

நான்காவது சபை ஈடு இணையற்ற வாக்குத்தத்தங்களை அனுபவிக்கிறது. ஒரு கணவனும் மனைவியும் திருமண ஒப்பந்தத்தில் இணையும் போது சிறந்தவைகளும் நடக்கும், மோசமானவைகளும் நடக்கும். இவ்வுலகில் ஒரு குடும்பத்திற்கு வருங்காலம் என்ன வைத்திருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. ஆயினும், இந்த நிச்சயமற்றத்தன்மை சபைக்குப் பொருந்தாது. ஏனென்றால், சபை இவ்வுலத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் தேவனுடையதாயிருக்கிறது. ரோமர் 8:17 ல் அப்போஸ்தலனாகிய பவுல் நாம் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரர் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். கிறிஸ்து எந்தெந்த நித்திய ஆசீர்வாதங்களையெல்லாம் அனுபவிக்கிறாரோ அந்த ஆசீர்வாதங்களை நாமும் அவருடைய சரீரத்தின் அங்கமாயிருக்கிறபடியால் அனுபவிக்கிறோம். ஆம், கிறிஸ்து இந்த பூமியில் பாடுபட்டதுபோல நாமும் பாடுபடலாம். பவுல் தன்னுடைய ஒப்புமையை நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும் என்று சொல்கிறார். ஆதலால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் [ ரோமர் 8:18]. இதே பவுல் [ II கொரிந்தியர் 4:17] ல் அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவத்தை நித்திய கனமகிமையோடு ஒப்பிடுகிறார். கிறிஸ்து தாமே மத்தேயு 19:29ல் நாம் கிறிஸ்துவுக்காக எவைகளை தியாகம் செய்திருந்தாலும் சரி, நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வோம் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். ராஜாதி ராஜாவும், கர்த்தாதி காத்தாவுமாயிருக்கிற நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய மணவாட்டியாக எவ்வளவு அருமையான ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது.

கடைசியாக, மணவாட்டி என்று வரும் போது அங்கே அழகும் உள்ளடக்கம். இந்த அழகும் விலையுயர்ந்த தன்மையும் வெளிப்படுத்தின விசேஷம் 21:2ல் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஒரு விவாகம் என்று வரும் போது அவளுடைய அழகை மிஞ்சியது எதுவுமில்லை. மணவாட்டி தன் வஸ்திரத்தை தெரிந்தெடுப்பதற்கு அதிகமான நேரத்தையும், பணத்தையும் செலவு செய்கிறாள். இருந்தபோதிலும், தேவன் தம்முடைய மணவாட்டிக்காக வஸ்திரத்தை ஆயத்தபபடுத்துகிறார். கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; மணவாளன்

ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னை சிங்காரித்துக் கொள்ளு வதற்கும் ஒப்பாக அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி



நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார் (ஏசாயா 61:10). தேவனுடைய மணவாட்டி தேவன் கொடுக்கும் வெண்மையான வஸ்திரத்தால் மூடப்படுகிறார். மணவாட்டியைக் காணும் போது மணவாளன் எப்படியாகக் களிசுருகிறான் என்பதை நாம் அறிவோம். இது கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை எப்படிக் காண்கிறார் என்பதை அடையாளப்படுத்துகிறது. மணவளன் மணவாட்டியின் மேல் மகிழ்ச்சியாயிருப்பது போல உன் தேவன் என் மேல் மகிழ்ச்சியாயிருப்பார் (ஏசாயா 61:5).

சபை கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறபடியாலும், மேற்சொல்லப்பட்ட எல்லா ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கிறபடியாலும் ஒருவர் ஏன் அதன் அங்கமாக ஆகக்கூடாது? சபை முக்கியமானதல்ல என்று நினைக்கும் ஒருவர் சபையின் தன்மையை நன்கு புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. தேவன் அவருடைய மணவாட்டியாக இருப்பதன் ஆசீர்வாதங்களை நாமெல்லாரும் அனுபவிக்கும்படி நமக்கு அழைப்புவிடுக்கிறார். கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாக நாம் கிறிஸ்துவுடன் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 6:3-5; கலாத்தியர் 3:27). நாமெல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம். (I கொரிந்தியர் 12:13). ஆகவே, இவ்வுலகிலும், நித்தியத்திலும் தம்முடைய மணவாட்டிக்கு தேவனால் மாத்திரம் தரக்கூடிய தாராளமான, ஏராளமான வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் நாம் அனுபவிக்க முடியும். கிறிஸ்துவின் மணவாட்டியாக விருப்பமில்லாமல் ஒருவரால் எப்படி இருக்க முடியும்? ✝



# இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கான வேதாகமப் பெயர்கள்?

## Bible Names for the followers of Jesus

*Byron Nichols*

**தே**வனுடைய ஜனங்கள் பழைய ஏற்பாட்டில் ''இஸ்ரவேலர்கள்'' என்று அழைக்கப்பட்டார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள் என்னவாக அழைக்கப்பட்டார்கள்? அவர்கள் எப்படி அடையாளப்படுத்தப்பட்டார்கள்? அவர்களுக்கு ஏதாவது சிறப்புப் பெயர் கொடுக்கப்பட்டதா? அப்படியானால் அது என்னவாயிருந்தது?

இக்கேள்விகள் பொருத்தமானவைகளும், முக்கியமானவைகளுமாயிருக்கிறபடியால் வேதாகமம் அதைப்பற்றி என்ன சொல்கிறதோ அதற்கேற்றபடி பதிலளிக்கப்பட தகுதி பெற்றிருக்கின்றன. உண்மையாகவே பெயர்கள் முக்கியமானவைகளாக இருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் இயேசுவைப் பின்பற்றுபவர்களை அடையாளப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிற நான்கு பெயர்கள் பற்றி நாம் பார்க்கப் போகிறோம்.

**சீஷன்** என்னும் பெயர்தான் நற்செய்தி நூல்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பெயராக காணப்படுகிறது. ஆயினும், புதிய ஏற்பாட்டின் கடைசி 22 புத்தகங்களில் இப்பெயர் பயன்படுத்தப்படவேயில்லை. சீஷன் என்பதற்கான பொருள் மாணவன், கற்றுக் கொள்பவன் போன்றவைகளாகும். இவ்வார்த்தை கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு பொருந்துகிறபடியாலே இதன் பொருள் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு ஒருவர் உண்மையாயிருப்பது என்று பொருள்படும். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அந்நாட்களில் பரவலாக போதகராகத்தான் அறியப்பட்டார். எனவே, சீஷன் என்னும் இப்பெயர் போதகர் அல்லது ஆசிரியருக்கும்

மாணவருக்கும் இடையில் காணப்படும் உறவைத்தான் காட்டுகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இன்றும் புதிய ஏற்பாட்டு காலத்தைப் போல சீஷர்களாகத்தான் இருக்கிறார்கள்.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு கொடுக்கப்படும் இரண்டாவது பெயர் **சகோதரர்** என்பதாகும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 23:8 ல் தம்முடைய சீஷர்களைப் பார்த்து **நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்** என்று சொன்னார். இப்பெயர் கிறிஸ்து பரமேறினபிறகு அதிக அதிகமாய் பயன்படுத்தப் பட்டது. I பேதுரு 2:17 ல் பேதுரு சபையை சகோதரர் என்று குறிப்பிடுகிறார். பவுல் தன்னுடைய எழுத்துக்களில் பலமுறை **சகோதரர்** என்னும் பெயரைப் பயன்படுத்தியிருக்கிறார். இந்த உதாரணங்களை கவனியுங்கள்: (1) I கொரிந்தியர் 6:8 ல் பவுல் கொரிந்து சபையை **நீங்களே அநியாயஞ்செய்கிறீர்கள், நஷ்டப்படுத்துகிறீர்கள்; சகோதரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே** என்று கடிந்து கொள்கிறார். கலாத்தியர் 6:1ல் கலாத்திய சபைகளுக்குப் பவுல் எழுதும் போது **சகோதரரே, ஒருவர் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால்** என்று எழுதுகிறார். அதேபோல் ரோமர் 12:10 ல் பவுல் ரோமாபுரி சபையாரிடம் **சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்** வலியுறுத்துகிறார்.

சகோதரர் அல்லது சகோதரர்கள் என்னும் வார்த்தை சகோதரர் மத்தியில் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்த வேண்டிய கடமைகளைக் காட்டுகிறது. சகோதரருக்கு விரோதமாகச் செயல்படுவது தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்வதற்கு சமமாகும். **இப்படிச் சகோதரருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியைப் புண்படுத்து கிறதினாலே நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறீர்கள்** (I கொரிந்தியர் 8:12). நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறபடியால் சகோதர, சகோதரிகளாக இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை அடையாளப்படுத்தும் மூன்றாவது பெயர் **பரிசுத்தவான்.** மத உலகில் இப்பெயர் அடிக்கடி பிரயோகம் செய்யப்படுவதால் நாம் இவ்வார்த்தையை பயன்படுத்து வதிலிருந்து விலகியிருக்கிறோம். ஏனென்றால், சிலர் கிண்டலாகக்

கூட **நான் அந்த அளவு பரிசுத்தவான் இல்லை** என்று சொல்வதை கேள்விப்பட்டிருக்கிறோம். மிகவும் விசேஷமான பரிசுத்தவான் எனும் வார்த்தையை நாம் பயன்படுத்த தயங்கக்கூடாது.



பரிசுத்தவான் என்னும் பதம் பரிசுத்த வேதாகமத்தில் சுத்தமாகத் தன்னை தேவனுக்குப் பரிசுத்தமாக ஒப்புக்கொடுத்த ஒருவனைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசுத்தவான் என்னும் பதம் தேவனால் மதரீதியாகத் தன்னை சூப்பர் ஹீரோவாக பார்க்கப்படும் ஒருவருக்குப் பொருந்தாது.

பரிசுத்தவான் என்னும் பதம் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் இடம் பெற்றிருக்கிறது. உதாரணமாக, அப்போஸ்தலர் 9:13 ல் அனனியா **ஆண்டவரே இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்** என்று சொன்னான்: பின்பு அதே அதிகாரம் 41வது வசனம் பேதுரு தொற்காளை உயிரோடு எழுப்பியதை பற்றிப் பேசுகிறது. அவன் அவளுக்கு கைக்கொடுத்து, அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும், விதவை களையும் அழைத்து அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான். கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள் **பரிசுத்தவான்கள்** என்று அழைக்கப்பட்டதற்கான எண்ணற்ற குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. ஆம், அவரை உண்மையாகப் பின்பற்றுபவர்களெல்லாரும் **பரிசுத்தவான்கள்** தான்.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களைக் குறிப்பதற்காக இன்றைய நாட்களில் அதிகமாகவும், பொதுவாகவும் பயன்படுத்தப்படும் பெயர்

**கிறிஸ்தவன்** என்பதாகும். இந்தப் பெயர் துரதிஷ்டவசமாக பெரும் பாலானவர்களால் கிறிஸ்து மீது பெயரளவில் நம்பிக்கை வைத்தி ருப்பவர்களை குறிக்கும்படியாகப் பயன்படுத்தப்படுகிறது. இப்பெயர் புதிய ஏற்பாட்டில் எவ்விதமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் கிறிஸ்துவுக்காக எதையும் அர்ப்பணிக்காதவர்களுக்கு இது பயன்படுத்தப்படாமல், கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றினவர் களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் கண்டறிய முடியும்.

ஆரம்பத்தில் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்த விசுவாசிகள் தாங்கள் மனமாறிய உடனே கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படவில்லை. இப்பெயர் எப்படி வந்தது என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால், அப்போஸ்தலர் 11:26 ல் நாம் **முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குத் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கப்பட்டது** என்று நாம் கற்றுக்கொள்கிறோம். இந்தப் பெயரை அப்போஸ்தலர் 26 ஆம் அதிகாரத்தில் பவுல் அகிரிப்பா ராஜாவிடம் கிறிஸ்துவைப் பற்றி போதித்த போது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 27 ஆம் வசனத்தில் **அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன்** என்றார். அதன் பின்பு 28 ஆம் வசனத்தில் அகிரிப்பா பவுலை நோக்கி நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்.

அஹுரிப்பா ராஜா கிறிஸ்தவனாவதற்கு வெறுமனே விசுவாசிப்பது மாத்திரம் போதுமானதாயிராமல், அதைவிட அதிகமான காரியங்கள் தேவைப்படுகிறது என்பதை அவன் புரிந்து கொண்டதாக நாம் பார்க்கிறோம். அகிரிப்பா ஏற்கனவே விசுவாசித்தான். ஆனால், அவன் கிறிஸ்தவனாகவில்லை. அவன் தன் கீழ்ப்படிதலினால் ஒரு விசுவாசியாகி தேவசித்தத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுக்கவில்லை. அடுத்ததாக, கிறிஸ்தவன் என்னும் பெயரை I பேதுரு 4:16 ல் நாம் வாசிக்கிறோம். **ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்** என்று.

கிறிஸ்தவன், பரிசுத்தவான், சகோதரன்/சகோதரி அல்லது சீஷன் என்னும் பெயர்களால் அழைக்கப்படுவது ஒரு சிலாக்கியமாகவும், பொறுப்பாகவும் இருக்கிறது. நாம் இப்பெயர்களுக்குத் தகுதியான வர்களாகக் காணப்படும்படி நம் பக்தி வாழ்வை நடத்துவோமாக! ✝



1932—2008

# சபையை முன்னேற்றுவோம்

## Let`s Get The Church On The March

***J.C. Choate***

எந்த ஒரு நற்செய்திப் பத்திரிக்கையை எடுத்துக் கொண்டாலும் சஒரு குறிப்பிட்ட சபை முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிடப்படுவது புதிதான ஒன்றல்ல. இதைத் தெரிந்து கொள்வதற்காக ஒவ்வொரு சபை அங்கத்தினருக்கும் பத்திரிக்கைகள் அனுப்பப்படுகின்றன. இது பாராட்டப்பட வேண்டிய விஷயம் தான். சபை வருகை உயர்ந்து கொண்டிருக்கிறது. புதிய ஆத்துமாக்கள் ஆதாயப் படுத்தப்படுகிறார்கள் ( முன்பு போல அடிக்கடி அல்ல) புதிய கட்டிடம் கட்டப்பட்டு கொண்டிருக்கிறது, ஐக்கிய கூடுகைக்காக புதிய கட்டிடம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவைகளெல்லாம் முன்னேற்றமாக அல்லது வளர்ச்சியாக பார்க்கப்பட்டாலும் கூட, இந்த முன்னேற்றம் ஆவிக்குரிய ரீதியாக இருப்பதில்லை. சபை சார்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் சந்திப்பு திட்டங்கள் ஏன் மிகவும் குறைவாக உள்ளது? எல்லா இடங்களிலுமுள்ள சபைகள் ஏன் வளர்ச்சியடையவில்லை?

நீங்கள் விரும்பும் எந்த ஒரு இடத்திற்கு வேண்டுமானாலும் சென்று அங்கே காணப்படும் கர்த்தருடைய சபைக்குப் போய் அங்கே விசாரித்தால் ஒன்று அல்லது இரண்டு சபைகள் தான் வளர்ந்த சபைகளாக இருக்கும். மற்றவைகளெல்லாம் கீழ் நோக்கித்தான் பயணித்துக் கொண்டிருக்கும். ஏன் இப்படி இருக்க வேண்டும்? ஏன் எலலா சபைகளும் வளர்ந்து கர்த்தருக்கென்று அதிகமாகச் செய்ய நாடக்கூடாது? ஏன் எல்லா சபைகளுமே முன்னேற்றம் அடையவில்லை?

சொந்த நாட்டில் சுவிசேஷப் பணியாக இருந்தாலும் சரி, வெளிநாட்டு ஊழியப் பணியாக இருந்தாலும் சரி எப்படி சிலர் ஊழியத்தைச் செய்கிறார்கள் தங்கள் சபை நிதியில் எவ்வளவு குறைவாக நற்செய்தி ஊழியத்தைச் செய்கிறார்கள், தங்கள் சபை நிதியில் எவ்வளவு குறைவாக மக்கள் சந்திப்பு திட்டத்திற்கு ஒதுக்குகிறார்கள். இதே திட்டத்திற்கு எப்படி தங்கள் அங்கத்தினர் களை குறைவாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நீங்கள் காணும் போது ஆச்சரியப்படுவீர்கள். என் வெளிநாட்டு சுவிஷேசப் பயணங்களில் நான் கண்ட மற்றுமொரு காரியம் சபையின் நிதியை அந்தந்த சபைகளுக்கே செலவு செய்வது. அப்படி செலவுச்செய்யும் பணம் கூட சபைக் கட்டிடம், ஐக்கிய பயணம், சபை அங்கத்தினர்களின் நலனுக்காக ஏதாவது ஒரு செயல் திட்டம் போன்றவைகளுக்காகத் தான் செலவழிக்கப்படுகிறது. இங்கே மக்கள்

இழந்து போன ஆத்துமாக்களை உடைய இவ்வுலகில் எல்லாவற்றையும்விட மிக அவசியமானது அனைத்து கிறிஸ்துவின் சபைகளும் வளர்ச்சி அடைவது தான். ஆயினும், வெறுமனே வளர்ச்சி அடைவது மாத்திரம் போதுமானதல்ல. சில சபைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆனால், உண்மையில் அவைகள் பின்னோக்கிப் போய் கொண்டிருக்கின்றன! சபையானது தரிசனத்தோடும் ஜாக்கிரதையான நோக்கத்தோடும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். சபையில் செயல்திட்டங்கள் சபையார் அவரவர் வசிக்கும் இடங்களிலும் அருகாமையிலும் அயல் நாட்டு ஊழியங்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளத்தக்க அவர்களை படிப்பிக்கவும் ஊக்கப்படுத்தவும் பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சுவிசேஷத்தை நம்முடைய தேசத்திற்கும், வானத்தின் கீழுள்ள எல்லா தேசத்திற்கும் கொண்டு செல்லும் நம்முடைய அர்ப்பணிப்பில் நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மேம்படுத்தப்பட வேண்டிய வேறு சில திட்டங்கள் என்ன?

சபையின் அங்கத்தினர்களை ஒன்றுத்திரட்டி வீடுவீடாகச் சென்று கைப்பிரதிகளைக் கொடுக்கலாம். சுவிசேஷக் கூட்டத்திற்கு ஜனங்களை அழைக்கலாம். சிறுவர்களை விடுமுறை வேதபாட வகுப்புக்கு அழைக்கலாம். இது போன்ற செயல்களை திரும்பத் திரும்பச் செய்வதால் சபை சமுதாயத்தில் எல்லோராலும் அறியப்படும்.

சபை அங்கததினர்களின் வீடுகளுக்கே சென்று, சுவிசேஷத்தை தனி நபர்க்கு எப்படி போதிக்கலாம் என்று பாடங்களை நடத்தலாம்.

பிரபலமான அங்காடிகளுக்கு முன்பாக மாத அடிப்படையில் நம் கைப்பிரதிகளை வேத பாடங்களை அங்காடியின் அனுமதி பெற்று வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தலாம்.

சபையில் வியாதியஸ்தர்கள், வயதானவர்கள் போன்றவர்களைக் குறித்து ஒரு பட்டியல் தயாரித்து ஒரு தன்னார்வக் குழுவை உருவாக்கி சபைக்கு வராதவர்களையும், தேவையில் இருப்பவர்களையும் போய் சந்திக்கச் செய்ய வேண்டும்.

❇ சபை மூலமாக சமுதாயத்திற்கு நற்கிரியைகளைச் செய்ய சபையில் உள்ள வாலிபர்களைப் பயன்படுத்தத் தீமானிக்க வேண்டும்.

❇ வெளிநாட்டு ஊழியப்பணிக்காக பொருளாதார உதவிகளைச் செய்யுங்கள். அந்த ஊழிய அறிக்கையை சபையாரோடு பகிர்ந்து கொள்ளுங்கள். கூடுமானால் நீங்கள் ஊழியத்திற்கு உதவி செய்யும் சபைகளுக்கு மூப்பர்களை அழைத்துச் சென்று காட்டும் போது அங்கே நடைபெறும் காரியங்களைக் குறித்த ஒரு தெளிவு கிடைக்கும். மேலும், ஊழியத்திற்கு உதவி செய்பவர்களுக்கு ஊழியத்தின் தேவைகள் குறித்தும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் குறித்தும் ஒரு புரிதல் ஏற்படும்.

கிறிஸ்தவத்தின் உண்மையான உணர்வை நாம் பிடித்துக் கொண்டு, நம் சுயநலத்தையும், சுயமையப்படுத்துதலையும் நம்மைவிட்டு அகற்றிப் போட்டால் நாம் சரியான பாதையில் பயணிப்பதை காண முடியும். இவ்வுலகப் பிரகாரமான காரியங்களுக்கு, மாம்சீக காரியங்களுக்கு, இவ்வுலகின் ஆடம்பரத்திற்கு, நமக்கு என்ன கிடைக்குமென்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டோம். மாறாக, தேவன், கிறிஸ்து, சபை. தேவனுடைய சித்தம், பரலோகம், நித்தியம் மனித ஆத்துமாக்கள் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். நாமெல்லாரும் இந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் ஆங்காங்கே ஒரு சில சபைகள் மட்டும் முன்னேறாது, எல்லா இடங்களிலும் உள்ள எல்லா சபைகளும் முன்னேறும்! அதன் பலன்களை உலகெங்கும் உள்ளவர்கள் உணர்வார்கள்! கர்த்தாவே, அந்த நாளை துரிதப்படுத்தும். ✝

# மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?

## Is There Remedy For The Mankind?

### *E.Z.Selvanayagam*

**நீ**திமானாகிய லோத்துவின் நாட்களில் சோதோம், கொமோரா பட்டணங்களில் நடந்த அக்கிரமங்களைக் கண்டும், கேட்டும் நீதியுள்ள தன் இருதயத்தில் வாதிக்கப்பட்டதாக வேதத்தில் வாசிக்கிறோம். [II பேது2 :7–8]. நாம் வாழுகிற இந்நாட்களில் காரியங்கள் அதைவிட மோசமாக நடந்து கொண்டிருப்பதை நாம் கண்டும் கேட்டும் செய்வதறியாது வாய் மூடி நிற்கிறோம்.

செய்தித்தாள்களை விரித்தாலும், வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகளைத் திருகினாலும் நாம் காண்பதும், கேட்பதும் என்ன? கொலை, கொள்ளை, கற்பழிப்பு, லஞ்சம், தீ வைப்பு, ஜாதிக் கலவரங்கள் போன்ற விரும்பத்தகாத செய்திகள்தான். இது ஏதோ குறிப்பிட்ட ஒரு நாட்டின் நிலவரம் என்று சொல்லி விட முடியாது. உலகெங்கிலும் இதுவே நிலை. விமானம் கடத்தல், தலைவர்கள் பணயக் கைதிகளாக்கப்படல், ஒரே நாட்டில் வாழும் வெவ்வேறு இனத்தவர்க்குள்ளோ வெட்டு, குத்துக்கள், படுகொலைகள், பொதுச் சொத்து நாசம் இவைகள் எல்லாம் அன்றாடச் செய்திகள்.

இப்படி நாள்தோறும் பெருகி வருகின்ற அபாயம்கள் நிறைந்த உலகத்தில் வாழ்வதைப் பற்றி பலவிதமான எண்ணங்கள் நமக்கு எழுவதுண்டு. அதில் ஒன்று; இப்படி நித்தம் நித்தம் பயத்தோடும், திகிலோடும் மரணத்தின் வாயிக்குள் போய் விட்டுப் திரும்பிக் கொண்டிருப்பதை விட ஒரேயடியாக இந்த உலகத்தை விட்டே நிரந்தரமாகப் போய் விடலாமா என்பது. ஆனால், அது பிரச்சனையைத் தீர்க்குமா? மேலும், அது ஒரு வகையில் கோழைத்தனம் என்று கூடச் சொல்லலாம். அடுத்தது, நிலைமையைச் சரி செய்யலாம் என்ற எண்ணத்தில் தலையிட்டு நாமும் சேர்ந்து பிரச்சனைகளுக்குள் மாட்டிக் கொள்வதாகும்.

பெரும்பான்மையோர் செய்கிற முயற்சிகள் எல்லாம் இந்த ரகத்தைச் சேர்ந்தது தான். ஒரு மரத்தின் ஆணிவேரைச் கண்டுபிடித்து அதை வெட்டியெறியாமல் கிளைகளை மட்டும் நறுக்கிவிட்டால் அது எப்படி மேலும் செழித்து வளருகிறதோ அதைப்போன்று பிரச்சனை

என்ன? அதன் தோற்றுவாய் எங்கே என்று புரிந்து கொள்ளாமல் மேலெழுந்தவாரியாய் அதைத் தீர்த்துவிட முயற்சிகள் மேற்கொள்ளப் படும் போது, பிரச்சனைகள் தீர்வதற்குப் பதிலாக பிரச்சனைகள் நாளுக்கு நாள் உபரியாகிக் கொண்டிருக்கிறன்றன. வாலை அமுக்கினால் தலை தூக்குகிறது தலையை அமுக்கினால் வால் தூக்குகிற கதைதான்.

ஒரு புறம், முக்கிய வல்லரசுகளின் தலைவர்கள் கூடி உச்ச கட்ட சமாதான மாநாடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் பயங்கரமான யுத்தங்கள் வெடித்து அநேக உயிர்கள் சேதம், சொத்து, உடமைகள் நாசமடைந்ததாக வாசிக்கிறோம். காரணம் என்ன? பிரச்சனை என்ன? அது ஏன் எப்படி உருவாகிறது என்பதை ஆய்ந்து அறியாமல் மேலெழுந்த வாரியான முயற்சிகளை மேற்கொள்வதே. அப்படியானால், பிரச்சனைகளின் ஆணிவேரை எங்கே தேடுவது? அதைக் கண்டுபிடிக்க பரிசுத்த வேதாகமத்துக்குத் தான் போயாக வேண்டும். ஏனெனில், அது வானத்தையும், பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்துப் பராமரித்து வருகிற ஒன்றான மெய் தேவ னாகிய கடவுளால் கொடுப்பட்ட அறிவுப் பெட்டகம். அப்போஸ் தலனாகிய பேதுரு ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டியவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது மன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுத் தப்பி, சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்படுகிறது என்று சான்றிதழ் வழங்குகிறார். (II பேதுரு 1:3-4).

அதே காலத்தில் வாழ்ந்த அப்போஸ்தலன் பவுல் என்பவர் ரோமாபுரியில் இயங்கி வந்த கிறிஸ்துவின் சபையாருக்கு எழுதும் போது, மக்கள் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போவதற்கும், உலகத்தின் தார்மீக நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போவதற்கும் என்ன காரணம் என்று சொல்லி, அதன் விளைவுகள் எப்படி இருக்கும், அது எங்குபோய் முடியும் என்று கூடச் சொல்லியிருக்கிறார். தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது என்று பீடிகை போடுகிறார். காரணம், மனுஷருடைய அவபக்தியினால் சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிறார்கள் (ரோமர் 1:18-20) அவர்கள் தேவனை அறிந்திருந்தும் அவரை தேவன் என்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்தரியாமலும் இருக்கிறார்கள். அதன் விளைவு மாந்தருடைய இதயம் இருளடைந்துவிட்டது. அதிலிருந்து உதிக்கிற அவர்களுடைய சிந்தனைகள் வீணும் உணர்வற்றதுமாயிருக்கிறது. (ரோமர் 1:21) அவர்களுடைய நினைப்பு தாங்கள் ஞானிகள் என்று. ஆனால் செயல்: பைத்தியகாரனுடையது. (ரோமர் 1:22).

அந்தப் பைத்திய நிலையில் அவர்கள் செய்த காரியங்கள் யாவை? 1) அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகியவைகளின் ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். (ரோமர் 1:23) அதற்குத் தேவன் கொடுத்த தண்டனை: அவர்களை அசுத்துத்துக்கு ஒப்புக் கொடுத்தார். (ரோமர் 1:23) (ரோமர் 1:24) அதன் விளைவு?1) தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்திக் கொண்டார்கள். 2) தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றினார்கள். 3) சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது, சேவித்தார்கள் (ரோமர் 1:25) அதன் விளைவு? 1) தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். 2) அவர்களுடைய பெண்கள் சுபாவத்துக்கு விரோதமாக விரகதாபத்தினாலே பொங்கித் தகாததைச் செய்தார்கள். 3) அவர்களுடைய ஆண்கள் ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்தார்கள். தற்காலத்தில் நாம் கேள்விப் படுகின்ற எய்ட்ஸ் நோய் போன்ற கொடிய வியாதிகள் அதன் விளைவுகள். அது மட்டுமல்ல இன்றைக்கு நாம் காண்கிற அனைத்து ஒழுக்கக் கேடுகள், வேசித்தனம், துரோகம், பொருளாசை, குரோதம், பொறாமை, கொலை, வாக்குவாதம், வஞ்சகம், வன்மம், புறங்கூறுதல் அவதூறு, தேவபகை, துராகிருதம், அகந்தை, வீம்பு, பொல்லாதவை களை யோசித்துப் பிணைக்கும் இயல்பு, பெற்றோருக்கு கீழ்ப் படியாமை, உணர்வற்ற தன்மை, உடன்படிக்கை மீறல், சுபாவ அன்பில்லாமை, இணங்காமை, இரக்கமின்மை (ரோமர் 1:26-31) ஆகியவைகள்.

ஒரு தோட்டத்தில் களை முளைத்து, முள் வளர்ந்து, மழை மாரியின்றி, பாங்கின்றி பாழடைந்து கிடக்கும் போது, அங்கே நற்கனிகளைத் தேடி அலைவது வீண் வேலை அன்றோ! முதலாவது களைகளை அகற்றி, முள், கல் பொறுக்கி, காடு திருத்தி, உழுது, பண்படுத்தி, நல்ல விதைகள் தூவி, நீர் பாய்ச்சி, உரமிட்டால் அல்லவா பயிர்கள் செழித்து வளர்ந்து கனி கொடுக்கும்? அது போல மேலே நாம் கண்ட தீக்குணங்கள் மாந்த உள்ளங்களிலிருந்து அகற்றப்பட்டு, மனதைப் பண்படுத்தி, நல்ல பண்புகளை வளர்த்து அவைகளைக் கடைப்பிடிக்கத் தூண்டினால் தானே நாடு நலம் பெறும். மாந்த இனம் ஒருவருக்கொருவர் இணக்கமுள்ளவர்களாக சமாதானமாக வாழுவார்கள். இவைகளையெல்லாம் செய்யாமல் வெறுமனே சமாதானம் ஏற்பட வாய்ப்பேது?

அப்படியானால், இந்த சமாதானம், மகிழ்ச்சி, இணக்கம் ஆகியவைகளை அடைய வழி யாது? ஒருவனுக்கு ஏற்பட்டிருக்கும் நோய் இன்னதென்று கண்டுபிடித்துச் சரியாகக் கூற ஒரு வைத்தியனுக்கு முடியுமானால் அந்த நோய்க்கான மருந்தும் அவனால் கொடுக்க முடியும் என்று நம்பலாமே! அதே போன்று இவ்வளவு துல்லியமாய் உஉலகின் அவலநிலையையும், மாந்த சமுதாயத்தின் சீர் கேடுகளையும் படம் பிடித்துக் காட்டுகிற பரிசுத்த வேதாகமத்தில் அதைத் தீர்த்து வைக்கும் வழிமுறைகளும் காணப்படுவது நிச்சயமல்லவா?

ஆகவே நண்பர்களே, இயேசுவின் அன்பான உருக்கமான அழைப்பை ஏற்றுக் கொண்டு அவரிடம் வாருங்கள். **வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.** நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது. (மத் 11:28-30)

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே – அன்பும் கரிசனையுமான அழைப்பு

நீங்கள் எல்லோரும், என்னிடத்தில் வாருங்கள் – பாரபட்சமற்ற உலகளாவிய அழைப்பு

உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் தருவேன் – வாக்குத்தத்தம் நிறைந்த அழைப்பு

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் – தன்னிலை விளக்க அழைப்பு

என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது – பயம் நீக்கும் அழைப்பு

இன்னும் ஏன் தாமதம்! நண்பர்களே! நிச்சயமான தீர்வு உறுதியாக்கப்பட்டிருக்கிறதே. விரைந்து வாரீர்! அவரன்றி இரட்சிப்பு இல்லை. அவரே வழி, அவரே ஜீவன். ✝

# கிறிஸ்தவ தகப்பன், கிறிஸ்தவ கணவன்

## Christian Father, Christian Husband

P.C. பிலேமோன் ராஜா

**ஒ**ரு கிறிஸ்தவ கணவன் மற்றும் தகப்பனுக்கு பைபிள் கூறும் ஆலோசனைகளை அறிய நம்மை ஆயத்தப்படுத்து வோம். தகப்பன்தான் குடும்பத்தை வழிநடத்த வேண்டும். இதற்கு, வேதாகமத் துணைக் கொண்டு 5 குறிப்புகளை அறிந்துகொள்வோம்.

ஒரு கிறிஸ்தவ தகப்பன், தான் நடக்காத தடத்தில் தன்னுடைய குடும்பத்தை வழி நடத்த முடியாது. குடும்பத்தை தேவனுடைய பரிசுத்த வழியில் நடத்த விரும்பினால், முதலாவது அந்த வழியில் அவர் நடக்க வேண்டும். 1தீமோ 4:16 உன்னைக் குறித்தும் உபதேசத்டதக் குறித்தும் எச்சரிக்கையாயிரு இவைகளில் நிலை கொண்டிரு. இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர் களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்.

குடும்பத் தலைவனாகிய என்னிடத்தில் குறைவுபடும் பரிசுத்தம் எனது குடும்பத்தாரிடத்திலும் நிச்சயம் வெளிப்படும். நம்முடைய பரிசுத்த வளர்ச்சி, நம் குடும்பத்தாரை கிறிஸ்துவில் வளர்த்தெடுக்கத் தூண்ட மிகப்பெரிய உத்வேகமாகும்.

தாவீதின் ஒழுங்கீனம் அவனது பிள்ளைகளையும் பாதித்தது. அவன் செய்த செயலை அவர்களும் செய்தனர் (2**சாமுவேல்** 12:10–12). ஆண்டவர் இயேசு, பரிசுத்தத்தை விரும்பு கிறவர்களாகவும் மற்றும் அதை செயல்படுத்துகிறவர்களாகவும் இருக்கிறவர்களே ஆசிர்வதிக்கப்பட்டவர்கள், என்றார். **மத் 5:8 இருதயத் தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்** பரிசுத்தமாயிருக்கும்படி நாம் அழைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். நம்மை குறித்த தேவசித்தமும் அது தான். 1**தெச** 4:3–7 **நீங்கள் பரி சுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவ னுடைய சித்தமாயிருக் கிறது. அந்தப்படி, நீங்கள் வேசி மார்க்கத்துக்கு விலகி யிருந்து. தேவனை அறியாத அஞ்ஞானி களைப் போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவன வன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டு கொள்ளும் படி அறிந்து; இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும். முன்னமே**

**நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்த படியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிகாட்டுகிறவராயிருக்கிறார். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.**

**ஒரு கிறிஸ்தவ கணவன் அல்லது தகப்பன் பேச்சிலும், சிந்தையிலும், செயலிலும் பரிசுத்தத்தை தனக்குள்ளும், தன் குடும்பத்திற்குள்ளும் கட்டி எழுப்புகிறவராக இருக்க வேண்டும். I தீமோ 2:8 அன்றியும், புருஷர்கள் கோபமும், தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்.**

II. **எதைக் கட்டுப்படுத்த முடியும் மற்றும் முடியாது என்பதை அறியுங்கள்:**

கணவன் மற்றும் தகப்பன்மார்கள், தங்களால் எந்தக் காரியத்தில் தன் குடும்பத்தை கட்டுபடுத்த முடியும் மற்றும் கட்டுப்படுத்த முடியாது என்பதை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். நம்மால் எல்லாரையும் எல்லாவற்றிலும் கட்டுப்படுத்த இயலாது. அப்படி பிறரின் இருதயத்தை கட்டுபடுத்த முடியும் என்று நினைப்பது அறிவான செயல் அல்ல. நமக்கு அப்படிப்பட்ட திறமை இல்லை. எரே 10:23 கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல வென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்.

நாம் நம் குடும்பத்தை விசுவாசத்தில் உற்சாகப் படுத்தலாம். நற்செயலுக்கு ஏவ அறிவுரை கூறலாம். விசு வாசமாயிருக்க பிள்ளை களுக்கும், மனைவிக்கும் போதிக்கலாம். ஆனால், அதை அவர்கள் தழுவிக் கொள்ளும் படி செய்ய இயலாது. ஒரு தகப்பன், குடும்பத்தில் தன் னுடைய கோபம், சுயநலம், மற்றும் பெருமையையும், நாவையும் கட்டுப்படுத்த முயலுகையில் குடும்பத்தினர் நன்றாக செயல் படுவார்கள். நாம் என்ன செய்ய முடியும்? என அறியுங்கள். யாக்கோபு தன் 12 பிள்ளைகளுடைய பலத்தையும் பலவீனத்தையும் அறிந்திருந்தார் (அதி 49:1-28).

III. **ஒவ்வொரு நிலையிலும் (துறையிலும், ஆளுகையிலும், பகுதியிலும்) கொடுங்கள்**

அநேக தகப்பன் மற்றும் கணவன்மார்கள் குடும்பத்தின் தேவை களுக்காக கொடுப்பது மட்டுமே முக்கியம் என எண்ணுகின்றனர்.

அதை தாண்டி அநேக காரியங்கள் இருக்கிறது. I தீமோ 5:8 ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் நேரத்தை, அன்பை, கனிவான பேச்சை, அக்கறையை ஆவிக்குரிய அனுபவத்தை அவர்களுக்கு கொடுப்பதும் முக்கியம்.

நல்ல புதிய உடை வாங்கிக்கொடுத்து, அழகு பார்க்கும் நீங்கள், ஆவிக்குரிய செயலை செய்வதிலும், செய்ய வைப்பதிலும் உங்கள் பங்கு உண்டு என்பதை உணர்ந்து, வீட்டில் தினசரி வேதம் உண்டு என்பதை உணர்ந்து, வீட்டில் தினசரி வேதம் வாசித்தல், பாடுதல், ஜெபிப்பதற்கு வழிநடத்துதல் போன்றவற்றை செய்யுங்கள். நீதி 22:6 பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதரடவயதிலும் அதை விடாதிருப்பான்.

மகிழ்ச்சியுடன், குடும்பத் தலைவராய் சபையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் வழிநடத்தி (Lead) சென்று, சபை கூட்டத்திற்காக சேவை செய்து, உங்கள் வீடுகளில் முடிந்த அளவு விருந்தோம்பல் நடத்தி, ஜெபித்து, வேதம் படித்து, வேதம் பற்றி பேசி பிறகு உணவு உண்ணும் பழக்கம் பழகுங்கள்.

பிள்ளைகளுக்கு உணவு, உடை தந்துவிட்டதால் தலையாய வேலை முடிந்து விட்டதாக நினைவிட வேண்டாம். அவர்களுக்கும் ஆவி, ஆத்துமா, சரீரம் (உடல்) உண்டு. அதற்கும் அடிப்படை தேவைகளை நீங்கள் தானே ஏற்படுத்தி தர வேண்டும்.

IV. **மனத்தாழ்மையை பயிற்சி செய்யுங்கள்:**

உலகப் பிரகாரமான வழி நடத்துனருக்கும் (Leadership) அவர்களின் பார்வைக்கும். கிறிஸ்தவ வாழ்வில் வழி நடத்துனருக்கும் (christian Leadership)அவர்களின் பார்வைக்கும், பெரிய வேறு பாடு உண்டு. முதலாவதில் (உலகத்தில்) வேலைக்காரர்கள் தேவை;

பிந்தியதில், வழிகாட்டியே தலைவனோ] வேலைக்காரனாக செயல் படுவது. மிகப்பெரிய வேறுபாடு மத் 20:26 உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரிவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன்.

தகப்பனே, கணவனே! நீர் தான் வீட்டின் மிகப்பெரிய வேலைக்காரன். கிறிஸ்து சபைக்காக வேலை செய்தாரே, இதைவிட வேறு என்ன முன் மாதிரி வேண்டும்? எபே 5:25,26 புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதைத் திரு வசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்கு கிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

**V. மகிழ்ச்சி மற்றும் நன்றி செலுத்துவதில் நிலைத்து பற்றிக்கொண்டிருங்கள்:**

ஒரு குடும்பத்தலைவன் என்பவர் தன் குடும்பத்தை கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக இருப்பதிலும், நன்றி செலுத்துதலிலும் நிலைத் திருக்கச் செய்ய வேண்டும். தேவனிடத்தில் நன்றியும் மகிழ்ச்சியும் உள்ள தகப்பனால் அல்லது கணவனால் மட்டுமே இது சாத்தியமாகும். ஏனெனில், அவர் தன் வாழ்வின் நன்மையெல்லாம் தேவனாலே வந்திருக்கிறது என்பதை உணர்ந்திருப்பார். யாக் 1:17 நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதா வினிடத்திலிந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.

கர்த்தரிடமிருந்து மகிழ்ச்சியை பெற்ற ஒரு கணவனால் அல்லது தகப்பனால், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பதே பெலன் என்று குடும்பத்தினரை ருசிக்க வைக்காமல் இருக்க முடியாது! [ நெக 8:10]. இது உங்கள் வீட்டை ஓர் அழகிய உருவத்திற்கு கொண்டு வர ஆரம்பிக்கும் மிகப்பெரிய இடமாகும். ✝

## கர்த்தரைச் சார்ந்துகொண்ட யூதபுத்திரர்

## The Children Of Judah Relied On The Lord God

**B. Arjunan**

சாலொமோனுக்குப் பின்பு ராஜ்யபாரம் இரண்டாக பிரிந்து அதில் யூத ராஜ்யத்திற்கு சாலொமோனின் குமாரன் ரெகொபெயாம் ராஜாவானான். இஸ்ரவேலின் ராஜ்யத்திற்கு யெரொபெயாம் ராஜாவானான். இவர்கள் இருவருக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. இதில் யூத புத்திரர்கள் கர்த்தரை சார்ந்து கொண்டார்கள். அப்பொழுது அபியா யூதாவின் மேல் ராஜாவாக இருந்தான். ''அபியா தெரிந்து கொள்ளப்பட்ட நாலுலட்சம் பேராகிய பராக்கிரம சேவகரின் இராணுவத் தாரை யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணினான்; யெரொபெயாம் தெரிந்துகொள்ளப்பட்ட எட்டுலட்சம் பேராகிய பலத்த பராக்கிரமசாலிகளை அவனுக்கு எதிராக யுத்தத்திற்கு நிறுத்தினான்'' [2நாளா.13:3]. யூதாவின் மக்கள் 4லட்சம், இஸ்ரவேலிலோ 8லட்சம் இரட்டிப்பாக இருக்கிறது. இதைக்கண்டு யூதாவின் ராஜா சோர்ந்து போகவில்லை. அவன் கர்த்தரை நம்பினபடியால் அவர்களுக்கு ஒரு போதனையைக் கொடுக்க ஆரம்பித்தான். சவுல் தாவீதின் மீது கைபோட யோசித்தான். ஏனென்றால், அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்ற ஒரே காரணத்திற்காக சவுலின் மீது கைபோட தயங்கினான். அதைப்போல இஸ்ரவேலும் தேவனுடைய ஜனங்களே பிரிந்து போய்விட்டார்கள் என்ற ஒரே காரணத்தை மனதில் கொண்டு, யூதாவின் ராஜாவாகிய அபியா அவர்களுக்கு ஒரு போதனையைக் கொடுத்தான்.

அப்போதனையென்னவென்றால்; ''...அபியா எப்பீராயீம் மலைத்தேசத்திலுள்ள செமராயீம் என்னும் மலையின்மேல் ஏறிநின்று; யெரொபெயாமே எல்லா இஸ்ரவேலரே கேளுங்கள். இஸ்ரவேலை என்றைக்கும் ஆளும் ராஜ்யபாரத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையாய் கட்டளையிட்டதை நீங்கள் அறியீர்களா?... இதோ, தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்குகிற

ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது என்றான்'' [2நாளா.13:4-12].

யூதா ஜனங்கள் கர்த்தருடைய கற்பனையின்படி நடக்கிறவர்களாக இருந்தார்கள். இஸ்ரவேலர் யுத்தத்திற்கு எத்தனித்தார்கள் கர்த்தருடைய வார்த்தையை புறம்பாக்கிப் போட்டார்கள். அபியாவின் ஆலோசனைக்கு செவிகொடாமற் போனார்கள். தேவனுடைய வார்த்தைகளை புறக்கணிக்கிறவர்களை தேவனும் புறக்கணித்துப் போடுவார். ஆகையால், ''அபியாவும் அவனுடைய ஜனங்களும் அவர்களில் மகா சங்காரம் பண்ணினார்கள்; தெரிந்துகொள்ளப்பட்ட ஐந்துலட்சம்பேர் இஸ்ரவேலிலே வெட்டுண்டு விழுந்தார்கள்'' [2நாளா.13:17]. இந்த ஐந்துலட்சம் பேரும் அபியாவின் வார்த்தை க்குச் செவிகொடுத்திருப்பார்களேயானால் இவர்கள் மரணத்தை சந்தித்திருக்கமாட்டார்கள். அநேகர் தங்களுடைய சிந்தனை களினாலே வீணராய் போய்விடுகிறார்கள். தேவன் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களோடு இருக்கிறார். அவர்கள் செய்வதை வாய்க்கப் பண்ணுகிறார். இன்றைக்கு கர்த்தருடைய நாமத்தை மட்டும் தரித்துக்கொண்டு அநேகர் இஸ்ர வேல் மக்களைப்போல பிரிந்துபோய் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட சபையை அடையாளம் கண்டுகொண்டு மனந்திரும்ப வேண்டும். இல்லையேல் இஸ்ரவேல் மக்களைப்போல அழிந்துபோவார்கள். தேவன் தமது சித்தத்தை நாம் தெரிந்துகொண்ட ஜனங்கள் மத்தியில் நிறைவேற்றுகிறார். ஆபிரகாம் என்ற தேவமனிதனைத் தெரிந்துகொண்டு அவனுடைய சந்ததியில் கிறிஸ்துவை பிறக்கச் செய்தார். அவரே நம்மை நித்தியமானவருக்கு நேரே வழிநடத்தக்கூடியவராயிருக்கிறார். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். ஆம், அன்பானவர்களே இயேசுவை அல்லாமல் நாம் பிதாவை சந்திக்க முடியாது. பிதாவானவர் இயேசுவை உலகத்தில் தெரிந்துகொண்டு, பூர்வ உலகத்தையும் இரட்சிக்கத் திட்டம் கொண்டார்.

இந்த யூத ஜனங்கள் இஸ்ரவேலை மேற்கொண்டதற்கான காரணம்; அவர்கள் தேவனை நோக்கி ஜெபித்தார்கள் என்று

தியானித்தோம். மேலும், ‘‘அப்படியே இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே தாழ்த்தப்பட்டார்கள்; யூத புத்திரரோ தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொண்டதினால் மேற்கொண்டார்கள். அபியா யெரொபெயாமைப் பின்தொடர்ந்து, அவனுக்கு உண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும் எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பெரோனையும் அதின் கிராமங்களையும் பிடித்தான்’’ (2நாளா.13:18,19). யூதா ஜனங்கள் கர்த்தரை சார்ந்து கொண்டார்கள். சார்ந்துகொள்வது என்பது அவரோடு ஒருமித்திருப்பது. அவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்வது. தங்களுடைய எண்ணத்தை தூக்கி எறிந்துவிட்டு கர்த்தருடைய ஆலோசனையின்படி நடப்பது. அநேகர் கர்த்தரை சார்ந்துகொள்ளாமல் தங்களுடைய சுய எண்ணத்தில் பிடிவாதமாக இருந்துகொண்டு கெட்டுப்போகிறதை நாம் காண்கிறோம். பிசாசு ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டு நம்மை மோசம் போக்கிவிடுவான் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ள வேண்டும். யூதாவும் இஸ்ரவேலும் கர்த்தருடைய ஜனங்கள்தான். இதில் யூதாவில் இருக்கிறவர்களாக இருந்தாலும் நாம் கர்த்தரைத்தானே ஆராதித்து வருகிறோம் என்று சொல்லியிருப்பார்கள். ஆனால், இந்த இரு கூட்டத்தாரில் கர்த்தர் தெரிந்துகொண்ட கூட்டம் எது? எந்த கூட்டத்தார் கர்த்தருடைய சித்தத்தை செய்தார்கள் என்று நாம் பார்க்கும்போது யூதாவின் ஜனங்கள் தேவனுடைய சித்த்தை நிறைவேற்றினார்கள். அதை தேவன் தெரிந்துகொண்டார். ஏனெனில், அவர்கள் தாவீதின் வழியில் வந்தவர்கள். இஸ்ரவேலில் யெரொபெயாமோ தன் இச்சையில் வந்தவன். தேவனுடைய வார்த்தைகளைப் புறம்பாக்கிப்போட்டவன். அவனை அநேகர் சார்ந்திருந்தாலும் இறுதியில் அவர்களை யுத்தத்தில் அழிந்துபோகும்படியாக கர்த்தர் ஒப்புக்கொடுத்தார் எனக் காண்கிறோம்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, கர்த்தரை சார்ந்துகொண்ட யூதா புத்திரரைக்குறித்து இன்றைய நாள் செய்திவேளையில் தியானித்தோம். தேவன் அவர்களோடு இருந்து யுத்தம் பண்ணினார். தங்களிலிருந்து பிரிந்துபோன இஸ்ரவேலுக்கு நல்ல பாடம் புகட்டினார். ஆகையால், தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றம் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர் என்பதை புரிந்துகொண்டு தேவனுடைய ஜனங்களோடு தேவனை ஆராதிக்க முயற்சியுங்கள்.

மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரிய சபைகளை விட்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் புதிய யுகத்தில், புதிய ஏற்பாட்டு காலத்தில் துவங்கப்பட்ட கர்த்தருடைய சபையை அடையாளம் கண்டுகொண்டு அதில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். அந்த சபையை கர்த்தர் பரலோகத்தில் உள்ள பிதாவிடம் ஒப்புக்கொடுக்க **இதோ, சீக்கிரம் வருகிறேன் என்கிறார்.** அவருடைய வருகைக்குள்ளாக நீங்கள் தேவன் தெரிந்துகொண்ட ஜனங்களோடு உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் நம்பிக்கை எல்லாம் வீணாய்போய்விடும்.

**யூதா ஜனங்களில் இறுதியாக வந்த இராஜா இயேசுவா?**

ஆம், இயேசு இராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். ''பிலாத்து அவரை நோக்கி: நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன். இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்'' (யோவா.18:37). இயேசு பரலோக ராஜ்யத்தின் ராஜாவாக இன்றும் வீற்றிருந்து ஆளுகை செய்கிறார். அவர் கர்த்தருடைய சபையின் தலைவராயிருக்கிறார். அவரை தேவன் தெரிந்து கொண்டார். இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தார். ஆகையால், இவருக்குச் செவி கொடுக்க வேண்டும். சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.

நீங்கள் சத்தியத்தை அறியக்கூடிய ஜனங்களாக இருப்பீர்கள் என்றால் இவருக்குச் செவிகொடுத்து இவர் ஏற்படுத்தின மந்தையில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் என்ற வசனத்தின்படி இன்று ஒரே மந்தை இருக்கிறது. ஒரே மேய்ப்பனாகிய இயேசு இருக்கிறார். இவரே உலகத்தில் தேவனால் அனுப்பப்பட்டவர் பாவத்தைப்போக்கும் தேவ ஆட்டுக்குட்டி இவருடைய இரத்தம் சிந்துதலினாலே பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. ஆகையால், அன்பானவர்களே, ஆண்டவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து உங்களுடைய பாவங்கள் போக கழுவப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம். ✝

# எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க...

## That You May Prosper In All Things and Be In Health

**சகோ. பென்னி மார்ட்டின்**

பிரியமானவர்களே! இவ்வுலகில் நாம் ஒருவருக்கொருவர் நலம் விசாரிப்பதை வழக்கமாக, பழக்கமாகக் கொண்டிருக்கிறோம். நாம் நம் உறவினர்களையோ அல்லது தெரிந்தவர்களையோ நேரில் காணும்போதோ தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போதோ நலம் விசாரிக்கிறோம். அப்படிச் செய்யும்போது பெரும்பாலும் நாம் உடல்நலம் பற்றித்தான் விசாரிக்கிறோம். மனநலம் பற்றி விசாரிப்பதில்லை. ஒருவர் நோயே இல்லாமல் இருப்பது மட்டும் அவர் ஆரோக்கியமாக இருக்கிறார் என்பதற்கான அடையாளமோ அல்லது அளவுகோலோ அல்ல. இன்றைய நாட்களில் பலர் குடும்பச்சூழல், சுற்றுச் சூழல் காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். உடல்நலம் குன்றிவிட்டால் மருந்து மாத்திரைகள் என பல வழிகள் உண்டு. ஆனால், மன நலம் குன்றிவிட்டால் வழி என்ன? தேவன் வழியை வேதாகமத்தில் மாத்திரமே வைத்திருக்கிறார். மனிதனுக்காக எழுதப்பட்ட மிகச்சிறந்த புத்தகம் வேதாகமம்தான். இதை வேதாகமத்தின் வார்த்தைகள் மறுபடியும் நிரூபிக்கின்றன. வேதாகமம் மனித இனத்துக்கான வழிகாட்டி புத்தகமாகத் திகழ்ந்து வருகிறது. அதுவும் குறிப்பாக, பிலிப்பியர் நிருபத்தில் சொல்லப்பட்டுடிருக்கும் காரியங்களைவிட மனித நலனுக்காக வேத வசனங்கள் வேறெங்கும் இல்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் இந்நிருபத்தை தனக்குப் பொருளாதார நன்மைகளை கொடுத்தனுப்பிய பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு நன்றி செலுத்துவதற்காக எழுதினார் (பிலிப் 1:45;4:18). அச்சபையார் எப்பாப்பிரோதீத்து மூலமாக பொருளாதார உதவிகளை சிறையிலிருந்த பவுலுக்குக் கொடுத்தனுப்பினார்கள். ஆனால், எப்பாப்பிரோதீத்து பிலிப்பி பட்டணத்திலிருந்த சபையைப் பற்றிய கூடுதல் தகவல்களையும் கொண்டு வந்தார். அப்பட்டணத்து சபையார் பவுலின் சிறைவாசத்தைக் கேள்விபட்டு அதிகமாகக் கவலைப்பட்டார்கள். பவுல் தனக்கு சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்றுஅவர்களுக்குத் தெரியப்படுத்தியதன் மூலமாக அவர்களை ஆறுதல்படுத்தினார்.

மேலும், அவர்கள் தேவ சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளச் செய்ய வேண்டிய காரியங்களை பிலிப்பியர் நான்காம் அதிகாரத்தில் விளக்குகிறார். அதிலிருந்து நாம் மனநலம் பற்றி தேவன் சொல்லியிருக்கிற நான்கு வகையான பயிற்சிகளைக் கற்றுக் கொள்ளலாம்.

**I. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும்**

இது மனரீதியான ஓர் உடற்பயிற்சியாகும். ஒரு கிறிஸ்தவன் மகிழ்ச்சியாயிருந்து தேவனிடத்தில் எல்லாவிதத்திலும் நன்றி யுள்ளவனாயிருக்க பல காரணங்கள் உண்டு. கிறிஸ்து நமக்காகச் செய்த தியாகங்கள் நம்மைத் தூண்டி மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும். ஆனால், உலகக் கவலைகளும் மனச்சோர்வுகளும் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய மகிழ்ச்சியை மங்கச் செய்து விடுகின்றன. இவ்வுலகில் ஒருவர் சோகத்தின் உச்ச கட்டத்திற்குப் போகும் போது மனோதத்துவ நிபுணர்கள் அவர்கள் சிரித்து மகிழ்ச்சி யாயிருக்க வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்குகிறார்கள். இந்த ஆலோசனை ஆரம்பத்திலேயே வேதாகமத்தில் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மனோதத்துவ நிபுணர்கள் புதிதாக கண்டு பிடித்துவிட்டோம் என்று மெச்சிக் கொள்ள ஒன்றுமில்லை.

**II. நம் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரியவேண்டும்**

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்திரிப்பார்கள் என்று மலைப்பிரசங்கத்தில் நாம் மலைத்துப் போகத்தக்க நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார். கோபத்தில் யோசனையின்றி ஒரு நிமிடத்தில் செய்யும் செயல் ஒரு மனிதனுடைய வாழ்க்கையையே வியர்த்தமாக்கிவிடுகிறது. நாம் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் (பிலிப்பியர் 4:11). நாம் எதற்கும் பதட்டப்படாமல், கோபப் படாமல், சாந்தமாக இருக்க வேண்டு மென்றுதான் மனோதத்துவ நிபுணர்களும் ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள். இதுவும், அதாவது இந்த ஆலோசனையும் தேவனாலே முன்பே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஒன்றுதான்.

**III. நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் இருக்க வேண்டும்**

இது மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் நாம் செய்ய வேண்டிய உடற்பயிற்சியாயிருக்கிறது. கவலை என்பது நம் வாழ்க்கைப் பயணத்தில் அழையா விருந்தாளியாக வந்து நம்மை அலைக்கழித்து, நம்மை நிலைகுலையச் செய்கிறது. இவ்வுலகில் நாம் வாழத் தேவையானவைகள் எவைகள் என்பது நம்மை விட தேவனுக்குத்

தான் நன்றாகத் தெரியும். முதலாவது, நாம் தேவனுடைய ராஜ்ய த்தையும்,அவருடைய நீதியையும் தேடும் போது தேவைகளை தேவன் சந்திப்பார் என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் ( மத்தேயு 6: 25–34) தேவ காரியங்கள் என்று வரும்போது நாம் தேவ வசனங்களைத் தியானிக்கலாம்,நோயாளிகளைப் போய் சந்திக்கலாம். தேவையில் உள்ளவர்களுக்கு தேடி போய் உதவி செய்யலாம். இவ் விதமாக பட்டியல் நீண்டுகொண்டேயிருக்கும். இன்று மனோதத்துவ நிபுணர்கள் மனச்சோர்வு ஏற்படும்போது, ஏதாவது ஆக்கப் பூர்வமான செயல்பாடுகளில் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை வழங்குகிறார்கள். இதுவும் தேவன் பல நூற்றாண்டு களுக்கு முன்பே வேத வசனங்களில் வைத்திருக்கிற ஆலோசனை களைத்தான் எதிரொலிக்கிறது.

**IV. நம் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.**

நம் வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படும் போது நம் நண்பர்களிடம் தெரியப்படுத்துகிறோம், நம் உறவினர்களிடம் தெரியப்படுத்துகிறோம். அதனால் பிரச்சனைகளுக்கு தீர்வு உண்டாவதில்லை. மாறாக, பிரச்சனை நீண்டு கொண்டே தான் போகிறது. அப்படியே தீர்வு உண்டானாலும் அது பக்க விளைவுகளை உண்டாக்குகிற தீர்வாகத்தான் இருக்கும். மனோத்தத்துவ ரீதியாக நம் கவலைகளை, பிரச்சனைகளை நமக்குள்ளேயே அடக்கி வைக்காமல் பிறரிடம் பகிர்ந்து கொள்வது, தெரியப்படுத்துவது பாரத்தை குறைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், யாரிடம் தெரியப்படுத்துகிறோம் என்பது தான் முக்கியம். சில வேளைகளில், நம் பிரச்சனைகளை பிறரிடம் தெரியப்படுத்தும் போது அது மற்றுமொரு மிகப்பெரிய பிரச்சனைக்கு வழிவகுத்து விடுகிறது. எனவே, தான் நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து நம் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும், அப்போது நல்ல தீர்வு கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் பாரம் இறங்கி விடுகிறது, குறைந்த பட்சம் குறைந்து விடுகிறது. இன்றை நாட்களில் மனநலம் என்பது உலக மக்களால் அதிகமாகப் பேசப்படும் விசயமாக இருக்கிறது. மனநலத்தை மேம்படுத்த, மொத்த சொத்தையும் விற்று, மனோதத்துவ நிபுணர்களை நோக்கி மக்கள் ஆட்டு மந்தைப் போல் படையெடுத்துச் செல்வது விந்தையாய் இருக்கிறது. ஆனால், மனநலத்திற்காக அதன் மேம்பாட்டிற்காக தேவன் நம்முடைய வல்லமையுள்ள வார்த்தைகளில் வைத்திருக்கிற ஆலோசனைகளை ஏற்று நடந்தால் மனநலமும் மேம்பட்டு, நம் ஆத்துமாவுக்குத் தேவையான ஆகாரமும் தங்கு தடை யின்றி கிடைத்து நம் ஆத்துமா வாழ்வது போல் நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்போம் (III யோவான் 2).

✝

**தேவன்**

# உலகிலேயே மிகவும் அபாயகரமான பெண்

# The Most Dangerous Women in The World

Stan Mitchell

இங்கிலாந்து தேசத்திலேயே மிகவும் அபாயகரமான பெண் இவர்தான் என்று ஒரு முறை ஹிட்லர் சொன்னார். யார் அந்தப்பெண்? அவள் வேவு பார்க்கும் பெண்ணா? பயங்ரமான ஆயுதங்களை கண்டுபிடிக்கும் அணுவிஞ்ஞானியா?

இப்பெண் ஹிட்லர் கோரிங், ஹிட்லர் மற்றும் மெங்கலே போன்ற பயங்கரமான நபர்களை விட அதிக நாட்கள் வாழ்ந்தவர். அதேபோல் சில நியாயமான காரியங்களுக்கு தோள்கொடுத்து அவைகளுக்காக நின்ற சர்ச்சில், ரூஸ்வெல்ட், மண்டகோமல், மற்றும் மெக் ஆக்தர் போன்றவர்களும் மரித்து நீண்டகாலம் ஆகிவிட்டது. அநேகமாக அமெரிக்கர்களும், பிரிட்டன் நாட்டின் புதிய தலைமுறையினரும் அந்த இருண்ட நாட்களில் இப்பெண் எவ்வளவு முக்கியமானவராக இருந்தார் என்பதை மறந்து விட்டார்கள்.



ஹிட்லரின் படைவீரர்கள் லண்டன் வானில் குண்டு மழையைப் பொழிந்து அந்த இரவை வெளிச்சமாக்கினார்கள். லண்டன் வாசிகள் புகலிடங்களில் போய் ஒளிந்து கொண்டார்கள். அந்த இரவிலே பக்கிங்காம் அரண்மனையும் தாக்குதலுக்குள்ளானது. அந்த அரண்மனைக்குள்ளே இரண்டு இளவரசிகள் இருந்தார்கள். எலிசெபத் ( இந்த எலிசபெத்தான் பின்பு இரண்டாம் எலிசபெத் மகாராணியானார்). மற்றொருவர் மார்க்ரேட் என்பவர்கள். அடுத்த நாளில், எரிந்து போன சுவர்களை பார்வையிட்ட பத்திரிகையாளர்கள் எல்லோருடைய மனதிலும் எழுந்த ஒரு கேள்வியைக் கேட்டார்கள்: ராஜ குடும்பம் தங்கள் பாதுகாப்புக்காக லண்டன் மையப்பகுதியிலிருந்து அந்த இளவரசிகளை அப்புறப்படுத்தியிருக்கலாமே என்று. ஆனால், அந்த மகாராணி அம்மாவின் பதில் யாரும் எதிர்பாராத ஒன்றாக இருந்தது. நான் வெளியேறும் வரை பிள்ளைகளும் வெளியேறமாட்டார்கள். இவர்களுடைய தகப்பன் வெளியேறும் வரை

நானும் வெளியேற மாட்டேன். ராஜா எந்நிலைமையிலும் நாட்டை விட்டு வெளியேற மாட்டார் என்றார்.

அந்நேரத்தில் எலிசபெத் ராணி அம்மாதான் நாட்டிற்கு மிக அவசியமானவரா இருந்தார். பிரஜைகளோடு எதற்கு கஷ்டத்தை அனுபவிக்க வேண்டும் என்று பலர் கேள்விகேட்டிருப்பார்கள். அந்த சோதனைகளையெல்லாம் துச்சமாக நினைத்துவிட்டார் மகாராணி எலிசபெத். மகாராணியாக இருந்த போதிலும் தன் பிள்ளைகளை அதிகம் நேசித்தபடியால் அந்த அரண்மனையை விட்டு வெளி யேறியிருக்கலாம். அரண்மனை மீது குண்டு மழை பொழிந்து அவ்விடம் புகை மண்டலமாக காட்சியளித்த போதிலும் ராஜ குடும்பம் லண்டனை விட்டு வெளியேறாமல் அரண்மனையிலே தங்கிவிட்டார்கள்.



அப்படியாக, இந்த ஒட்டு மொத்த உலகமும் பாவத்தினாலும், பகையினாலும் எரிந்து கொண்டிருந்த போது தேவன் நம்முடைய குமாரனுக்கு பரலோகத்தில் பாதுகாப்பை கொடுத்திருக்க முடியும். ஆனால், தேவன் அப்படிச் செய்யவில்லை. பரலோகத்தின் பொக்கிசமாகிய இயேசு கிறிஸ்து மனிதனாக அவதரித்து, தாழ்மைப்படுத்தப்பட்டு மனித இனத்துக்குரிய பாடுகளையெல்லாம் சந்தித்தார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அழுக்குப் படிந்த பாலஸ்தீனத்தின் தெருக்களில் நடந்தார். அவருக்கு தலை சாய்க்க இடமில்லை. அதன் பின்பு மனித இனத்துக்குப் பொதுவான மரணத்தையும் அவர் ருசி பார்த்தார். அவர் எரிந்து கொண்டிருக்கும் இப்பூமிக்கு வந்தபடியால் எல்லா மனிதர்களுக்கும் உண்டான உணர்வுகள் அவருக்கும் இருந்தன. இதன் காரணமாக சக மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நம் பாடுகளையும் அறிந்து கொண்டார். சாத்தானுடைய கண்ணோட்டத்தில் இது வரலாற்றில் இயேசு கிறிஸ்துவை மிகவும் அபாயகரமான மனிதனாக்குகிறது!

ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (எபிரெயர் 2:18). ✝

## சாட்சியங்கள்

## சங்கீதம் 19:1-3

## Psalm 19: 1-3

**வா**னங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது. இரவுக்குஇரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவர்களுக்குப் பேச்சுமில்லை வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை.

இப்பூமியானது அதின் அச்சில் மணிக்கு சுமார் 1000 மைல்கள் வேகத்தில் சுற்றுகிறது. பூமி மணிக்கு 100 மைல்கள் வேகத்தில் சுற்றினால் நம்முடைய இரவுகளும், பகல்களும் நீளமானதாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையில் நம் கோளாகிய பூமி ஒன்று எரிந்துவிடும் அல்லது உறைந்துவிடும். இப்படிப்பட்ட தட்பவெட்பம் நிலவினால் தாவரங்களால் உயிர் வாழ முடியாது.

இப்பூமி சந்திரனைப் போல் சிறிதாக இருந்தால் ஈர்ப்பு சக்தி பெலவீனமாக இருப்பதால் மனிதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அது உதவாது. ஆனால், பூமி வியாழன், சனி அல்லது யுரான்ஸ் போன்று பெரிய கோள்களாகயிருந்தால் மிதமிஞ்சிய ஈர்ப்பு சக்தியின் காரணமாக மனித இயக்கம் கிட்டத்தட்ட அசாத்தியமாகி விடுகிறது

இப்பூமி வெள்ளிக் கிரகத்தைப் போல் சூரியனுக்கு அருகிலிருந்தால் நம்மால் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளவே முடியாது. அதேபோல் பூமி செவ்வாய்க் கிரகத்தைப் போல் மிக தொலைவில் இருந்தால் உலகின் வெப்பமான பகுதிகளில் கூட கடுங்குளிர் நிலவும்.

இப்பூமியிலுள்ள சமுத்திரங்கள் இப்போதிருக்கின்ற கன அளவை விட பாதியாக இருக்குமானால் நாம் இப்போது பெறுகின்ற மழை அளவில் நான்கில் ஒரு பங்கைத் தான் பெறுவோம். அதேபோல் சமுத்திரங்கள் இப்போதிருக்கின்ற கன அளவில் எட்டில் ஒரு பங்கு அதிகமாகயிருக்குமானால் ஆண்டு சராசரி மழையளவு நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டு, இப்பூமி மனிதர்களுக்கு வாழத்தகாத வெள்ளக்காடாக மாறிவிடும்.

தண்ணீரானது –32 **Fahrenheit** உறைந்து பனிக்கட்டியாகி விடுகிறது. பூமியில் இதே தட்பவெட்ப நிலை நீடித்தால் சமுத்திரத்திலுள்ள தண்ணீரெல்லாம் உறைந்து பனிக்கட்டி யாகவிடும். இப்பூமி எப்போதும் பனிக்கட்டி குவியலாகத் தான் காணப்படும். இப்படி கடல்நீர் உறைந்து பனிக்கட்டியாக மாறாதபடி தேவன் அதில் உப்பைப் போட்டு வைத்திருக்கிறார். ✝

## தேவனுடைய வார்த்தை

# வார்த்தையின் ஏழு அதிசயங்கள்

# Seven Wonders Of The Word

Charles Pugh III

**ந**ம்மில் பெரும்பாலானோர் உலகின் ஏழு அதிசயங்களைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்போம். பலர் வார்த்தையின் (வேதாகமத்தின்) அதிசயங்களை கேள்விப்பட வேண்டும். சங்கீதக் காரன் உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும் படிக்கு என் கண்களைத் திறந்தருளும் என்று ஜெபித்தார் (சங்கீதம் 119:18). மறுபடியும் சங்கீதக்காரன் உம்முடைய சாட்சிகள் அதிசய மானவைகள் என்று அறிவித்தார் (சங்கீதம் 119:129). நான் கீழ்க்காணும் வார்த்தையின் ஏழு அதியங்களால் அதிகமாக ஈர்க்கப்பட்டிருக்கிறேன்.

**1. அது ஏவப்பட்டதின் அதிசயம்!**



வார்த்தையின் பகுதியில் மட்டுமல்ல – அதன் எண்ணங்கள் மட்டுமல்ல – வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது (II தீமோத்தேயு 3:16). வார்த்தையின் சிறு எழுத்தும், எழுத்தின் உறுப்பும் ஏவப்பட்டிருக்கிறது. (மத்தேயு 5:18)

**2. அது உருவாக்கப்பட்டதின் அதிசயம்!**

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம் திடீரென உருவாகவில்லை, ஒட்டுமொத்த வேதாகமும் உருவாவதற்கு சுமார் 1600 வருடங்கள் பிடித்தது. ...கற்பனையின் மேல் கற்பனையும், பிரமாணத்தின் மேல் பிரமாணமும் இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள் ( ஏசாயா 28:10).

**3. அது இணைக்கப்பட்டதின் அதிசயம்!**

வேதாகமம் 66 புஸ்தகங்களை உள்ளடக்கிய ஒரு நூலகமாகும், இருந்த போதிலும், நாற்பது ஆசிரியர்களால் சுமார் 1600 வருடங்கள் எழுதப்பட்ட ஒரே செய்தியைக் கொண்ட புத்தகமாகும்.

**4. அது வெளிப்படுத்தப்பட்டதின் அதிசயம்!**

வேதாகமம் தேவனுடைய காரியங்களின் இறுதி வெளிப் பாடாயிருக்கிறது. இது ஒரு முழுமையான புத்தகமாகம் [**I** கொரிந்தியர் 2:10-12]. தீர்க்கதரிசனமாவது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் [**II** பேதுரு 1:20,21].

**5. அதன் தகவலின் அதிசயம்!**

உலகிலேயே மிகச்சிறந்த இலக்கியம் வேதாகமமாகும். இன்னும் சொல்லப்போனால், அதைவிட மேலானது அதாவது இலக்கியத்தை விட மேலானது - இந்த வேதாகமம் ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டியாவற்றையும் தன்னகத்தேக் கொண்டுள்ளது [**II** பேதுரு 1:3]. வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற தகவல்களைவிட கூடுதலான தகவல்கள் தேவையில்லை. வேத வாக்கியங்கள் தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது [**II** தீமோத்தேயு 3:17].

**6. அதன் பரவுதலின் அதிசயம்!**

எல்லா தேசத்தாலும், வகுப்புகளாலும், இனத்தாலும் உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் ஒரே புத்தகம் வேதாகமம் தான்.

**7. அது பாதுகாக்கப்படுவதின் அதிசயம்!**

வேதாகமம் பலரால் வெறுக்கப்பட்டாலும் கூட அது தொடர்ந்து, நிலைத்து நிற்கிறது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் [**I** பேதுரு 1:25]

ஆனாலும், என் இருதயம் உமது வசனத்திற்கே பயப்படுகிறது [சங்கீதம் 119:161]. ✝

தேவனுடைய வார்த்தை

# அவளுடைய விலையேறப்பெற்ற புத்தகம்

# Her Precious Book

David A. Sargent

**அ**து அவளுடைய தொடர்ச்சியான துணையாக இருந்தது. அவள் அதை அடிக்கடி வாசித்தாள். ஜனங்கள் அதை வாசிப்பதையும், விளக்கம் கொடுப்பதையும், அதைக் குறித்து பேசுவதையும் அதிகமாக விரும்பினாள். அதற்கு விரோதமாக யாராவது பேசினால் அதற்கு துரிதமாக பதில் கொடுப்பாள். அவள் வைத்திருந்த புத்தகத்தில் அடிக்கோடிடாத பக்கங்கள் மிகக்குறைவாகவே காணப்பட்டன. அந்த விலையேறப் பெற்ற புத்தகத்தில் வசனங்களையும், எண்ணங் களையும் நினைவில் கொள்ளும்படியாக அங்காங்கே குறித்து வைத்திருந்தாள். அவள் தன்னால் முடிந்தவரை வசனங்களை மனப்பாடம் செய்து வந்தாள். அப்புத்தகத்தில் என்ன சொல்லப் பட்டிருந்ததோ அதன்படி வாழவே அவள் விரும்புவாள். அப்புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களை தன் வாழ்க்கையின் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டாள்.



அவளுடைய குடும்பத்தார் ஒருவர் சொல்லும் போது, தங்கள் குழந்தையை இழந்த போது இப்புத்தகத்தைப் படித்ததன் மூலமாக ஆறுதலைத் தந்ததாகச் சொல்லியிருக்கிறார். அந்தக் குடும்பத்தார் தங்கள் குழந்தை யின் பிறந்த தேதியையும் இறந்த தேதியையும் அப்புத்தகத்தில் எழுதி வைத்திருந்தார்கள். மேலும், அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த வாசகம் என்னை அதிகமாக கவர்ந்தது. என் அருமைக் குழந்தையே நாங்கள் மறுபடியும் உன்னை சந்திப்போம் என்று நம்புகிறோம். அவளை கிறிஸ்துவிடமிருந்து யாரும் பறிக்கமுடியாது, அவள் பரலோகத்தில் மலர காத்திருக்கும் மொட்டு என்பது அந்த வாசகமாயிருந்தது.

அவள் இப்புத்தகத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள அதிகமாக விரும்பினாள். அவள் வாழ்க்கையின் பின்பகுதியில் 94 வயதுடைய மூதாட்டியுடன் நட்பை ஏற்படுத்தினாள். அந்த

மூதாட்டிக்கு கண்பார்வை குறைவாக இருந்தது. அந்த மூதாட்டியால் சரியாகப் பார்க்க முடியாததால், அந்த மூதாட்டி கேட்கும்படி சத்தமாக வாசித்தாள். இந்த மூதாட்டிக்காக மாத்திரமல்ல பலருக்காக இந்தப்பெண் அப்புத்தகத்திலுள்ள காரியங்களை வாசித்தாள். இந்தப் பெண்ணுக்கு எண்பது வயதான போது, எண்பது வயதுடைய மற்று மொரு மூதாட்டியுடன் நட்பை ஏற்படுத்தினாள். இந்த மூதாட்டியின் பெயர் Nora ஆகும். இருவரும் ஒரே அபார்ட்மெண்ட்லேயே குடியிருந்தார்கள். இருவரும் அப்புத்தகத்தின் காரியங்களை அடிக்கடி பகிர்ந்துகொண்டார்கள். இருவரும் இணைந்து அப்புத்தகத்தைப் படித்தார்கள். Nora உடனடியாக அப்புத்தகத்தைப் தன் வாழ்க்கையின் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டாள்.

நாம் இதுகாறும் பார்த்த பெண்மணியின் பெயர் Thelma Clark. இப்பெண்மணி இப்புத்தகத்தை அதிகமாக விரும்பினாள். ஏனென்றால், அது தேவனுடைய வார்த்தையை உள்ளடக்கிய புத்தக மாயிருந்தது. இப்புத்தகம் தேவனுடைய அன்பைப் பற்றி பேசுகிறது. அதாவது, தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை Thelma மற்றும் நம் பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்காக இவ்வுலகத்திற்கு அனுப்பி, அந்தக் கோரக்குருசில் மரிக்கக் கொடுத்து அதன் மூலமாக நாமெல்லோரும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி செய்தார் [யோவான் 3:16].

Thelma வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற வழிமுறைகளால் இரட்சிப்பின் ஈவுகளையும், நித்திய ஜீவனையும் எப்படி பெற்றுக் கொள்வதென்று மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதை அதிகமாக விரும்பினாள். நாம் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து [அப்போஸ்தலர் 16:30, 31], பாவங்களிலிருந்து மனந்திரும்பி [அப்போஸ்தலர் 17:30,31]. மனுஷர்களுக்கு முன்பாக இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்து [ரோமர் 10:9,10]. கிறிஸ்துவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும் [அப்போஸ்தலர் 2:38]. அதன் பின்பு இப்புத்தகம் தொடர்ச்சியாக நம் வழிகாட்டியாக இருக்க வேண்டும். வேதாகமம் கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமு மாயிருக்கிறது [ சங்கீதம் 119 :105]. வேறுவிதமாகச் சொன்னால் இப்புத்தகமாகிய வேதாகமம் Thelma Clark க்கு எப்படி விலையேறப் பெற்றதாக இருந்ததோ அதேபோல் நமக்கும் இருக்க வேண்டும்.

இப்புத்தகத்திற்குத் திரும்பி இதன் பிரமாணங்களைப் பின்பற்ற மாட்டீர்களா? ✝


## தேவனுடைய வார்த்தை

# பகுத்துப் போதிப்பதற்கு வேதாகமத்தை முறையாகப் படிப்பது அவசியம்.

## Rightly Dividing The Word Requries Proper Bible Study

David R. Kenney

**வே**தாகமத்தை படிப்பதைக் குறித்து இரண்டு மித மிஞ்சிய கருத்துக்கள் உண்டு. ஒரு கருத்து வேதவித்தகர்கள் அல்லது வேத ஞானிகளின் உதவியின்றி வேதாகமத்தை ஒரு சராசரி மனிதனால் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது என்பது. ஆனால், வேதாகமம் இதைப்பற்றி எதையும் சொல்லவில்லை. வேதாகமத்தை படிப்பது குறித்து மற்றுமொரு கருத்து, வேதாகமத்தை யார் வேண்டுமானாலும் சர்வசாதாரணமாக வாசித்துப், புரிந்து கொள்ள முடியும் என்பது. ஆனால், உண்மை இவ்விரு மிதமிஞ்சிய கருத்துக்களுக்கு இடையில் உள்ளது. சரியான முயற்சியை பிரயோகித்தால் எல்லோரும் வேதாகமத்தைப் புரிந்து கொள்ள முடியும். **நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாய் உன்னைத் தேவனுக்கு முன்பாகம்**



**உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு** (II தீமோத்தேயு 2:15). ஜாக்கிரதையாயிருப்பதற்கு முயற்சி அவசியமாயிருக்கிறது, ஊழியக்காரன் என்னும் பதம் இக்கருத்தை மேலும் வலியுறுத்துகிறது. தேவனைப் பிரியப்படுத்துவதற்கும், கடைசி நாளில் இரட்சிப்படைவதற்கும் தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை கற்றுக் கொள்வதற்கு வேதாகமத்தைப் படிக்க ஒருவர் சரியானக் முயற்சியை எடுக்க வேண்டும். வசனத்தை பகுத்துப் போதிப்பதென்பது வசனத்தை சரியாகக் கையாள்வது, சத்தியத்தை சரியாகப் போதிப்பது என்று பொருள்படும். இதற்கு சரியான முறையில் வேதாகமத்தை படிப்பது அவசியமாகிறது. நிச்சயமாகவே, தேவன் நமக்கு தந்திருக்கிற வார்த்தைகளை நாம் கவனமாகக் கவனிக்க வேண்டும். கவனமாகக் கையாள வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

ஒரு வேத மாணவன் வேதாகமத்தில் தேவன் மனிதனோடு எப்படி இடைப்பட்டார் என்று உணர்ந்து கொள்ள வேண்டும். **முதல் காலம் பிதாக்களின் காலம்** (தேவன் குடும்பத்தலைவர்களோடு இடைப் பட்டார்) அடுத்து, **மோசேயின் காலம்** (தேவன் மோசேக்கும் இஸ்ரவேலருக்கும் பிரமாணத்தை கொடுத்த காலம்) இப்போது **கிறிஸ்தவ காலம்** (தேவனுடைய குமரன் புதிய உடன்படிக்கையை எல்லோருக்கும் உண்டாக்கின காலம்) இன்றைய நாட்களில் நாமெல்லாரும் புதிய ஏற்பாட்டின்படி தான் நியாயந்தீர்க்கப்படுவோம். சிலர் தவறுதலாக பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் குழப்பி பழைய பிரமாணத்தின் நடைமுறைகளை புதிய பிரமாணத்திற்குள் கொண்டு வருகிறார்கள். இவைகள் வேறுபட்ட உடன்படிக்கைகள், இரண்டும் ஒன்றல்ல.

நாம் வேதாகமத்தை சரியாகப் படிக்கும் போதுதான் உடன் படிக்கைகள், கட்டளைகள் குறித்த சரியான கண்ணோட்டம் நமக்கு ஏற்படும். கூடுதலாக, கீழ்ப்படிவேண்டிய கட்டளைகள், பின்பற்றப்பட வேண்டிய உதாரணங்கள், சில வேளைகளில், சந்தர்ப்பத்தை பொறுத்து (தவிர்க்க வேண்டியவைகள், ஆகியவைகளை உணர்ந்து வசனத்தை தர்க்கரீதியாக அணுகும் முறையை ஒருவர் கொண்டிருக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தையைக் கையாள்வதில் பலரால் அலட்சியப்படுத்தப்படும் ஒரு விதி **மௌனமாயிருக்கும்** வேத வாக்கியங்களை மதிப்பதுதான். சிலர் நாம் ஒரு செயலைச் செய்ய முடியாதென்று வேதாகமம் சொல்லவில்லை என்றால் நாம் அச்செயலைச் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், நாம் அச்செயலைச்செய்ய முடியுமென்பதற்கான வேதாகம உதாரணம், கட்டளை, தொடர்பு போன்றவைகளை வேதாகமத்தில் நாம் தேட வேண்டும். வேறு விதமாகச் சொன்னால் நான் இதைச் செய்ய முடியாதென்று வேதாகமம் சொல்லவில்லை என்று சொன்னால் நாம் குறி தவறுகிறோம். சரியான பார்வை என்னவென்றால், இக்காரியத்தைச் செய்ய வேதாகமம் எங்கே அங்கீகரிக்கிறது? நாம் எந்தெந்த காரியங்களைச் செய்யக் கூடாதென்று ஒவ்வொன்றாக தேவன் நமக்குச் சொல்கிறதாக இருந்தால் வேதாகமம் எவ்வளவு நீளமாயிருக்கு என்பதைத் நினைத்துப் பாருங்கள்

நம்மைத் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும்படி நாமெல்லோரும் வேதாகமத்தை சரியாகப் படிக்க வேண்டும்.

அநேகரைப் போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய் பேசாமல் துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்ததியில் பேசுகிறோம் (II கொரி 2:17) ✝

**இரட்சிப்பு**

## ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகம்

## The Lamb`s Book of Life

David R. Pharr

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்து எருசலேமுக்கு தம்முடைய இறுதி யாத்திரைக்காக ஆயத்தம் ஆகிக்கொண்டிருந்தபோது, தம்முடைய வருகையை ஆயத்தப்படுத்துவதற்கு எழுபது சீஷர்களை தெரிந்து கொண்டு அவருக்கு முன்பாக அவர்களை அனுப்பினார். சீஷர்களை அனுப்பும் போது அங்கே அவர்களுக்கு எதிர்ப்பு இருக்குமென்று எச்சரித்தார். அவர்கள் ஓநாய்கள் மத்தியில் ஆட்டுக்குட்டிகளைப் போலிருப்பார்கள் என்று சொன்னார். அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்தும் வல்லமையும், நோயாளிகளை சுகப்படுத்தும் வல்லமையும் கொடுக்கப்பட்டிருந்தது (லூக்கா 10:1).

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஊழியத்தின் பாதையில் வெற்றி பெறும் போது சந்தோஷப்படுவது எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிற ஒன்று தான். அந்த எழுபது சீடர்களும் திரும்பி வந்த போது, பரவசமூட்டும் அறிக்கைகளைக் கொடுத்தார்கள். ஆண்டவரே உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்கு கீழ்ப்படிகிறது என்றார்கள். இயேசு கிறிஸ்து செய்யப்பட்ட எல்லாக் கிரியைகளை யும் அறிந்திருந்தார். அசுத்த ஆவிகளால் அவைகளை தடுக்க முடியவில்லை. இருந்த போதிலும், அற்புத அடையாளங்கள் செய்வதைவிட மேலான ஒன்று இருக்கிறது என்பதை அவர்களுக்கு சுட்டிக் காட்டினார். ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப் படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல் உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார் (லூக்கா 10:20).

இங்கே நாம் கற்றுக் கொள்ள வேண்டிய கருத்து என்னவென்றால், அற்புத அடையாளங்கள் செய்வதை விட மேலான ஒன்று இருக்கிறது என்பது தான். ஒவ்வொரு உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையின் பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்படும். அதாவது, பெயர் பரலோகத்தில் எழுதப்படும் என்ற நிச்சயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரலோகம் பற்றி அப்போஸ்தலனாகிய யோவான் தீட்டுள்ளதும், அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 21:27).

நம் பெயர்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது எனும் உண்மை தேவன் நம் ஒவ்வெருவரையும் மிக நெருக்கமாக அறிந்திருக்கிறார் என்பதைச் சொல்கிறது. மோசே மீது அவர் கொண்ட கரிசனையை வலியுறுத்தும் விதமாக உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்று சொன்னார் [யாத்திராகமம் 33:17]. இயேசு கிறிஸ்து நானே நல்ல மேய்ப்பன் என்று தம்மை அழைத்துச் சொல்லும்போது அவர் தம்முடைய ஆடுகளைப் பேர் சொல்லி அழைப்பதாக நாம் வாசிக்கிறோம் [யோவான் 10:3]. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்திலிருந்த தன்னுடைய உடன் ஊழியர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர்களுடைய நாமங்கள் ஜீவபுத்தகத்தில் இருக்கிறது. [பிலிப்பியர் 4:3]. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சர்தை சபைக்கு எழுதும் போது ஒரு காரியத்தை அவர்களுக்கு நிச்சயப்படுத்தினார். ஆனாலும், தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு, ஜீவ புத்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் [வெளிப்படுத்தின விசேஷம் 3:4-5]

தேவன் நம் ஒவ்வொருவரையும் பேர் பேராக அறிந்திருக்கிறார். இரட்சிப்பு தனிப்பட்ட ரீதியிலானது. ஜீவபுத்தகம் தேசங்களின் பெயர்களை, குடும்பங்களின் பெயர்களை, சபைகளின் பெயர்களை ஒன்றும் பட்டியலிடவில்லை. ஆனால், தனிப்பட்ட நபர்களின் பெயர்களைத் தான் பட்டியலிட்டிருக்கிறது. ஆம், இரட்சிக்கப் பட்டவர்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்கள் என்பது உண்மை தான். ஆனால், இரட்சிப்பு ஒருவருடைய தனிப்பட்ட விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலினால் தான் உண்டாகுகிறது [I பேதுரு 1:22]. ஒருவர் தன் குடும்பப் பெயர் பரலோகத்தில் எழுதப்பட்ட தினாலோ அல்லது ஒரு சபையில் அங்கம் வகிப்பதினாலோ மற்றவர் பரலோகத்தில் பிரவேசிப்பதில்லை. ஒருவர் கர்த்தரோடு கொண்டி ருக்கும் தனிப்பட்ட உறவின் காரணமாகவே அங்கே பிரவேசிக்க முடியும்.

ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் பட்டியல் மிகத் துல்லியமானது என்பது வலியுறுத்தப்பட வேண்டும். எந்தெந்த பெயர்களை எழுத வேண்டுமென்று தேவனுக்கு நன்றாகத் தெரியும். கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் [II தீமோத்தேயு 2:19].

ஜீவ புத்தகத்தில் எந்தத் தவறும் இருப்பதில்லை, கர்த்தருடைய வர்களாக இல்லாதவர்களின் பெயர்கள் அதில் சேர்க்கபடுவதுமில்லை. அங்கே எழுதப்பட வேண்டிய பெயர்கள் விட்டுப் போவதுமில்லை. பொறுப்புள்ள மனித இனத்தில் இரு பிரிவுகள் மாத்திரமே உண்டு. மறுபடியும் பிறந்தவர்கள், மறுபடியும் பிறக்காதவர்கள்; சபையில் உள்ளவர்கள், உலகத்தில் உள்ளவர்கள்; பாவங்கள் மன்னிக்கப் பட்டவர்கள், பாவத்தில் வாழ்பவர்கள்; புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள், புத்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள்.

ஜீவ புத்தகத்தில் நம் பெயர்கள் புதிய பிறப்பின் போது அதாவது ஒருவர் மறுபடியும் பிறக்கும் போது எழுதப்படுகிறது [யோவான் 3:17; I பேதுரு 1:23 –25; கலாத்தியர் 3:26]. பரலோகத்தில் ஜீவபுத்தகத்தில் நம் பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறதா என்பதை இப்பூமியில் வேதாகமமாகிய புத்தகத்தில் நாம் எதை விசுவாசிக்கிறோம், எதைப் பின்பற்றுகிறோம் என்பதை வைத்தே அறிந்து கொள்ள முடியும்.

ஜீவபுத்தகத்தில் எழுதபபட்ட பெயர்களை நீக்கிப்போட முடியும் என்பதை அறிந்து கொள்வது முக்கியமாகும். பாவத்தை ஜெயித்து உண்மையுள்ளவர்களாக வாழ்பவர்களுடைய பெயர்கள் கிறுக்கி போடப்படாது [வெளிப்படுத்தின விசேஷம் 3:5]. இருந்த போதிலும், ஒருவன் இந்த தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவபுத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப்புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார் எனும் பயங்கரமான எச்சரிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது [வெளிப்படுத்தின விசேஷம் 22:19]. இறுதி நியாயத்தீர்ப்பைக் குறித்து தன்னுடைய தரிசனத்தை யோவான் பதிவு செய்திருக்கிறார்: மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புத்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுத்தகம் என்னும் வேறொரு புத்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியை களுக்குத்தக்கதாக நியாயந்தீர்ப்படைந்தார்கள். ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான் [வெளிப்படுத்தின விசேஷம் 20:12,15]. ✝

## இரட்சிப்பு
## பெரிய கேள்வி
## The Big Question
Carroll Sites

**வா**ழ்க்கை என்பது தீர்மானங்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. சில தீர்மானங்கள் பெரியவைகள், சில தீர்மானங்கள். வேறு சில தீர்மானங்கள் முக்கியமற்றவைகளாக இருக்கும். சில தீர்மானங்கள் ஒருவனுடைய வாழ்வில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். வேறு சில தீர்மானங்கள் ஒருவனுடைய வாழ்வில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தாது. வேறு சில தீர்மானங்கள் ஒருவனுடைய தலைவிதியையே மாற்றும். நாம் எடுக்கும் தீர்மானங்கள் மூலமே, **பெரிய கேள்வி எது?** என்பது முடிவாகப் போகிறது. கீழ்க்காணும் காரியங்களை ஜாக்கிரதையாக சிந்தித்து சரியான முடிவுகளை எடுங்கள்.

- ஒரு நாளைத் தொடங்குவதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஜெபத்தோடு, ஜெபமில்லாமல். ஏதோ ஒரு வழியில் தொடங்கினீர்கள். அது எது?
- கர்த்தருடைய நாளை செலவழிக்க இரண்டு வழிகள் உண்டு. சோம்பேறித்தனமாக அல்லது பக்திப்பூர்வமாக. இவ்விரு வழிகளில் ஏதோ ஒன்றில் நீங்கள் கர்த்தருடைய நாளை செலவழித்தீர்கள். அது எது?
- இவ்வுலகில் இரண்டு வகையான மக்கள் இருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள், இரட்சிக்கப்படாதவர்கள். நீங்கள் இவ்விரண்டில் ஏதோ ஒரு வகையைச் சேர்ந்தவர்கள். அது எது?
- இவ்வுலகில் இரண்டு மாபெரும் எஜமான்கள் இருக்கிறார்கள் – தேவன், சாத்தான். இவ்விருவரில் யாரையோ ஒருவரை நீங்கள் சேவிக்கிறீர்கள். அது எது?
- நம்மை நித்தியத்திற்கு இரண்டு பாதைகள் அழைத்துச் செல்கின்றன. இடுக்கமான பாதை, விசாலமான பாதை. நீங்கள் இவ்விரண்டு பாதைகளில் ஏதோ ஒன்றில் தான் பயணிக்கிறீர்கள். அது எது?
- ஜனங்கள் இரண்டு விதங்களில் மரிக்கிறார்கள்; சிலர் கிறிஸ்துவுக்குள் மரிக்கிறார்கள், சிலர் தங்கள் பாவத்தில் மரிக்கிறார்கள். இவ்விரு மரணத்தில் ஏதோ ஒன்றைத்தான் தழுவுவீர்கள். அது எது?

✿ ஜனங்கள் போகவேண்டிய இடம் இரண்டு தான் - பரலோகம் அல்லது நரகம்? நீங்களும் இவ்விரு இடத்தில் ஒன்றிற்குத்தான் போவீர்கள். அது எது?

உங்கள் வாழ்வில் ஏதாவது மாற்றம் செய்யப்பட வேண்டுமா? ஏதாவது மாற்றங்கள் செய்யத் திட்டம் உண்டா? எப்போது? பரலோகம் செல்ல திட்டமிடுகிறீர்களா? இக்கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்கும் விதம் அநேகமாக நீங்கள் அது எது? எனும் **பெரிய கேள்விக்கு** நீங்கள் எவ்விதத்தில் பதிலளித்தீர்களோ அதினால் தீர்மானிக்கப்படும். வேதாகமம் வெளிப்படையாகப் பேசுகிறது: காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போம், தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே (பிரசங்கி 12:13).

✝

---

## இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்

- தானியேல் ஜெபித்தார் ... தேவன் சிங்கங்களின் வாயைக்கட்டினார்
- யோசுவா ஜெபித்தார் ... சூரியன் அப்படியே நின்றது
- எஸ்தர் ஜெபித்தார் ... பாழாக்கும் தீமையிலிருந்து யூதர்களை தேவன் விடுவித்தார்.
- எலியா ஜெபித்தார் ... மூன்றரை வருடங்களுக்கு மழைப் பெய்யவில்லை
- மோசே ஜெபித்தார் ... சிவந்த சமுத்திரத்தைத் தேவன் இரண்டாகப் பிரித்தார்

## இரட்சிப்பு

# மரணம் என்பது ...

# Death is ...

Kevin L. Moore

**மரணம் நிச்சயமானது:**

இத்தற்காலிகமான உலகில் நம் சரீர வாழ்க்கை நிரந்தரமாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்படவில்லை. ஆகவே, இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்வது ஒவ்வொருவருக்கும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. [II கொரிந்தியர் 5:1-10]. உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே... [பிரசங்கி 9:5].

**மரணம் நிச்சயமற்றது:**

அது எப்போது வருமென்று நமக்குத் தெரியாது. பலர் தன்னுடைய செழிப்பினால் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் திளைத்துப் போயிருந்த அந்த ஐசுவரியவானுடைய ஜீவன் எதிர்பாராத விதமாக எடுக்கப்பட்டது போல, தங்கள் ஜீவன் எடுக்கப்படுவதைக் கண்டு ஆச்சரியத்தால் திக்குமுக்காடிப் போவார்கள் [ லூக்கா 12:16-21]. யாக்கோபு ஆசிரியர் **நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே** என்று எச்சரிக்கிறார் [யாக்கோபு 4:14].

**மரணம் பட்சபாதம் பார்ப்பதில்லை:**

வாலிபர்களும், வயதானவர்களும், ஏழைகளும், ஐசுவரிய வான்களும் நீதிமான்களும், துன்மார்களும் எல்லோருமே மரண அழைப்புக்கு கீழ்ப்பட்டுத்தான் இருக்கிறார்கள் [சங்கீதம் 49:10]. ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை. மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை [பிரசங்கி8:8].

மரணம் அதைப்பற்றிய அறிவில்லாதவர்களுக்கும் ஆயத்த மில்லாதவர்களுக்கும் அச்சுறுத்தலாயிருக்கிறது.

அறியாத காரியங்களைக் குறித்த பயம் மனிதனுக்கு இயல்பாக இருக்கின்ற ஒன்றாக இருந்தாலும் கூட சம்பவிக்கப் போவதை அறிந்து அதற்காக ஆயத்தமில்லாமலிப்பது கொடுமையானதாகும்.

நீதிமான்கள் இப்பொழுது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது (சாமுவேல் 24:14) என்று ஜெபிக்க முடியும். ஆனால், நித்தியத்திற்கு ஆயத்தமில்லாதவர் களுக்கு ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கர மாயிருக்குமே (எபிரெயர் 10:31).

**மரணம் இவ்வாழ்க்கைக்கு அப்பால் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு துக்கரமானது.**

நமக்குப் பிரியமானவர்கள் மரிக்கும்போது, வேதாகம வித்தியாசம் துக்கிப்பவர்களுக்கும், துக்கிக்காதவர்களுக்கும் இடையில் இல்லை, ஆனால், நம்பிக்கையற்றவர்களுக்கும், நம்பிக்கை உள்ளவர் களுக்கும் இடையில் தான் இருக்கிறது (I தெசலோனினிக்கேயர் 4:13) . மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் என்று சொல்கிறார் ( I கொரிந்தியர் 15:19)

**மரணம் தேவனோடு காரியங்களைச் சரி செய்து கொள்வதற்கு வாய்ப்புகளின் முடிவாயிருக்கிறது.**

ஐசுவரியவான் லாசரு உவமையிலிருந்து நாம் கற்றுக் கொண்ட மிகப் பெரிய பாடம் ( லூக்கா 16:19-31) தேவன் இவ்வாழ்வில் தான் அவரோடு காரியங்களைச் சரி செய்து கொள்வதற்கு வாய்ப்புகளை கொடுக்கிறார்; கல்லறைக்கு அப்பால் சூழ்நிலைகளை நம்மால் மாற்ற முடியாது.

**மரணம் வாசலாயிருக்கிறது.**

ஆதலால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். (ரோமர் 8:18) நாம் இல்வாழ்க்கையை விட்டு கடந்து அடுத்த வாழ்க்கைக்குள் பிவேசிக்க மரண வாசல் வழியாய் தான் கடந்து போக வேண்டும் (I கொரிந்தியர் 15:50). துரதிஷ்டவசமாக பலர் இப்பாழாய்போன வாழ்க்கையை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருக்கிறார்கள். ஆனால், தேவன் கீழ்ப்படிபவர்களுக்கு இதைவிட மேலான காரியங்களை தேவன் வைத்திருக்கிறார்.

**மரணம் ஒரு பயணமாயிருக்கிறது.**

நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களா யிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாக வேயிருந்து இந்தத் தேகத்தை விட்டுக்குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம் [**II** கொரிந்தியர் 5:6–8]. அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் .... தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு. அது அதிக நன்மையாயிருக்கும் என்று முடிக்கிறார் [ பிலிப் 1:21–23].

**மரணம் இளைப்பாறுதலாயிருக்கிறது:**

பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன் . அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கிவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம். [வெளிப்படுத்தின விசேஷம் 14:13]. தேவன் இவ்வுலகில் உள்ள எல்லாவற்றையும் உண்டாக்கிவிட்டு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்பது சிருஷ்டிப்பு காரியங்களிலிருந்து அவர் இளைப்பாறினார் என்று தான் பொருள்படும். [ஆதியாகமம் 2:2] பழங்கால யூதர்களுக்கு கட்டளையிடப்பட்ட ஓய்வு நாள் அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் பட்டபாடுகளுக்கு முடிவாயிருந்தது [உபாகமம் 5:15]. கானான் தேசத்தில் இஸ்ரவேலின் சுதந்திரம் வனாந்திரப் பாடுகளிலிருந்து இளைப்பாறுதலாயிருந்தது. யோசுவா 21:43–45] அதே போல் நம் பரலோக இளைப்பாறுதல் செயல்பாடற்ற ஒரு நித்தியமாக இருக்காது. ஆனால், இவ்வுலக வாழ்க்கையின் வருத்தம், பாடு, உபத்திரவம் போன்றவைகளிலிருந்து விடுபடுகிற ஓர் அனுபவமாகத்தான் இருக்கும் [ எபிரெயர் 4:1–11].

**மரணத்திற்காக நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்**

மனுஷன் உலக முழுவதையும் ஆதாயபபடுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? ஆயுள் காப்பீடு உயில் மற்றும் அடக்கத்திற்காக ஆயத்தம் போன்றவை களுக்கு அப்பால் ஒருவர் மரணத்திற்காக எப்படி ஆயத்தமாகிறார்? சுருக்கமாகச் சொன்னால் அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடி யிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர் களாயிருக்க நாடுகிறோம் [**II** கொரிந்தியர் 5:9]. ✝

**நோவாவின் இரட்சிப்பும்**
**I பேதுரு 3:20-21;**

**நம்முடைய இரட்சிப்பும்**
**ரோமர் 15:4**

| | **நோவாவின் இரட்சிப்பும்** | **நம்முடைய இரட்சிப்பும்** |
|---|---|---|
| 1. | பாவ உலகில் [ஆதியாகமம் 6:1–5] | பாவ உலகில் I யோவான் 5:19; ரோமர் 3:23; யோவான் 3:16,17 |
| 2. | தேவ சித்தத்தை செய்ய உறுதியாய் தீர்மானித்தது [ஆதியாகமம் 7:15; 6:22] | வேத சித்தத்தை செய்ய உறுதியாய்த் தீர்மானிக்கிறது யோவான் 17:17 |
| 3. | தேவனுக்கு செவி சாய்த்தது [ஆதியாகமம் 6:9; ஆமோஸ் 3:3] | தேவனுடைய வார்த்தைக்கு செவிக் கொடுக்கிறது மத்தேயு 17:1–5; உபாகமம் 18:15. |
| 4. | தேவனை விசுவாசித்தது; கீழ்ப்படிந்தது [எபிரெயர் 11:7; யோவன் 3:36] | கிறிஸ்துவுக்குள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக் கிறது [எபிரெயர் 11:8; யோவான் 8:24; ரோமர் 10:17] |
| 5. | தேவ பயத்தினால் உந்தப்பட்டது [எபிரெயர்11:7] | தேவ பயத்தினால் உந்தப்படுகிறது பிரசங்கி 12:13–14; ரோமர் 2:4 |
| 6. | தேவன் பேழையில் இரட்சிப்பைக் கொண்டு வந்தார் [எபிரெயர் 11; ஆதியாகமம் 6] | தேவன் சபையாகிய ஒரே சரீரத்தில் இரட்சிக்கிறார். [அப்போஸ்தலர் 2:47; கொலோ1:18.] |
| 7. | தண்ணீரால் சிலர் இரட்சிக்கப்பட்டார்கள் (I பேதுரு 3:21; ஆதியாகமம் 6–9] | ஞானஸ்நானம் இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது (I பேதுரு 3 :21 ; அப்போஸ்தலர் 2:38] |
| 8. | பேழைக்குள் இருக்க வேண்டியதாயிருந்தது [ஆதியாகமம் 7:9] | ஒரே சரீரத்தில் இருக்க வேண்டியதாயிருக்கிறது [வெளி 2:10; கலாத்தியர் 3:26,27]. |
| 9. | உறவில் மாற்றம் ஏற்பட்டது [ஆதியாகமம் 7:24] | கிறிஸ்துவுக்குள் உறவில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது [கொலோ 1:13, 14; II கொரி 5:17]. |
| | உருவகம் | இரட்சிப்பு |

# சபை வளர்ச்சியை உண்டாக்குதல்

# Causing Church Growth

Wayne Barrier

ஒவ்வொரு பிராந்திய சபையின் உச்சகட்ட முக்கியத்துவம் சபை வளர்ச்சியாகத்தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு சபையும் கர்த்தருடைய பிரதான கட்டளையான உலகெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவித்து அதற்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்னும் கட்டளைக்கு உண்மையாக இருந்தால் (மத்தேயு 28:18-20). சபை வளர்ச்சி உண்டாகும். சபை வளர்ச்சிக்கான விவரமான வழிமுறைகள் எபேசியர் 4:1-6 வசனங்களில் மிக விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வசனப்பகுதி 16 ஆம் வசனத்துடன் முடிவடைகிறது. ஆனால், ஏதோ ஒன்று சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறதென்று இவ்வசனம் தெரிவிக்கிறது. இவ்வசனப் பகுதியை நாம் ஆராய்ந்துப் பார்த்தால் சபை வளர்ச்சி உண்டாவதற்குத் தேவையான காரியங்களை நாம் அடையாளங்காண முடியும்.

முதலாவது, இவ்வசனப்பகுதியில் பல வசனங்கள் சபை அங்கத்தினர்கள் சபை வளர்ச்சிக்கு தங்கள் பங்களிப்பை வெளிப்படுத்துவதற்கு தேவையான மனப்பான்மையும், குணாதிசயங்களும் என்னென்ன என்பதை குறிப்பிடுகின்றன. இவைகளுள் மனத்தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை, அன்பினாலே ஒருவரையொருவர் தாங்குதல், அன்புடன் சத்தியத்தை கைக்கொள்வது போன்றவைகள் உள்ளடக்கம். பின்பு எபேசியர் 4:31,32 வசனங்களில் பவுல் சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூவுணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்'' என்று அறிவிக்கிறார்.

அடுத்ததாக, பவுல் கிறிஸ்துவின் சரீரத்திற்காக ஒற்றுமையின் ஏழு அம்சங்களை பட்டியலிடுகிறார். இதை நாம் எபேசியர் 4:4-6 வசனங்களில் காண முடியும். ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன், ஒற்றுமையின் இந்த ஏழு காரியங்களை ஒவ்வொன்றாக விரிவாக

விளக்குவதற்கு முன்பாக எல்லா வேத வாக்கியங்களையும் ஜாக்கிரதையாகவும், விரிவாகவும் படித்து அநேக காரியங்களைப் புரிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது. [II தீமோத்தேயு 3:16, 17]. விரிவான வேத ஆராய்ச்சி இல்லாமல் இந்த ஆவிக்குரிய தேவையை நம்மால் பூர்த்தி செய்ய முடியாது. பெரும்பாலான விசுவாசிகள் வேதாகமத்தை அரிதாகப் படிப்பதால் வேதாகமத்தைப் பற்றி குறைவான அறிவையே பெற்றிருக்கிறார்கள். இவர்கள் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிருக்கிறார்கள்'' [எபேசியர் 4:14].

இறுதியாக, நாம் ஒவ்வொருவரும் கிரியை செய்கிறவர்களாக இருந்து ஒவ்வொருவரும் தன்தன் பங்கை ஆற்றி சபையைக் கட்டி வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் [4:16]. சபையானது அப்போஸ்தலர்களாலும், தீர்க்கதரிசிகளாலும் போதிக்கப்பட வேண்டும். அவர்களுடைய வார்த்தைகள் [வேதாகமம்] நம் போதனைக்காக பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய நாட்களில் சுவிசேஷகர்கள் மூப்பர்கள் மற்றும் போதகர்கள் கிறிஸ்தவர்களை ஊழியத்திற்கென்று பக்குவப்படுத்து வதற்காக தலைமைத்துவப் பண்புகளை அவர்களுக்கு கற்றுக் கொடுக்கிறார்கள் [எபேசியர் 4:11,12]. சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு திறமைகளும், தாலந்துகளும் பெலன்களும் உண்டு. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் திறமைகள் மற்றும் வாய்ப்புகளை அடிப்படையாக வைத்து ஊழியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் கர்த்தருடைய சரீரத்திற்கு சேவை செய்வதற்காக, நாம் ஒவ்வொருவரும் நம் பங்கை ஆற்றும்போது சபை பக்தி விருத்தியடைந்து வளர்ச்சி அடையும். உங்கள் ஊழியம் என்ன?

இவ்வுலகிலேயே மிக முக்கியமான அமைப்பாக சபை இருக்கிறது. சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாகவும், பரலோகத்தில் நித்திய நித்தியமாக வாழ ஆயத்தமாயிருப்பவர்களின் கூட்டமாகவும் இருக்கிறது. சபை வளர்ச்சி என்பது கடினமான ஒன்றுதான். ஆனாலும், வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் வழி காட்டுதல்களை பயன்படுத்தும்போது சபை வளர்ச்சி சாத்தியமே. எபேசியர் 4:1-16 வசனங்களில் சபை வளர்ச்சிக்குத் தேவையான வல்லமையான வழிகாட்டி இடம் பெற்றுள்ளது. ✝

# நிலத்தடி கல்லறைகளிலிருந்து வாசகங்கள்

## Epitaphs From The Catacomps

Bobby Dockery

**ரோம்** நகரின் புறநகர்ப் பகுதியில் சுரங்கப்பாதை போன்ற அமைப்பில் நிலத்தடி கல்லறைகளைக் காணமுடிகிறது. 5 அடி அகலமும், 8அடி உயரமும் கொண்ட இந்த நிலத்தடி கல்லறைகள் நெளிவும், வளைவும் கொண்ட சிக்கலான பாதைகளில் சுமார் 600 மைல்களில் பரவியிருக்கிறது. பெரும்பாலான இந்த நிலத்தடி கல்லறைகள் ரோம கொடுங்கோலாட்சியில், கிறிஸ்தவர்கள் கடுமையாக உபத்திரவப்பட்டபோது கிறிஸ்தவர்கள் இது போன்ற நிலத்தடி கல்லறைகளில் தஞ்சம் புகுந்தார்கள். தேவனை ஆராதித்தார்கள் அங்கேயே மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்கள்.



கற்பாறைகளில் குடையப்பட்ட இந்த குகைகள் அல்லது நிலத்தடி கல்லறைகள் ஆதிக் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை சோதிக்கும் படியாக கட்டவிழ்த்துவிடப்பட்ட அக்கினி சோதனையின் பயங்கரத்தை நமக்குத் தெளிவாக தெரிவிக்கிறது (I பேதுரு 4:12). முதல் மற்றும் இரண்டாவது நூற்றாண்டுகளில், இந்த சுரங்கக் கல்லறைகளில் சுமார் 40 லட்சத்திலிருந்து 70 லட்சம் கிறிஸ்தவர்கள் இரத்த சாட்சியாக மரித்து அடக்கம் பண்ணப்பட்டிருப்பதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டு

உடல்கள் துண்டிக்கப்பட்டதற்கு ஆதாரமாக மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய கொடூரமான உபத்திரவத்தின் மத்தியில் அந்த ஆதிக் கிறிஸ்தவர்களின் விசுவாசம் அசைக்கப்பட்டிருக்கும் என்று நமக்கு நினைக்கத் தோன்றும். ஆனால், அவர்களுடைய கல்லறைகளில் காணப்படும். கல்வெட்டுகள் அவர்களுடைய விசுவாசத்திற்கு நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றன. ஒரு கல்லறையில் இவ்விதமாக வாசகம் எழுதப்பட்டுள்ளது. ''இங்கே Marica **சமாதானம்** கிடைக்குமெனும் நம்பிக்கையில் இளைப்பாறும்படி வைக்கப்பட்டிருக்கிறார்''. மற்றுமொரு கல்லறையில் ஒரு எளிய சாட்சி பகிரப்பட்டிருந்தது. **சமாதானத்திலும், கிறிஸ்துவிலும் வெற்றி.** மற்மொரு கல்லறையில் **அழைக்கப்பட்ட படியால் சமாதானமாய் கடந்துவிட்டார்** என்று எழுதப்பட்டிருந்தது.

எப்பஜ ஆதி கிறிஸ்தவர்களால் இப்படி அமைதியான நிச்சயத்துடன் தங்கள் பிரியமானவர்களை அடக்கம் செய்ய முடிந்தது? சொல்லொணா துயரத்தின் வழியாய் கடந்து போனபோதிலும் இந்த கிறிஸ்தவர்களால் எப்படி இப்படி சமாதானத்தைக் குறித்தும், நம்பிக்கையைக் குறித்தும் தைரியமாகப் பேச முடிந்தது? அவர் களுடைய இரகசியம் என்னவாயிருந்தது? இவ்வளவு பெரிய விசுவாசத்தை எப்படி அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள்?

**அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் படித்ததினால் விசுவாசத்தில் பெலனடைந்தார்கள்.**

இந்த கிறிஸ்தவர்கள் 'விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' என்பதை உணர்ந்து கொண்டார்கள் [ரோமர் 10:17]. எனவே, அவர்கள் அப்போஸ் தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் [அப்போஸ் தலர் 2:42]. வேத வாக்கியங்களை வாசிக்கவும், படிக்கவும் கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டார்கள். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு தேவனுடைய வார்த்தையின் மீதிருந்த மனப்பான்மை அப்போஸ்தலனாகிய பவுலால் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில்

துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்து வந்த மேலங்கியையும், புத்தகங்களையும் விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக்கொண்டு வா'' என்று எழுதுகிறார் [**II** தீமோத்தேயு 4:13].

**அவர்கள் சபையாக கூடி வந்து தங்கள் விசுவாசத்தில் பெலனடைந்தார்கள்.**

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனைக்காகவும், தியானத்திற்காகவும் தவறாமல் ஒன்று கூடியிருக்கிறார்கள். ரோம அரசாங்கத்தினால் உபத்திரவம் அதிகரித்து அவர்களால் ஒன்று கூட முடியாத சூழ்நிலை ஏற்பட்ட போது, வீடுகள் தோறும் சந்திக்க முடியாமல் போன போது இது போன்ற நிலத்தடி கல்லறைகளில் கூடியிருக்கிறார்கள். அங்கே இருளாலும், மரணத்தாலும் சூழப்பட்டிருந்தாலும் கூட விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் வெற்றிப் பாடலைப் பாடினார்கள். எந்நிலைமையிலும் ஆராதனைக் காக ஒன்று கூடி வருவதை விட்டுவிடக்கூடாது எனும் உறுதியான தீர்மானம் அவர்கள் விசுவாசம் கட்டப்பட மிக முக்கியமான காரணியாக இருந்தது.


**அவர்கள் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு தங்கள் விசுவாசத்தில் பெலனடைந்தார்கள்.**

நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும் எனும் தேவையை அவர்கள் உணர்ந்து கொண்டபடியால் [எபிரெயர் 3:13] அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் ஏவப்படும்படி அவர்கள் ஒருவருக் கொருவர் புத்தி சொல்லியிருக்கிறார்கள் [எபிரெயர் 10:25]. அவர்கள் கிறிஸ்துவுக்குள் தங்கள் சகோதர, சகோதரிகளின் உதாரணத் தினாலும், உற்சாகத்தினாலும் தேவனுக்கு உண்மையாக வாழ தைரியத்தை பெற்றுக் கொண்டார்கள். அவர்களிடையே காணப்பட்ட ஐக்கியக்கட்டு அவர்களை கிறிஸ்துவிடத்திலும், ஒருவரை மற்றொருவரிடத்திலும் இழுக்கச் செய்தது.

அவர்கள் விசுவாசம் உலகத்தை ஜெயித்தது. ஏனென்றால், உலகத்தில் இருப்பவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள் [**I** யோவான் 4:4]. உங்கள் விசு வாசத்திற்கு ஓர் உந்தும் சக்தி தேவையா? நிலத்தடி கல்லறை வாசகங்களை எழுதிய விசுவாசத்திலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்! ✝

# தூய்மையான சபை
## (எபேசியர் 5:25-27)

### தேவன் அதை விரும்புகிறார்



இரட்சிக்கப்பட்டவர்கள்
சபையில் இருக்கிறார்கள்
அப்போஸ்தலர் 2:47

இரட்சிக்கப்பட்டவர்கள்
பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள்
I பேதுரு 1:22, I கொரி. 6:9–11

சபை பரிசுத்தத்தை காத்துக்
கொள்ள வேண்டும் மத்தேயு:
5:13–16, I யோவான் 1:7.

### பாவம் அதை கறைப்படுத்துகிறது



சபை தவறு செய்வபர்களை சீர்
பொருந்தப் பண்ண வேண்டும்.
கலாத்தியர் 6:1, மத்தேயு 18: 15–17

சிலர் மனப்பூர்வமாய்ப் பாவம்
செய்கிறார்கள் எபிரெயர் 10:26
II பேதுரு 2:21–22.

ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள
வேண்டும் II செலோனிக்கேயர் 3:6;
ரோமர் 16:17.

### தேவன் அதை சுத்தப்படுத்துகிறார்



சபை மறுபடியும் சுத்தமாகிறது
I கொரிந்தியர் 5:7
எபேசியர் 5:27

சபைக்கு சமுதாயத்தில் நற்கீர்த்தி
ஏற்படுகிறது. அப்போஸ்தலர் 2:46 – 47,
அப்போஸ்தலர் 5:11 – 14.

தேவன் மகிமைப்படுகிறார்
எபேசியர் 5:21
I தீமோத்தேயு 3:15.

# சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது ( எபி. 13:1)

## Let Brotherly Love Continue (Hebrews 13:1)

Cecil May Jr.



இவ்வசனப்பகுதியில் **சகோதர சிநேகம்** என்று மொழி பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கும் இந்த தமிழ் வார்த்தை **Philadelphia** என்றழைக்கப் படுகிறது. இதே பெயரை அதாவது **Philadelphia**'' என்னும் பெயரைக் கொண்ட பட்டணம் அமெரிக்காவில் இன்றும் உள்ளது. இது இரண்டு வார்த்தை களை உள்ளடக்கிய கூட்டு வார்த்தையாகும். ஒரு வார்த்தை ஒரு விதமான அன்பு க்கும், மற்றொரு வார்த்தை சகோதரத் துவத்துக்கும் பயன் படுத்தப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் "Agape" என்னும் கிரேக்க வார்த்தை பொதுவாக அன்பைப் பற்றி பேசுகிறது. இவ்விதமான அன்பு யாரிடத்தில் அது காட்டப் படுகிறதோ அவர்களிடமிருந்து எந்த கைம்மாறையும் எதிர் பார்க்காது [ரோமர் 5:8]. மேலும், இவ்விதமான அன்பை மற்றவர் களிடத்தில் காட்டும் ஒருவர் அந்த நபரிடமிருந்து சௌகரிய மான உணர்வை மட்டும் எதிர் பார்க்காமல் அல்லது வெறுமனே மென்மையான உறவை மட்டும் கொள்ளாமல் அந்த நபருக்கு நன்மை செய்ய வேண்டுமென்று விருப்பமுள்ளவராயிருக்கிறார். [மத்தேயு 5:44– 45].

ஆனால் ''Phile'' எனும் கிரேக்க பதம் நட்பு, சகோதர சிநேகத்தைக் குறிக்கிறது. இவ் வகையான உறவு இருப்பதற் கான காரணம் இவ்வுறவில் அங்கம் வகிப்பவர்கள் ஒருவரி லொருவர் மகிழ்ச்சி அடை கிறார். அதேபோல் ஒருவர் மற்றவரில் திருப்தி அடை கிறார்கள். வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் மற்றவரிடம் ஏதோ ஒன்றை எதிர்பார்த்துதான் பழகுகிறார். மத உலகிற்கு வெளியே விளையாட்டு நண்பர்களையும் பொழுதுபோக்கு மீன்பிடி நண்பர்களையும் பார்க்கிறோம்.

இங்கே கவனிக்கவும். ஜனங்கள் தனியாக ஒரு காரியத்தை செய்வதைக் காட்டிலும் கூட்டாக அனுபவித்து செய்வதையே விரும்புகிறார்கள். அதிலேயே அதிக மகிழ்ச்சி அடைகிறார்கள். ஒரு காரியத்தை பொதுவாக வைத்து அனுபவிப்பதன் விளைவாக, அவர்கள் ஒருவரிலொருவர் அன்புகூருகிறார்கள்.

ஒரு பிரசங்கியர் ஒற்றுமையைக் குறித்து அதிகமாகப் பிரசங்கிப்பதுண்டு. ஒருமுறை அவர் பிரசங்கிக்கும் போது உபதேசம் பிரிக்கிறது. அன்பு இணைக்கிறது. எனவே, நாம் உபதேசத்தை மறந்துவிட்டு ஒருவரிலொருவர் அன்புகூருவோம் என்று சொன்னார். அது முற்றிலும் தவறானது.

எனக்கு இருக்கும் அனுபவத்தைப் போல் உங்களுக்கும் இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு பெரிய கூட்டத்தில் எதேச்சையாக ஒரு சக கிறிஸ்தவரை அல்லது நம்முடைய வழக்கத்தின்படி ''சபை அங்கத்தினர்'' ஒருவரைப் பார்த்தால் நம்மை அறியாமலேயே அவர் மீது ஒரு விருப்பமும், மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. ஆனால், இதே உணர்வு கூட்டத்தில் மற்றவர் களைப் பார்க்கும்போது ஏற்படுவதில்லை அப்படித் தானே? அந்த கூட்டத்திற்குப் பிறகு நாம் ஒருவரையொருவர் மறுபடியும் சந்திக்கும்போது, நாம் அமர்ந்து அளவளாவுகிறோம் உணவு உண்கிறோம். இப்போது கேள்வி நம்மை எது ஒன்றிணைத்துக் கொண்டு வந்தது? சகோதர சிநேகமாகிய ''Phile'' தான் நம்மை ஒன்றினைந்தது. ஆனால், எது சகோதர சிநேகத்தை உண்டாக்கியது? நாம் பொதுவாக பகிர்ந்து கொள்கிற விசுவாசத்தைவிட வேறு எதுவாக இருக்க முடியும்?

கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் நம் சகோதர, சகோதரிகளிடத்தில் நாம் கொள்ளும் அன்பு நாம் அந்நியர்களிடத்திலும், சத்துருக்களிடத்திலும் கொள்ள வேண்டிய அகாபே அன்பு அல்ல. மாறாக, பரஸ்பர பாசத்தையும், ஒரு காரியத்தை கூட்டாக, செய்வதினால் கிடைக்கும் சந்தோஷத்தையும் உள்ளடக்கிய ''Philadelphia'' எனும் சகோதர சிநேகமாகும். இந்த சகோதர சிநேகத்தால் தான் நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்கிறோம். கர்த்தருடைய நாளிலே ஒன்றுகூடி கர்த்தருடைய பந்தியிலே பங்கெடுக்கிறோம் என்பவைகளை அடிப்படையாகக் கொண்டது. ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் இவைகளெல்லாம் கிறிஸ்தவர்களுக்குப் பொதுவானவைகள்.

ஒருமுறை நான் ஒரு ஹோட்டலுக்குச் சென்றிருந்தேன். அங்கே இரண்டாம் உலகப்போரில் பணியாற்றிய விமானப்படை வீரர்கள் ஒன்றுகூடல் நிகழ்வில் பங்கேற்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்கள். அங்கே அன்பையும், பரஸ்பர மரியாதையையும், நட்பின் உச்சத்தையும் அதன் உன்னத நிலையில் காண முடிந்தது. கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கம் வகிக்கும் கிறிஸ்தவர்கள் அன்பையும், அக்கறையையும் இவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். நாம் உபதேசத்தை மறந்துவிட்டால் நாமும் இவ்விதமான அன்பையும், நட்பையும் வெளிப்படுத்த முடியும். அப்படிச் செய்தால் அது கிறிஸ்தவமுமல்ல, சபையும் அல்ல. இது மீட்கப்பட்டவர்களின் ஐக்கியமும் அல்ல.

அன்பும், உபதேசமும் இரண்டும் அவசியமானவைகள். ஆனால், நாம் பகிர்ந்து கொள்ளும் பொதுவான விசுவாசமும், உபதேசமுந்தான் சகோதர சகோதரிகளாக நாம் அனுபவிக்கும் சிறந்த அன்பை உண்டாக்குகிறது.

✝

---

## கிறிஸ்துவின் சபை இவ்விதமாகவும் அழைக்கப்படுகிறது.

1. தேவனுடைய சபை I கொரிந்தியர் 1:2; I தீமோத்தேயு 3:15
2. முதற்பேறானவர்களின் சர்வசங்கம் (எபிரெயர் 12:23)
3. கிறிஸ்துவின் மணவாட்டி (II கொரிந்தியர் 11:2)
4. தேவனுடைய வீடு (எபிரெயயர் 3:6)
5. ஜீவனுள்ள தேவனுடைய சபை (I தீமோத்தேயு 3:15)
6. சபை (அப்போஸ்தலர் 8:1)
7. மந்தை (அப்போஸ்தலர் 20:28).

## ஒன்று மற்றொன்றைப் போலவே இருக்கிறதா?

## One as Good as Another?

Bill Dillon

இருவர் தாங்கள் புதிதாக வாங்கிய வாகனத்தின் நன்மைகளை பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தனர். நகைச்சுவை கலந்த அந்த உரையாடலில் ஒவ்வொருவரும் ஏன் தன்னுடைய வாகனம் மற்றவருடைய வாகனத்தை விட சிறந்தது என்பதற்கான காரணங்களை எடுத்து சொல்லிக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக அவ்விருவருக்கும் தெரிந்த நண்பர் ஒருவர் கடந்து சென்றார். அவரை அவர்கள் தங்கள் நட்பு ரீதியிலான விவாதத்தில் சேர்த்துக்கொள்ள முயற்சித்தார்கள். அவ்விருவரும் அந்த நண்பரிடம் ''இந்த வாகனங்களில் நீங்கள் எதை வைத்துக்கொள்ள விரும்புவீர்கள்'' என்று கேட்டார்கள்.



அவர்களுடைய வாக்குவாதத்தில் சிக்கிகொள்ள விரும்பாத அந்த நண்பர் எனக்கு இதைப்பற்றி தெரியாது. இரண்டும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது'' என்று யூகிக்கிறேன் என்றார்.

எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது? ஒரு வேளை சில காரியங்கள் ஒரே மாதிரியாக இருக்கலாம். ஆனால், நிச்சயமாக ஒன்றைப்போன்று மற்றொன்று எல்லா வற்றிலும் இருக்காது. ஒரு கணவன் அல்லது மனைவி போல் மற்றவர்கள் இருப்பார்களா? ஒரு வீட்டைப்பபோலவே மற்றொரு வீடு இருக்குமா? ஓர் உணவைப் போலவே மற்றொரு உணவு இருக்குமா?

வேதாகமம் இயேசு கிறிஸ்து தம்முடைய ஒரே சபையைக் கட்டினாரென்றும், தம் சுய இரத்தத்தினாலே சபையை வாங்கினா ரென்றும் போதிக்கிறது [அப்போஸ்தலர் 20:28]. இந்த சபையைக் குறித்துதான் நாம் கவலைப்பட வேண்டும். ஒருவர் இயேசு கிறிஸ்து வினிடத்திலுள்ள தன் அன்பை வெளிப்படுத்தி, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது இந்த சபையில் சேர்க்கப் படுகிறார். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? கர்த்தருடைய சபையிலா அல்லது வேறு எதாவது சபையிலா? ✝

## வாழ்வதற்கான உபதேசம்

# கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுதல்

# Calling on The Lord

Owen D. Olbricht

**ஒ**ருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லப் பெரும்பாலான பிரசங்கியார்களால் மேற்கோள்காட்டப்படும் பிடித்தமான வசனப்பகுதி, அப்போஸ் தலனாகிய பவுலால் யோவேல் புத்தகத்திலிருந்து மேற்கோள்காட்டப் பட்டிருக்கிற வசனம் ரோமர் 10:13 ல் இடம் பெற்றிருக்கிறது. பேதுருவும் கூட இந்த வசனப்பகுதியை பெந்தேகொஸ்தே நாளில் மேற்கோள் காட்டியிருக்கிறார் (அப்போஸ்தலர் 2:21).

### பெந்தேகொஸ்தே நாளில் யூதர்கள்

அப்போஸ்தலனாகிய பேதுரு கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று யோவேலால் சொல்லப்பட்ட வார்த்தைகளை மேற்கோள் காட்டி கர்த்தருடைய நாமத்தில் ஜெபிக்கும்படியாக அவர்களை கேட்டுக் கொள்ளவில்லை. மாறாக, மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று தான் சொன்னார் (அப்போஸ்தலர் 2:38).

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்றால் **ஜெபித்தல்** என்று பொருள்படாது. அப்படியிருந்திருந்தால் பேதுரு அவர்களிடம் பாவியின் **ஜெபத்தை** செய்யும்படி சொல்லியிருப்பார். உண்மையில் பாவியின் ஜெபம் என்று வேதாகமத்தில் நாம் எங்குமே காண முடியாது. இங்கே பேதுரு கிறிஸ்துவை விசுவாசித்தவர் களிடத்தில் மனந்திரும்பி ... இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞாஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று தான் சொன்னார்.

### கொர்நேலியு

தேவதூதன் பேதுருவிடம் யோப்பா பட்டணத்திலிருக்கிற பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைக்கும்படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டான். மேலும், தேவ தூதன் நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான் (அப்போஸ்தலர் 11:14). பேதுரு கொர்நேயுவின் வீட்டிற்கு வந்த போது அவர் அந்த வீட்டாருக்கு இயேசுவைப் பிரசங்கித்தார். அப்போது புறஜாதியாரும் யூதர்களைப் போலவே இரட்சிக்கப்பட

முஜயும் என்பதைக் காட்டுவதற்காக பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார் (அப்போஸ்தலர் 15:7-9), அப்போது பேதுரு அவர்களை ஜெபிக்கச் சொல்வதற்குப் பதிலாக கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான் (அப்போஸ்தலர் 10:48).

## பவுல்

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பவுலுக்கு தரிசனமான போது அவர் பவுலிடம், நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். (அப்போஸ் தலர் 9:6) பவுல் அந்த தமஸ்கு பட்டணத்துக்குள்ளே போய் மூன்று நாட்கள் புசியாமலும், குடியாமலும் ஜெபித்துக் கொண்டிருந்தார் (அப்போஸ்தலர் 9:9-11).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அனனியாவை பவுலிடத்தில் அனுப்பினார். அனனியா பவுலினிடத்தில் வந்த போது அவர் பவுலை தொடர்ந்து ஜெபிக்கும்படியாகச் சொல்லவில்லை. மாறாக, இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போக்கி கழுவப்படு என்றார் ( அப்போஸ்தலர் 22 :16 ). பவுல் மூன்று நாட்கள் ஜெபித்ததினால் அவருடைய பாவங்கள் கழுவப்படவில்லை. மாறாக, அவர் கர்த்தருடைய நாமத்தில் வேண்டுகோள் விடுத்துக்கொண்டு அவர் ஞானஸ்நானம் பெற்ற போது தான் பாவங்கள் கழுவப்பட்டன.

## நம் வேண்டுகோள்

நாம் ஞாஸ்நானம் பெறும்போது, நம் மன்னிப்பு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இருக்கிறது. இதன் பொருள் மன்னிப்புக்காக நம் வேண்டுகோள் அவருடைய அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இவை எல்லாவற்றையும் நாம் அவருடைய அதிகாரத்தின்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இருக்க வேண்டியதற்கான காரணம் அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை (அப்போஸ்தலர் 4:12).


நம் ஞானஸ்நானம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அவருடைய அதிகாரத்தால் இருந்தால், அது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் இருக்கும். ✝

வாழ்வதற்கான உபதேசம்

# மீட்டமைப்பு வேண்டுகோளின் உண்மைத்தன்மை

# The Validity of the Restoration Plea

Jim Howard



இன்றைய நாட்களில் மீட்டமைப்பு வேண்டுகோளின் உண்மைத்தன்மை நம் சகோதரத்துவத்தின் மூலை முடுக்கெல்லாம் கேள்விக்குறியாகிவிட்டது. இந்த இயக்கத்தில் வளர்ந்த பெரும் பாலானோர் சபைக்காகத் தேவனால் கொடுக்கப்பட்ட மாதிரி மாற்றப்பட்டதைப் பார்த்தும் புதிய ஏற்பாட்டு உபதேசம் இழந்து போனதைத் மறக்கப்பட்டதை அல்லது திரிக்கப் பட்டதைக் கண்டு பொறுக்கக் கூடாமல் தாங்கள் போராடுவது மாத்திரமல்லாமல் மற்றவர்களையும் போராட வைக்கின்றனர். அந்த புரிந்து கொள்ளுதலுக்காக இன்னும் சொல்லப்பட வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கின்றன.

இன்றைய நடைமுறை மனப்பான்மை நிறைந்த உலகிலே மீட்டமைப்பு வேண்டுகோளின் நடைமுறை, ஒழுக்க நெறிகளால் நாம் நினைப்பூட்டப்பட வேண்டும். அந்த வேண்டுகோள் இது நன்றாக வேலைச் செய்வதினால் உண்மையாயிருப்பதில்லை. இன்றைய நாட்களில் கிறிஸ்தவத்தை பிடித்துக் கொண்டிருக்கும் பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு அருமருந்தாய் இருப்பதனால் இந்த இயக்கம் உண்மையாயிருக்கிறது. இவ்வுண்மையின் மூன்று விதமான விளக்கங்களை கீழ்க்கண்டவாறு நாம் காணலாம்.

**I சபை சுதந்தரத்தைப்பற்றிய மீட்டமைப்பு இயக்கத்தின் வலியுறுத்தல் கிறிஸ்துவுக்குள் நமக்கிருக்கும் சுதந்திரத்தைப் பாதுகாத்திருக்கிறது.**

மீட்டமைப்பு இயக்கத்தினால் பிராந்திய சபைகள் வழிவிலகிச் செல்லுதலிலிருந்து காக்கப்படுவது மாத்திரமல்ல, ஒவ்வொரு

சபையும். அதன் தனித்துவத்திலும் இறையியல் தன்மையைக் கொண்டுள்ளது. ஒரு சீஷனோ அல்லது சீஷியோ ஒரு ஐக்கியத்தில் மகிழ்ச்சியாயில்லை என்றால் தங்களுக்குப் பிடித்தமான வேறொரு சபையாரிடத்தில் தன்னை இணைத்துக் கொள்ள முடியும்.

**II முதல் நூற்றாண்டு ஆராதனை முறையை மறுபடியும் கொண்டு வர வேண்டும் எனும் மீட்டமைப்பு இயக்கத்தின் முயற்சி தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சிக்கு சாதகமானது என்று நிரூபணமாகியுள்ளது.**

நம் இருதயத்தில் பாடிக் கீர்த்தனம் பண்ணி என்று நாம் வேதத்தில் வாசித்தால் [எபேசியர் 5:19]. நம் ஒட்டு மொத்த ஈடுபாடும் அதிலிருந்தால் தான் நம் இருதயத்தில் பாடி கீர்த்தனம் பண்ண முடியும். இசைக் கருவிகளை பாடல் வேளையில் பயன்படுத்தினால் முழு ஈடுபாட்டையும் கொடுக்க முடியாது. மனதில் நியமித்தபடி உற்சாகமாகக் கொடுத்தல் தனிப்பட்ட ரீதியில் தியாகத்தைப் போதிப்பதற்கு மிகச்சிறந்த உதாரணமாகும். கேக் விற்பனை, கார் கழுவுதல் போன்றவைகள் மூலமாக காணிக்கை சேர்ப்பது உசிதமாகாது [II கொரிந்தியர் 9:7].

**III புதிய ஏற்பாட்டு சபை எப்படி தகுதி பெற்ற மூப்பர்களை கொண்டிருந்தோ அதையே இப்போதுள்ள பிராந்திய சபைகளில் நடைமுறைப் படுத்துவதன் மூலமாக மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளுக்கு மேலாக நிற்கிறது.**

ஒரே **மேய்ப்பன்** எனும் கொள்கையுடைய ஆளுகை அமைப்பில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஞானம் பகிரப்படாத காரணத்தால் அது சிறந்த ஆளுகை அமைப்பாக இருக்காது. [சினாட்கள், சபைத் தலைமையகங்கள் மூலமாக கண்காணிக்கப்பட்டு ஆளுகை செய்யப்படும் சபைக்கும் தனிப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் இடையே கசப்புணர்வுதான் அதிகமாகும். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தின் மீட்டமைப்பு இன்றும் வேலை செய்கிறது. அந்த கொள்கைக்கு நாம் உண்மையாயிருப்போம். ✝

---

## உக்கிராணத்துவம்

**நம் பிள்ளைகள் உறவுகள், நண்பர்கள், வீடு தோட்டம் பெற்றோர் விட்டுச் சென்ற உடைமைகள், இயற்கையின் பொருள்கள் செல்வங்கள் இன்னும் கிருபை உட்பட இவைகளெல்லாம் நமக்கு கடனாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக்கடன் நம்மிடம் திரும்பக் கேட்கப்படும்போது நாம் கோபப்படுகிறோம். நம்மை நாம் எஜமான்களாக எண்ணிக் கொள்கிறோம். நாம் வெறும் உக்கிராணக் காரர்கள்தான், ஒரு நாளில் நம் உக்கிராணத்துவத்திற்கான கணக்கை தேவனிடத்தில் ஒப்புவிக்க வேண்டும்.**

வாழ்வதற்கான உபதேசம்

# சத்தியம் முக்கியமானதா?

# Does Truth Matter

Bobby Key

ஒரு காலத்தில் நாம் வாழும் இடத்திலிருந்து மிகத் தொலைவி லிருந்த ஒரு பட்டணத்தில் இரண்டு பேர் வாழ்ந்தார்கள். அவ்விரு வரும் மிகவும் பக்தியாயிருந்தார்கள். இருவரும் தேவ பயம் உடயவர்களாயிருந்தார்கள். இருந்தபோதிலும் அவர்களுடைய அயலகத்தார் புதியவர்களிடம் அவ்விருவரை பற்றிச் சொல்லும் போது அவர்கள் விசித்திரமானவர்களென்று சொல்லி வந்தார்கள். மேலும், அந்நாட்களில் வாழ்ந்த பிரபலமான மதத்தலைவர்கள் இவ்விரு வரையும் அறவே வெறுத்தார்கள்.

இவ்விருவரில் முதல் நபரை அவருடைய வாயின் வார்த்தை களின் ஏதாவது பிழை கண்டுபிடிக்க துடித்தார்கள் (லூக்கா 11:54). அவருடைய நோக்கங்களை தவறாக தீர்ப்பு செய்தார்கள் யோவான் 8:43; 10:20). அந்த நபர் நம் ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்து** தான். கடைசியாக அவரை அந்த கோரக்குருசில் கொலை செய்தார்கள்.

நாம் பார்க்கும் அடுத்த நபர் வேறொரு மார்க்கத்திலிருந்து கிறிஸ்து மார்க்கத்தை தழுவினார். ஊழியத்தின் பாதையில் அவருடைய ஆரம்பம் நன்றாக அமையவில்லை. அவர் நியாயப் பிரமாணத்தின் காரியங்களை அந் நாட்களில் வாழ்ந்த மிகச்சிறந்த வேத வல்லுநர்களிடம் கற்றார். யூத மதத்தலைவர்கள் சத்தியத்தை விட அரசியலில் அதிக அக்கறை காட்டிய படியால் இவரை சத்துரு என்று அழைத்தார்கள் (கலாத் தியர் 4:16). இந்த நபரை பலமுறை கொல்ல முயற்சித்தார்கள் (அப்போஸ்தலர் 23:12)



இவரை ரோம சாம்ராஜ்யம் முழுவதும் துரத்தினார்கள். சிலர் இவரை பைத்தியம் பிடித்தவர் என்று சொன்னார்கள் [II கொரிந்தியர் 5:13]. அவர் தான் அப்போஸ்தலனாகிய பவுல்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், பவுலும் உலகத்துக்கு ஒத்த வேஷம் தரித்திரித்திருந்தால் இவ்வுலகில் மிகப்பெரிய பதவிகளை வகித்திருக்கலாம், இன்னும் அதிகப் புகழை பெற்றிருக்கலாம். இருந்த போதிலும், இவ்விருவருக்கும் புகழை விட சத்தியம் முக்கியமாக இருந்திருக்கிறது. சத்தியம் எப்போதுமே புகழ் பெறுவதில்லை, ஆனால், சத்தியம் எப்போதுமே சத்தியமாகவே இருக்கிறது. ஒட்டுமொத்த உலகமும் நிராகரித்தாலும் கூட சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது! உங்களுக்கு சத்தியம் எவ்வளவு முக்கியமாக இருக்கிறது?

## உங்களுக்குத் தெரியுமா?

**தேவனுடைய வார்த்தைகளை உள்ளடக்கிய வேதாகமம் ஏறத்தாழ 1600 வருடங்களாக நாற்பது மனிதர்களைக் கொண்டு எழுதப்பட்டது. இந்த மனிதர்கள் வித்தியாசப்பட்ட தொழில்களை செய்கிறவர்களாக இருந்தார்கள். எழுத்தாளர்களில் சிலர் மீன்பிடிக்கிறவர்களாக இருந்திருக்கிறார்கள். சிலர் ராஜாக்களாக இருந்திருக்கிறார்கள். கல்லாதவர்களும் இருந்திருக்கிறார்கள் கல்விமான்களும் இருந்திருக்கிறார்கள். இருந்த போதிலும், வேதாகமம் பிழையே இல்லாத ஒருங்கமைவைப் பெற்ற புத்தகமாயிருக்கிறது. இதை தேவனால் மாத்திரமே சாத்தியமாக்க முடியும் [II தீமோத்தேயு 3:16,17, II பேதுரு 1:20,21].**

## வாழ்வதற்கான உபதேசம்

# ஒற்றுமையும், உபதேசமும்

# Unity and Doctrine

Ben Jones

ஒற்றுமை என்பது எல்லோராலும் விரும்பப்பட்டாலும் கூட, அது கிடைக்கக்கூடாத அரிதான ஒன்றாகி விட்டது. ஒற்றுமையை ஏற்படுத்த பல முயற்சிகள் பல விதங்களில் கையாளப்பட்டாலும் இறுதியில் பெரும்பாலும் அது தோல்விலேயே போய் முடிகிறது. துரதிஷ்டவசமாக, உபதேசமும் கூட பிரிவினையை உண்டாக்கும் சத்துருக்களினால் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. நவ நாகரீகத்திற்கு பிந்தைய இந்தக் காலகட்டத்தில் உபதேசமானது பெரும்பாலும் இரண்டாம் பட்சமாக பார்க்கப்படுகிறது. இது மத ஒற்றுமைக்குத் தடையாக இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் உபதேசத்துக்கும், ஒற்றுமைக்கும் இடையே உள்ள தொடர்பை பதிவு செய்திருக்கிறார். எபேசியர் புத்தகம் இரு பிரிவுகளாக உள்ளது. 1–3 அதிகாரங்கள் கிறிஸ்து சபைக்காக என்ன செய்தாரோ அதை மையப்படுத்துகிறது. 4–6 அதிகாரங்கள் அதற்கு கைமாறாக சபை அவருக்கு என்ன செய்ய வேண்டுமென்பது மையப்படுத்தப் பட்டிருக்கிறது. எபேசியர் 4:1–6 வசனங்கள் இரு பிரிவுகளையும் பிரிக்கும் பாலமாகத் திகழ்கிறது. கிறிஸ்துவில் மனித இனம் ஆவியின் ஒருமைக்குள் அழைக்கப்படுகிறது. இது தேவனுடைய நித்திய மீட்பின் திட்டத்தில் முழுமையாக உணரப்படும் பரிபூரண ஐக்கிமாகும். கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரமாக நடந்து கொள்ளும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்'' [எபேசியர் 4:3].

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதியில் அடையாளப் படுத்தப்பட்டிருக்கிறபடி, மெய்யான ஒற்றுமை என்பது தேவனால் உண்டாக்கப்பட்ட ஒன்றாகும். மனிதனால் அல்ல. ஒரு விதத்தில் பார்த்தால் ஒற்றுமை என்பது தேவனுடைய கிருபைக்கு நாம் அளிக்கும் பதிலினால் விளையும் ஒரு காரியமாகும். இதற்கு ஒரு கிறிஸ்தவர் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டுமென்றால், வேலைக்காரனின் கீழ்ப்படியும் குணாதிசயம் மற்றும் எஜமானின் உபதேசம் இரண்டு காரியங்களும் அவசியமாகின்றன.

அதாவது, ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் வளர்க்கப்பட வேண்டிய கிறிஸ்துவைப் போன்ற குணாதிசயங்களை பவுல் பட்டியலிடுகிறார். அவைகள் தாழ்மை, சாந்தம், பொறுமை, சகிப்புத்தன்மை மற்றும் ஜாக்கிரதை போன்றவைகளாகும். தன் விருப்பப்படி செய்கிற ஒரு கிறிஸ்தவர் எப்போதுமே கடுங்கோபம் கொள்ளும் ஒரு கிறிஸ்தவர், ஒருவர் மீது கசப்புணர்வை தன் மனதில் வைத்துக்கொள்ளும் ஒரு கிறிஸ்தவர், பிரச்சனை என்று வந்துவிட்டால் ஆரம்பத்திலேயே வெளியேறுவது போன்ற குணாதிசயங்களைப் பெற்றிருந்தால் சபைக்கு அவர் ஒரு சீர்குலை வாகத்தான் இருப்பார்.



இரண்டாவது, அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவ விசுவாசத்தின் அஸ்திபாரத்தை உருவாக்கும் தனித்துவம் வாய்ந்த புதிய ஏற்பாட்டு உபதேசங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். அவைகள் ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன், **ஒரே** என்றிருக்கிற இந்த ஏழு காரியங்களும்தான் தேவனுடைய ஜனங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒற்றுமையின் மாதிரியாகவும், முறையாகவும் இருக்கிறது. ஒரே எனும் வார்த்தையின் விளக்கம் தனித்துவம் வாய்ந்ததும் பிரத்யேகமானதுமாயிருக்கிறது. இதன் பொருள் ஒன்றே ஒன்றுதான் என்பதாயிருக்கிறது. பல வித்தியாசமான நம்பிக்கைகளை உடையவர்களிடத்தில் கிறிஸ்தவர்களால் அன்பாகவும், மரியாதை யாகவும் நடந்து கொள்ள முடியும். ஆனால், அவர்களிடத்தில் ஒற்றுமையாயிருப்பதற்கு இசைந்த மனப்பான்மையும், சத்தியத்திற்கு அர்ப்பணிப்பும் அவசியமாயிருக்கிறது.

உதாரணமாக, நம்பிக்கையை எடுத்துக்கொள்ளுங்கள். புதிய ஏற்பாட்டில் நம்பிக்கை என்பது மெய்யாகவே ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான உறுதியான எதிர்பார்ப்பை உள்ளடக்கிய ஒன்றாகும். ஒரு கிறிஸ்தவனின் நம்பிக்கை பரலோகத்தில் நித்திய ஜீவனா யிருக்கிறது. இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் [I பேதுரு 1:4] மற்றும் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மாறாத தன்மை போன்றவைகளில் ஊன்றக் கட்டப்பட்டுள்ளது [எபிரெயர் 6:18–20]. இந்த உண்மைகள் இல்லாத பட்சத்தில் நம்பிக்கை என்பது வெறுமனே பகல் கனவை விட சற்று மேலான ஒன்றாகத்தான் இருக்கும்.

உண்மையான ஒற்றுமை என்பது மற்றவர்களோடு இசைந்து போவதை விட மேலான ஒன்றாகும். இது கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கான ஒரு நோக்கமுள்ள அர்ப்பணிப்பாகும். ஒற்றுமைக்கான பாதை தேவனை அறியும் ஆசையிலும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதிலும் ஆரம்பமாகிறது. வேதாகமம் சரியானது என்பதை நாம் ஒத்துக்கொள்ளும் போது ஒற்றுமைக்கு எதிராக இருக்கும் தடைக்கற்களை நாம் தகர்த்தெறிவோம். ✝

## வேதாகம பிரசங்கியர்கள்

- ஆத்துமாக்களை நேசித்தபடியால் சத்தியத்தை பேசியிருக்கிறார்கள் (கலாத்தியர் 4:16)
- நித்திய பொக்கிஷத்தை நமக்கு சுட்டிக் காட்டுகிறார்கள் (மத்தேயு 6:19-21).
- பாவம் நியாயத்தீர்ப்பு நரகம் போன்றவைகளைக் குறித்து எச்சரித்திருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 24:25).
- கிறிஸ்துவை பின்பற்றுவதால் துன்பத்தை எதிர்பாருங்கள் என்று பிரசங்கித்தார்கள் (II தீமோத்தேயு 3:12).

## செயலில் கிறிஸ்தவம்

## நம்பிக்கையற்ற நிலை? வேகமாக இல்லை.

## Hopeless? Not So Fast

Steve Higginbotham

Harrison Okene என்பவர் நைஜீரியா நாட்டைச் சேர்ந்தவர், அவர் எதிர்பாராத விதமாக ஒரு நம்பிக்கையற்ற சூழ்நிலையில் தன்னை கண்டார். அவர் பயணித்த இழுவைப்படகு கொடூரமான அலைகளினால் கவிழ்ந்து போனதால் சமுத்திரத்தின் அடித்தட்டிற்கு இழுத்துச் செல்லப்பட்டார். Harrison கடலின் ஆழத்தில், முழுமையான இருளில், வழிதப்பி, தனிமையில் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தார். அது மாத்திரமல்ல கடுங்குளிரில் தடுமாறிக்கொண்டிருந்தார். அவர் சுமார் 60 மணி நேரம் ஒட்டு மொத்த இருளில் கடுங்குளிரில் நடுங்கிக் கொண்டு படகில் தன்னோடு பயணித்த சக குழுவினரின் உடல்களை மீன்கள் தின்பதை பார்த்துக் கொண்டே நேரத்தை செலவழித்தார். இவருடைய ஆக்ஸிஜன் இருப்பும் தீரும் தருவாயில் இருந்தது.

அதன்பிறகு, ஆக்ஸிஜன் இருப்பும் தீர்ந்துவிட்டது. அப்போது ஓர் ஆச்சரியமான காரியம் நடந்தது. நீருக்குள் மூழ்கி ஜனங்களை காப்பாற்றும் ஒருவர் இவருக்கு முன்பாகத் தோன்றினார். Harrison -க்கு ஆக்ஸிஜன் கொடுக்கப்பட்டு நீருக்குள் மூழ்கி மூச்சு திணறுகிறவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் அறைக்கு கொண்டு செல்லப்பட்டு மேற்பரப்புக்கு அழைத்து செல்லப்பட்டு இவ்விதமாக மரணத்தின் பிடியிலிருந்து தப்பினார். நம்பிக்கையற்ற நிலைபோல் தோன்றியது. இறுதியில் காப்பாற்றப்படுவதில் போய் முடிந்தது. இப்போது Harrison தான் எப்படி காப்பாற்றப்பட்டார் என்பதை மற்றவர்களுக்கு சொல்வதற்காகவே உயிரோடு வாழ்கிறார்.

நீங்கள் எப்போதாவது ஆவிக்குரிய பிரகாரமாக நம்பிக்கையற்ற நிலையில் இருப்பதாக உணர்ந்திருக்கிறீர்களா? தேவனுடைய இரட்சிக்கும் கிருபைக்கு அப்பால் சென்றுவிட்டதாக நீங்கள் உணர்கிறீர்களா? அப்படியென்றால், ஒரு

காரியத்தை உங்களுக்கு நான் நினைவுபடுத்துகிறேன். குடித்துவிட்டு குடும்பத்தில் உள்ளவர்களோடு தகாத உறவு கொண்ட லோத்,பொய் சொன்ன வேசி (ராகாப்), கொலைகார விபசாரக்காரன் (தாவீது) சபையை துன்படுத்திய (சவுல்) போன்றவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு அவர்கள் மாபெரும் மனிதர்களாக, விசுவாச வீரர்களாக காணப்படுகிறார்கள். அப்படியானால் உங்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது!

Harrison தண்ணீரின் ஆழத்திலிருந்து மேலே வந்து, தன்னைக் காப்பாற்ற கரங்களை நீட்டியவர்களின் கரங்களை தொட்டபோது எப்படிப்பட்ட சந்தோஷத்தையும், நம்பிக்கையையும் அனுபவித் திருப்பார் என்பதை கற்பனை செய்து பாருங்கள்! நம்பிக்கையற்ற நிலையிலிருந்து நம்பிக்கை! அதேபோல் ஒரு பாவி பாவச்சேற்றில் சிக்கித் தவித்து, இரட்சகரின் கைகளை பற்றிக் கொள்ளும்போது அந்த நபருக்கு ஏற்படும் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் கற்பனை செய்து பாருங்கள்! நம்பிக்கையற்ற நிலையிலிருந்து நம்பிக்கை!

தேவனால் இரட்சிக்கப்பட்டு இப்போது ஜீவனைப் பெற்றிருக்கிற நம் ஒவ்வொருவரும், அதைப்பற்றி மற்றவர்களிடம் சொல்லுங்கள்! நம்பிக்கையற்ற நிலையிலிருந்து எப்படி தேவன் உங்களை மீட்டு நம்பிக்கையைக் கொடுத்தார் என்பதை மற்றவர்களுக்கு சொல்லுங்கள்! **கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்படுவார்கள், அப்படிச் சொல்லுவோம்.** (சங்கீதம் 107:2). ✝

---

**பிறருக்கு நன்மை செய்தல்**

நாம் மகிழ்ச்சியாக இருக்கும்போது வாழ்க்கை நன்றாக இருக்கும். ஆனால், மற்றவர்கள் நம்மால் மகிழ்ச்சியாக இருக்கும்போது வாழ்க்கை இன்னும் சிறந்ததாக இருக்கும். நீங்கள் மற்றவர்களுக்கு செய்யும் நன்மைகளுக்கு ஒருவேளை அவர்கள் உங்களுக்கு கைம்மாறு செய்யாமலிருக்கலாம், அல்லது நீங்கள் செய்யும் நன்மைக்கு ஒரு நன்றிகூட சொல்லாமலிருக்கலாம். ஆனால், தேவன் எல்லாவற்றையும் கணக்கில் வைத்து நமக்கு நன்மை செய்வார். ஆகையால், நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக (கலாத்தியர் 6:9).

## செயலில் கிறிஸ்தவம்

## அவர் தொடர்ந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்

# He Kept Preaching the Gospel

Wayne Brewer



புதிய ஏற்பாட்டில் மிகவும் குறிப்பிடத் தக்க நபர்களுள் ஒருவர் பிலிப்பு. அவர் சபை அங்கத்தினர்கள் மத்தியில் நற்சாட்சி பெற்றவராக இருந்தார். அவர் எருசலேமில் பந்தி விசாரணை செய்யும்படியாகத் தெரிந்து கொள்ளப்பட்டார் [அப்போஸ்தலர் 6:25]. பிலிப்பு அன்றாட விசாரணையில் விதவைகள் திட்டமாய் விசாரிக்கப் பட வில்லை என்பதில் அதிக அக்கறை காட்டியபடியால் கர்த்தருக்கும், சபைக்கும் தான். ஒரு சிறந்த தாசன் என்பதை நிரூபித்துக்காட்டினார் [அப்போஸ்தலர் 6:1] பந்தி விசாரணை செய்வது குறைந்தது இரண்டு காரணங்களுக்காக முக்கியமான வேலையாக இருக்கிறது. பந்தி விசாரணைக்கு ஆட்களை நியமிப்பதால் அப்போஸ்தலர்கள் தங்கள் பணியான சுவிசேஷப் பிரசங்கத்தை எவ்வித தடையுமின்றி செய்யலாம் [அப்போஸ்தலர் 6:2]. இரண்டாவது, திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும் உலகத்தால் கறைப்படாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது [யாக்கோபு 1:27].


சில வருடங்களுக்குப் பிறகு அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள் [அப்போஸ்தலர் 8:1], அப்படி எருசலேமை விட்டு வெளியேறியவர்களில் பிலிப்பும் ஒருவர். லூக்கா ஆசிரியர் நமக்கு இவ்விதமாகச் சொல்கிறார். அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான் என்று [அப்போஸ்தலர் 8:5]. பிலிப்பென்பவர் கவனிக்கத்தக்க மனிதர். ஏனென்றால், அவர் யூதர்களால் அதிகமாக வெறுக்கப்பட்ட உதாசினப்படுத்தப்பட்ட சமாரியர்களிடத்திற்குப் போனார். அதன் பலன்கள் மிகவும் உற்சாகமூட்டுவதாக இருந்தது.

ஏனென்றால், தேவனுடைய ராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் [அப்போஸ்தலர் 8:12].

பிலிப்பும், சிதறப்பட்டவர்களும் எதைப் பிரசங்கித்தார்கள்? அவர்கள் வசனத்தை, கிறிஸ்துவை, தேவனுடைய ராஜ்ஜியத்தை, பல தரப்பட்ட தலைப்புகளை உள்ளடக்கிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பிரசங்சித்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு பிலிப்பு பேசத் தொடங்கி இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்கு பிரசங்கித்தான் [அப்போஸ்தலர் 8:35]. பிலிப்பைப் போன்று முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் மனித பாரம்பரியங்களைக் குறித்துப் பிரசங்கியாமல் தேவனுடைய வார்த்தையை மட்டும் பிரசங்கித்தார் என்பது கவனிக்கப்பட வேண்டும். எருசலேமிலே ஏற்பட்ட கடுமையான உபத்திரவம் பிலிப்பையும், மற்றவர்களையும் எருசலேமிலிருந்து துரத்தியிருக்கலாம். ஆனால், அது அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலும் புதிய வாய்ப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்தியது.

பிலிப்பு சுவிசேஷத்தை எத்தியோப்பிய மந்திரிக்குப் பிரசங்கித்தார். அந்த மனிதன் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தான் [அப்போஸ்தலர் 8:38]. அதன் பின்பு பிலிப்புவைப் பற்றி இவ்விதமாக எழுதப்பட்டிருக்கிறது. சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டு வந்தான்... [அப்போஸ்தலர் 8:40]. பிலிப்பு பல தடைகளை எதிர் கொண்ட போதிலும் கூட கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், தேவனுடைய ராஜ்யத்தின் நற்செய்தியையும் அவர் தொடர்ந்து பிரசங்கித்துக் கொண்டே இருந்தார். அவர் பிரசங்கித்துக் கொண்டிருந்தார் என்பது இன்றைய நாட்களில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் போதிக்கும் ஒவ்வொருவருடைய அங்கமாயிருக்க வேண்டும். ஜனங்கள் விசுவாசித்தாலும், விசுவாசியாவிட்டாலும் தேவனுடைய வார்த்தையை நாம் தொடர்ந்து போதித்துக் கொண்டே, பிரசங்கித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஜனங்கள் பதிலளித்தாலும், பதிலளிக்காவிட்டாலும் நாம் தொடர்ந்து போதித்துக் கொண்டே, பிரசங்கித்துக் கொண்டே இருக்க வேண்டும். செய்தி ஜனங்கள் மத்தியில் பிரபலமானாலும், பிரபலமாகாவிட்டாலும் நாம் தொடர்ந்து போதித்துக் கொண்டும், பிரசங்கித்துக் கொண்டும் இருக்க வேண்டும். நாம் பிலிப்பு செய்தது போல் தொடர்ச்சியாக பிரசங்கித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால், சுவிசேஷம் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது [ரோமர் 1:16]. ✝

## செயலில் கிறிஸ்தவம்
## முதல் வகுப்பு 24 வருடங்கள்!




சில வருடங்களுக்கு முன்பு நான் பணிபுரியும் அலுவலகத்தில் ஒரு செய்தி அறிக்கையில் நான் கண்ட வாசகம் என்னை அதிகமாகக் கவர்ந்தது. அவ்வாசகம் முதல் வகுப்பில் 24 வருடங்கள் என்பதாகும். ஒன்றாம் வகுப்பில் படிக்கும் ஒரு குழந்தை ஞாயிறு பள்ளி வகுப்பிலும், வேத பாட வகுப்பிலும் செலவிடும் நேரத்தை பொது பள்ளி கூடத்திலும் செல விட்டால் தேர்ச்சி பெற்று அடுத்த வகுப்புக்குப் போக 24 வருடங்கள் ஆகுமாம்.

2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஓர் ஆய்வறிக்கையின்படி சபைக்குப் போகிறவர்களில் வெறும் 19% மக்கள் தான் தினமும் வேதாகமத்தை வாசிக்கிறார்களாம். இருபத்தைந்து சதவீதத்தினர்தான் வாரத்தில் சில முறை வேதாகமத்தை வாசிப்பதாக ஒத்துக் கொள்ளுகிறார்கள். அதிர்ச்சியளிக்கும் வகையில் 14 சதவீத்தினர் வாரத்திற்கு ஒரு முறைதான் வேதத்தை வாசிப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். 22% மக்கள் மாதத்திற்கு ஒரு முறை அல்லது மாதத்தில் சில முறை வேதத்தை வாசிப்பதாக சொல்லியிருக்கிறார்கள்.

பல மாதங்களுக்கு முன்பு, நானும் சகோதரன் Jack Wall, சகோ Dale Vann ஆகியோர் வேத வகுப்பு பாடத்திட்டத்தை குறித்து நீண்ட விவாதத்தை நடத்தினோம். மேலும், நாங்கள் இலக்கிய தகவல்கள் வேத வசனங்களை ஆதாரமாகக் கொண்டவைகளா என்பதை

நிரூபிக்க வேண்டும், பல போதனைகள் களைந்தெறியப்பட வேண்டும் எனக் கண்டோம். ஏற்கனவே, தயார் செய்யப்பட்ட பாடத்திட்டத்திற்கு நாம் மோசமான விலையைக் கொடுக்க வேண்டியதாயிருக்கும். நாங்களாகவே வேத பாடத்தை தயார் செய்யத் தீர்மானித்து எங்கள் நண்பர் ஒருவரிடம் இதைக் குறித்துப் பேசினோம். அவர் எங்களிடம் இது போன்று செய்து முடித்திருப்பதாகச் சொன்னார்!

மூப்பர்கள் இப்பாடத்திட்டத்தை வேகமாக ஆய்வு செய்து அதற்கு ஒப்புதல் அளித்தார்கள். நாங்கள் இப்போது 5½ வருடங்களில் ஒட்டுமொத்த வேதாகமத்தையும் படிக்கத்தக்கதான பாடத்திட்டத்தை தயார் செய்து அதை நடைமுறைப்படுத்தி வருகிறோம். இதன் பொருள் நம் பச்சிளங் குழந்தைகள் உயர்நிலைக் கல்வியை பெறுவதற்கு முன்பாக பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் இரண்டு முறை முடித்து விடுவார்கள்.

Eldred Stevens அவர்கள் ஒருவர் ஒரு குறிப்பிட்ட பாடத்தில் ஒரு நாளைக்கு 20 நிமிடங்கள் வைத்து 20 ஆண்டுகள் செலவழித்தால், அந்த குறிப்பிட்ட நபர் அப்பாடத்தில் அல்லது அத்துறையில் வல்லுநராக கருதப்படுவார். வேதாகமம் எல்லா நற்கிரியையுஞ் செய்ய நம்மைத் தகுதியாக்குகிறது [II தீமோத் 3:16,17]. நம்மை விடுதலை யாக்குகிற சத்தியம் வேதாகமம் தான் [யோவான் 8:32; 17:17]. தேவனுடைய வார்த்தை புடமிடப்பட்டவைகள் [சங்கீதம் 119:140; நீதிமொழிகள் 30:5,6]. நாம் ஒரு போதும் தேவனுடைய வார்த்தையின் மதிப்பை மறந்து விட வேண்டாம். ஏனென்றால், ஒட்டுமொத்த மனித இனத்தையும் அது தான் தீர்ப்புச் செய்யும் [யோவான் 12:48].

உச்ச நீதிமன்றம் இறுதி அதிகாரத்தை உடைய ஓர் அமைப்பல்ல! அந்த கெம்பீரமான அமைப்பு ஒரு நாள் உண்மையான உச்ச நீதிமன்றத்திற்கு முன்பாக நிற்கும்.

ஒவ்வொரு பெற்றோரும் தாத்தா, பாட்டிகளும் தங்கள் குழந்தைகள் அல்லது பேரக்குழந்தைகளைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்! உங்கள் பிள்ளைகள் பேரக்குழந்தைகள் வேத பாட வகுப்புகளில் எப்படிப் பங்கெடுக்கிறார்கள்? அவர்கள் பாதி வேத பாட வகுப்புகளில் பங்கெடுத்தால் முதல் வகுப்பை முடிப்பதற்கு 48 வருடங்கள் ஆகும்! பள்ளிக்கூடங்கள் நம் தேசதிலுள்ள பெரும்பாலான பதின்பருவத்தினர் உயர கல்வி செல்வதற்குள் வயதானவர்களாகி விடுகிறார்கள். வேதாகமத்தை படிப்பதைக்குறித்து நாம் எச்சரிக்கையாக இருப்போம். ✝

## ஞாயிறு ஆராதனையை மேலும் சிறப்பாக்க சனிக்கிழமைகளில் உங்களால் என்ன செய்ய முடியும்?

## What Can You DoOn Saturday to Make Sunday More Worshipful?

J. Randal Matrenyren.

ஒரு பிரபல தொழில் நுட்ப இணையதளம் சார்பாக வெளியிடப்பட்ட கட்டுரையின் தலைப்பு வரி இவ்விதமாக இருந்தது. திங்கட்கிழமையை மேலும் சமாளிக்கத்தக்க ஒன்றாக மாற்ற உங்களால் ஞாயிற்றுக்கிழமை என்னச் செய்ய முடியும்? தொழில் வளர்ச்சிக்குரியதும், பொருளாதார வெற்றியைக் குறித்தும் சதா சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் எப்படி முன்னேறுவது என்று தொடர்ச்சியாக திட்டங்களை தீட்டுவதில் புதுமை புகுத்துவார்கள்.



அப்படியிருக்கும்போது, கிறிஸ்தவர்கள் ஏன் தங்கள் ஆவிக்குரிய வெற்றியைக் குறித்தும், அயலகத்தாரின் ஆவிக்குரிய வெற்றியைக் குறித்தும் அதிகமாக சிந்திக்கக்கூடாது? ஞாயிறு ஆராதனையை மேலும் சிறப்பாக்க, ஆவிக்குரியதாக்க, பக்திவிருத்திக்குரியதாக்க நம்மால் என்ன செய்ய முடியும்? இங்கே ஞாயிற்றுக்கிழமை ஆயத்தமாவதற்காக சனிக்கிழமை செய்ய வேண்டிய ஏழு ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன.

- சனிக்கிழமை இரவு நேரமாகவே படுக்கைக்குச் செல்லுங்கள். போதுமான அளவு ஓய்வெடுங்கள். தூக்கம் ஆவிக்குரிய தன்மைக்கு உகந்ததல்ல. ஞாயிறன்று சரியாக ஆராதிக்க முடியாதபடி அதற்கு முந்தைய நாள் உங்களை அதிகமாக களைப்பாக்கிக் கொள்ளாதீர்கள்.

- ஆவிக்குரிய தேவையில் இருக்கும் மற்றொருவரைத் தேடுங்கள். நீங்கள் நண்பராக்கிக் கொள்ளத்தக்கதாக ஒரு நபரைக் காட்டும்படி கர்த்தரிடம் கேளுங்கள்.

- உங்களுடன் சபைக்குப் போவதற்கு யாரோ ஒருவரை அழையுங்கள். ஆராதனையில் எதை எதிர்பார்க்க வேண்டு மென்று முன்கூட்டியே அவரிடம் விளக்கி விடுங்கள். ஆராதனையில் பங்கெடுப்பதன் மூலமாக கிடைக்கும் நன்மைகளையும் சொல்லி விடுங்கள்.

- வெற்றிக்காக உங்களில் சில மாற்றங்களை செய்து கொள்ளுங்கள். கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் வாழ்க்கை யிலும், தேவனுக்கான சேவையிலும் வித்தியாசத்தை ஏற்படுத்தும் சத்தியத்தை எதிர்பாருங்கள்.

- ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தையநாள், அதாவது சனிக்கிழமையே வேகத்தை வாசித்து ஜெபியுங்கள். வாரத்தின் மற்ற நாட்களிலும் தேவனைத் தேடுகிறவர்களால் ஞாயிற்றுக்கிழமைகளில் அவரை சிறந்த முறையில் துதிக்க முடியும்.

- சபை கூடுமிடமான ஒரு கட்டிடம், கலையரங்கம் அல்லது மிகப்பெரிய அறைக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக சுயத்தை வாசலிலேயே விட்டுச் செல்லுங்கள். தேவனுடைய குணாதிசயத்தையும், அவருடைய கிரியைகளையும் அவருடைய சித்தத்தையும், அவருடைய நோக்கத்தையும், அவருடைய தயவையும் உங்கள் கவனத்தின் மையமாக வையுங்கள்.

- பக்திவிருத்தியை உண்டாக்கி பக்திவிருத்தி அடையுங்கள். கொடுத்து வாங்க கற்றுக் கொள்ளுங்கள். நட்பை வெளிப்படுத்தி, நண்பர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுங்கள். கர்த்தரிடம் கிட்டிச்சேருங்கள். அப்போது அவர் உங்களை கிட்டிச்சேர்வார். பரஸ்பர விதியை நடைமுறைப்படுத்தி கற்றுக் கொள்ளுங்கள்.

வியாபார உலகில் உள்ள புத்திசாலிகள், வெற்றி எதேச்சையாக வருவதில்லை என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள். மிகப்பெரிய பணியைச் செய்ய ஆயத்தம் அவசியமாகிறது. எனவே, கர்த்தருடைய நாளுக்காக ஆயத்தமாவதற்கு சனிக்கிழமை மிகச்சிறந்த நாளாகும். ✝

## கர்த்தருடைய பந்தியில் நன்றியை வெளிப்படுத்தல் பற்றி

## On Expressing Thanks at The Lord`s Table

Maxie B. Boren

ஒட்டு மொத்தமாக கிறிஸ்துவின் சபைகளில் ஆராதனைக்காக சபை கூடும்போது கர்த்தருடைய சரீரத்திற்கு அடையாளமாக வைக்கப்படும் அப்பத்திற்காகவும், அவருடைய சரீரத்திலிருந்து வழிந்தோடிய இரத்தத்திற்கு அடையாளமாக வைக்கப்படும் திராட்சை ரசத்திற்காகவும் ஜெபிக்கும்போது அந்த ஜெபம் அர்த்தமுள்ளதாயிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இத்தகைய ஜெபங்கள் வேத வசனங்களின் அடிப்படையில் அர்த்தமுள்ளதாக இல்லையென்றால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காகச் செய்த தியாகத்தின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளச் செய்யாவிட்டால் அதன் ஆவிக்குரிய நன்மையை இழந்துவிடுகிறது. இதை விளக்குவதற்கு ஓர் உதாரணத்தைக் கொடுக்கிறேன். சகோதரர் ஒருவர் இவ்விதமாக ஜெபம் பண்ணினார். இந்த அப்பத்திற்காக உமக்கு ஸ்தோத்திரம் தேவனே. இது எங்களுக்கு போஷாக்கைக் கொடுக்கத் தக்க இதை ஆசீர்வதியும். வெளிப்படையாகவே, அவர் படபடப்பில் அந்த வார்த்தைகளைப் பேசவில்லை என்பது தெரிந்தது, அது மட்டுமல்ல கர்த்தருடைய பந்தியைப் பற்றி அவருக்கு அறிவில்லாமலுமில்லை. எப்படிப்பார்த்தாலும், இச்சம்பவம் சிறிது நேரம் அந்த இடத்தில் ஆவிக்குரிய தன்மையை குறைத்துவிட்டது.



கர்த்தருடைய பந்தியின்போது பல நேரங்களில் நாம் எதற்காக நன்றிகளை ஏறெடுக்க வேண்டுமோ அதற்காக ஏறெடுக்கப்படுவதில்லை. கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்போது சிலர் எதற்கெல்லாமோ தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்பார்கள். ஆனால், கிறிஸ்துவின் தியாகத்தைப் பற்றி எந்த குறிப்புமே அங்கே இருக்காது. இது மிகவும் வருந்தத்தக்கதும், பல இடங்களில் மிகப்பெரிய பிரச்சனைக்குரியதாகவும் இருந்து வருகிறது. ஆராதனையின் இந்தப் பங்கை நாம் எப்படி மேம்படுத்த முடியும்?

முதலாவது, சகோதரர்கள் கர்த்தருடைய பந்தியை நாம் வாரத்தின் முதல்நாள் தோறும் அனுசரிக்க வேண்டும் என்பது சம்மந்தமாகவும், கர்த்தருடைய பந்தியை கிறிஸ்து ஏற்படுத்தினது சம்மந்தமாகவும் புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிற வசனங்களை வாசிக்க வேண்டும். [அப்போஸ்தலர் 20:7]. அந்த வசனங்களை ஜெபத்தோடு கொஞ்ச நேரம் தியானிக்க வேண்டும். மத்தேயு 26: 26-29; மாற்கு 14:22-25; லூக்கா 22:14-20; [I கொரிந்தியர் 11:23-29. இரண்டாவதாக, இது சம்மந்தமான மற்ற வசனங்களுக்கும் இதற்கு இணையான கவனம் கொடுக்க வேண்டும். ரோமர் 5:6-11; I கொரிந்தியர் 1:18-24; II கொரிந்தியர் 5:18-21; கலாத்தியர் 1:3-4, 2:20; எபேசியர் 1:3-14; பிலிப்பியர் 3:7-12; கொலோசெயர் 1:12-23; I தெசலோனிக்கேயர் 1:10; தீத்து 2:11-14; எபிரெயர் 2:9-18; I பேதுரு 1:18,19; I யோவான் 4:9,10 மற்றும் வெளிப் படுத்தின விசேஷம் 7:9,14.

கர்த்தருடைய பந்தியின்போது சிலுவை சுமந்த உருவம், சிலுவையின் நிழலில் அனுதினம் அடியான் போன்ற பாடல்களைப் பாடி அதன் அர்த்தத்தை அசைபோட வேண்டும். மேற் சொல்லப்பட்ட வசனங்களையும், பாடல்களையும் ஆழ்ந்து சிந்தித்தப் பிறகு பந்தியை தலைமையேற்று நடத்தும் சகோதரர் ஜெபத்தில் பொருத்தமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதற்கு கவனம் கொடுக்க வேண்டும். ஜெபமானது இருதயத்தின் ஆழத்திலிருந்து உண்மையாக ஏறெடுக்கப்பட வேண்டும். மேலும், ஜெபம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் வெளிப்பட்ட தேவனுடைய அன்புக்கும், இரக்கத்துக்கும் ஆழமான நன்றியைத் தெரிவிப்பதாக இருக்க வேண்டும்.

**உற்று நோக்க வேண்டிய கடைசி மூன்று காரியங்கள்:**

பெரும்பாலும் கர்த்தருடைய பந்தியின்போது ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் வார்த்தை ஜாலங்களை உள்ளடக்கியதாகவே இருக்கிறது. கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் குறிப்பிடாமல் கூட ஜெபங்கள் ஏறெடுக்கப்படுவது ஆச்சரியமாயிருக்கிறது. சகோதரர்களே, நாம் நன்றி செலுத்த வேண்டியது. அப்பத்திற்காகவும், திராட்சை ரசத்திற்காகவும் அல்ல. கிறிஸ்துவின் சரீரத்திற்காகவும் இரத்தத்திற்காகவும் தான். எனவேதான், நம் ஜெபங்களில்

சரீரத்திற்காகவும், இரத்தத்திற்காகவும் நன்றி நிறைந்த வார்த்தைகள் கட்டாயம் இடம் பெற வேண்டும். ஏன் நம் ஜெபங்கள் இதை வலியுறுத்துவதாக இருக்கக் கூடாது? ஒவ்வொருவரும் ஜெபத்தை தெளிவாகக் கேட்டுப் புரிந்து கொள்ளத்தக்கதாக ஜெபம் சத்தமாக ஏறெடுக்கப்பட வேண்டும்.

கடைசியாக சகோதரரே, தயவுசெய்து ஒரு காரியத்தை நினைவில் வையுங்கள். நாம் ஜெபிப்பது பிதாவாகிய தேவனிடம்தான். நமக்காக சிலுவையில் மரித்தது அவருடைய பிரிய குமாரனாகிய கிறிஸ்து. எனவே, உம்முடைய சரீரத்திற்காக, இரத்தத்திற்காக நன்றி செலுத்து கிறோம் என்று ஜெபிப்பது தவறான ஜெபமாகும். தேவன் ஆவியா யிருக்கிறார் (யோவான் 4:23, 24), ஆவிக்கு மாம்சமும் எலும்புகளும் இராதே (லூக்கா 24:39). தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துதான் மனித அவதாரம் எடுத்து நமக்காக சிலுவைப் பாடுகளை சகித்துக் கொண்டார். (யோவான் 1:1-4, 14;3:16/17) (பிலிப்பியர் 2:5-11). ஆகவே, கல்வாரியில் பலியாகக் கொடுக்கப்பட்டது இயேசு கிறிஸ்துவின் சரீரமும் அவருடைய இரத்தமும் தான். தேவத்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒன்றாயிருந்தாலும், வேதாகமம் பரலோகத்திலிருக்கிற பிதாவுக்கும், இரட்சகராக இப்பூமிக்கு வந்த இயேசு கிறிஸ்துவுக்கும் இடையேயான வித்தியாசத்தை தெளிவு படுத்துகிறது. அந்த உண்மையை நாம் மிகவும் ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். காரியங்களை வேறு விதமாகச் செய்வது தவறிழைப்பதும், மற்றவர்களுக்கு தவறாக போதிப்பதுமாயிருக்கிறது.

---

## இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்

எஸ்தர் ஜெபித்தார்... பாழாக்கும் தீமையிலிருந்து யூதர்களை தேவன் விடுவித்தார்.

மோசே ஜெபித்தார்... சிவந்த சமுத்திரத்தைத் தேவன் இரண்டாகப் பிரித்தார்

எலியா ஜெபித்தார்... மூன்றரை வருடங்களுக்கு மழைப் பெய்யவில்லை

தானியேல் ஜெபித்தார்... தேவன் சிங்கங்களின் வாயைக் கட்டினார்

யோசுவா ஜெபித்தார்... சூரியன் அப்படியே நின்றது

ஆராதனை

## இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்

## Pray Without Ceasing

**Dalton Key**

நாம் கவலைகளினாலே களைத்துப் போகிறோம். மனச்சோர்வினால் ஏற்படும் புண்ணால் நம் வயிற்றை நிரப்பியிருக்கிறோம். நாம் ஜெபத்தின் வல்லமையையும், நோக்கத்தையும் கவனிக்கத் தவறியதால் தான் நம்மை நாமே அவசரமாக கல்லறைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். **அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால் உங்கள் கவலைகளையெல்லாம்.** அவர் மேல் வைத்துவிடுங்கள் எனும் வாக்கியம் இன்றும் நமக்குப் பொருந்துகிறது ( I பேதுரு 5:7). தேவன் சர்வவல்லமையுள்ளவர், அவர் நம்மை விசாரிக்கிறார் என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொண்டால் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் வேதாகம கதாபாத்திரங்களின் உதாரணங்களை நம் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு ஜெபம் எனும் வழியை தெரிந்து கொள்வோம். பவுலின் புத்திமதியாகிய இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும் எனும் புத்திமதியை கவனிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் (I தெசலோனிக்கேயர் 5:17).

வரலாற்றை நாம் உற்றுப் பார்த்தால் மாபெரும் மனிதர்கள் மாபெரும் ஜெபவீரர்களாகவே இருந்திருக்கிறார்கள். ஈசாக்கு வயல் வெளியிலே ஜெபித்திருக்கிறான் (ஆதியாகமம் 24:63), யாக்கோபு ஆற்றினருகே ஜெபித்திருக்கிறார் ( ஆதியாகமம் 32:22,24) எரேமியா ஆழமான கிடங்கிலிருந்து (புலம்பல் 3:55), தானியேல் சிங்கக் கெபியிலிருந்து (தானியேல் 6), யோனா மீன் வயிற்றிலிருந்து ( யோனா 2:1) பேதுரு மேல்வீட்டிலிருந்து (அப்போஸ்தலர் 10:9) மாபெரும் ஜெப வீரனாகிய பவுல் பலமுறை சிறையிலிருந்து ஜெபித்திருக்கிறார்.

நம் அருமை இரட்சகர் எப்படி?அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் ஜெப மனிதராக இருக்கவில்லையா? அவர் ஜெபத்திலே நீண்ட நேரத்தை செலவழிக்கவில்லையா? ஜெபத்திலே மூழ்கி பல உறக்கமில்லா இரவுகளை கழிக்கவில்லையா? நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் ஜெப வாழ்க்கையால் ஈர்க்கப்பட்ட அவருடைய

சீஷர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் யோவான்ஸ்நானன் தன்னுடைய சீஷர்களுக்கு ஜெபம் பண்ணப் போதித்தது போல தங்களுக்கும், போதிக்க வேண்டுமேன்று கேட்டுக் கொண்டார்கள். ஆண்டவரே நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும் (லூக்கா 11:1). யோவான் 17 ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கும் அவருடைய ஜெபம்தான் உண்மையாகவே கர்த்தருடைய ஜெபம் என்று அழைக்கப்பட வேண்டும். அந்த ஜெபம் நம் அருமை இரட்சகரின் ஜெப வாழ்க்கையின் ஆழத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது.

இவர்கள் எல்லோரும் இன்னும் இங்கே குறிப்பிடப்படாத பலரும் நாம் நம்பிக்கையில்லாமலும், முட்டாள்தனமாகவும் ஒதுக்கி வைத்த முக்கியமான வேதாகம விதியை உணர்ந்து அங்கீகரித்திருக்கிறார்கள். இவர்களெல்லோரும் நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்பதை உறுதியாக விசுவாசித்தார்கள் (யாக்கோபு 5:16).

✝

---

## தேவனுடைய வார்த்தை கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | *அப்பம்* | *மத்தேயு 4:4* |
| 2. | *அக்கினி* | *எரேமியா 5:14* |
| 3. | *தேன், தெளிதேன்* | *சங்கீதம் 19:10* |
| 4. | *சம்மட்டி* | *எரோமியா 23:29* |
| 5. | *தீபம், வெளிச்சம்* | *சங்கீதம் 119:105* |
| 6. | *விதை* | *லூக்கா 8:11* |
| 7. | *பட்டயம்* | *எபேசியர் 6:17* |

## ஆராதனை

## அக்கினியோடு விளையாடுதல்

## Playing with Fire

**Rick Cunninghams**

மோசேயின் சகோதரனாகிய ஆரோன் மோசேயின் உடன்படிக்கை முறைமையின் முதல் ஆசாரியனாக இருந்தார். ஆரோன் எலிசெபா என்னும் பெண்ணை விவாகம் பண்ணினார். இந்த தம்பதியினருக்கு நாதாப், அபியூ, எலெயாசர் மற்றும் இத்தாமர் ஆகிய குமாரர் இருந்தார்கள். ஆரோனின் குமாரர்களும் ஆசாரியர்களாக இருந்தார்கள்.

மோசே சீனாய் மலைக்கு ஏறினபோது அவர் மட்டுமே தேவனை சந்தித்து உடன்படிக்கையை பெற்றுக்கொண்டார். ஆனால், ஆரோன் நாதாப், அபியு மற்றும் இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஆறுபேர் தேவனுடைய பிரசன்னத்தின் இடத்தைக் காண மலைக்குப் போனார்கள். [யாத்திராகமம் 24:9–11] வசனங்களில் மோசே இவ்விதமாக எழுதினார். ''பின்பு மோசேயும், ஆரோனும், நாதாபும், அபியூம் இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபது பேரும் ஏறிப்போய் இஸ்ரவேலரின் தேவனைத் தரிசித்தார்கள். அவருடைய பாதத்தின் கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது. அவர் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள் மேல் தம்முடைய கையை நீட்டவில்லை; அவர்கள் தேவனைத் தரிசித்து பின்பு புசித்துக் குடித்தார்கள்.'' எனவே, நாதாப், அபியூ உட்பட சில மனிதர்கள் சீனாய் மலையில் தேவனுடைய சமூகத்தில் புசிக்கவும் குடிக்கவும் செய்தார்கள். ஆனால், தேவன் இவர்களுக்கு விரோதமாக தம்முடைய கைகளை நீட்டவில்லை, இருந்தபோதிலும், பின்னர் நாதாப் மற்றும் அபியூவின் மீது தம் கைகளை நீட்டினார்.

இந்த இரு ஆசாரியர்களும் கூடாரத்தில் பணிசெய்து கொண்டிருக்கும்போது ''நாதாபும், அபியும் தன்தன் தூப கலசத்தை எடுத்து அவைகளில் அக்கினியையும், அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள்.

(லேவியராகமம் 10:1,2). இந்தச் சம்பவத்தில் நாதாவும், அபியூம் ஆராதனையில் பயன்படுத்தப்படும் தூப கலசத்தை எடுத்து அதின்மேல் அக்கினியைப் போட்டார்கள். அக்கினி பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட வேண்டுமென்று தேவன் ஏற்கனவே கட்டளை யிட்டிருந்தார். ஆனால், நாதாபும், அபியும் அந்நிய அக்கினி அல்லது அங்கீகரிக்கப்படாத அக்கினியைப் பயன்படுத்தினார்கள். அங்கீகரிக்கப் படாத அக்கினி அல்லது அங்கீகரிக்கப்படாத எந்த ஓர் ஆராதனையும் தேவனுக்கு அருவருப்பாக இருக்கிறது.

இந்த வேதாகமச் சம்பவம் தேவனை அணுகும் எல்லோருக்கும் ஓர் எச்சரிப்பாகும். தேவன் தம்மை ஆராதிப்பவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று குறிப்பாகச் சொல்லியிருக்கிறார். தேவன் கட்டளையிட்டதற்குப் பதிலாக ஒன்றைச் செய்வதோ அல்லது கூடுதலாக எதையாவதுச் செய்வதோ தேவனுடைய பார்வையில் கலகமாகப் பார்க்கப்படும். நாதாபும், அபியூம் இந்த பாடத்தை கடினமாக கற்றுக் கொண்டிருக்கிறார்கள். தேவனால் அங்கீகரிக்கப்படாத ஆராதனையை ஏறெடுப்பவர்கள் அக்கினியோடு விளை யாடுகிறார்கள்.

> அங்கீகரிக்கப்படாத அக்கினி அல்லது அங்கீகரிக்கப்படாத எந்த ஓர் ஆராதனையும் தேவனுக்கு அருவருப்பாக இருக்கிறது. தேவனால் அங்கீகரிக்கப்படாத ஆராதனையை ஏறெடுப்பவர்கள் அக்கினியோடு விளையாடுகிறார்கள்.

---

*வேதாகமம் சொல்வதுபோல் வாழ்வோம்*

தினமும் தேவன் ஏதாவது நம்மிடம் சொல்லட்டும்
(II தீமோத்தேயு 2:15)

தினமும் தேவனிடம் ஏதாவது சொல்வோம்
(I தெசலோனிக்கேயர் 5:17)

தினமும் தேவனுக்காக ஏதாவது சொல்வோம்
(அப்போஸ்தலர் 5:42).

தினமும் தேவனுக்காக ஏதாவது செய்வோம்
(மத்தேயு 5:16)

## கிறிஸ்தவ மாதிரி
## Christian Example

Neil Richey

என் கர்த்தர் இவ்விதமாகச் சென்னார். இவ்விதமாய் மனஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி,உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத்தேயு 5:16). இது தான் என்னால் சொல்ல முடிந்தவைகளில் சிறந்ததாயிருக்கிறது. இதற்கு எந்த எல்லையுமில்லை. வேறு விதமாகச் சொன்னால், நம் சிறந்த முன் மாதிரியை பிரகாசிக்கச் செய்வது சபைக் கட்டிடத்திலோ, ஞாயிற்றுக்கிழமை ஆராதனையிலோ, சபை மக்களோடு



இருக்கும் போதோ மாத்திரம் இருக்கக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், மேற்சொல்லப்பட்ட சூழ்நிலைகளில் மட்டும் நம் முன் மாதிரி பிரகாசிக்கக் கூடிய ஒன்றாக இருக்கக் கூடாது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய வெளிச்சம் நம் வீட்டில், நம் வேளையில், பள்ளியில், சமூக வலைத்தளங்களில் பிரகாசிக்க வேண்டும். மெய்யான கிறிஸ்தவம் உள்ளிருந்து ஒளிவீசுகிறது அது எங்கும், எப்போதும் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

கேள்வி: நீங்கள் கிறிஸ்தவர்கள் என்பதை ஜனங்கள் அறிந்திருக்கிறார்களா? அவர்கள் உங்களிடம் அக்கேள்வியை கேட்கக் கூடாது. உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவர்களாகவே நீங்கள் கிறிஸ்தவர்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். William Barclay என்பவர் இவ்விதமாக எழுதினார். நம்முடைய கிறிஸ்தவம்

உணவ கத்தில் வேலை பார்க்கும் நபரிடம், உணவைக் கொண்டு வரச் சொல் வதில், கடையில் வேலை பார்ப்பவரிடம் நடந்து கொள்வதில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும். கிறிஸ்தவம் வேலையில் நாம் காட்டும் ஜாக்கிரதையில், பொதுமக்களுக்கு சேவை செய்யும் போது நாம் காட்டும் மரியாதையில், நம் குடும்பத்தாரோடு நாம் காட்டும் அக்கறையில் வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும்.

கிறிஸ்தவம் ஒரு முழு நேர வேலையாயிருக்கிறது. இது ஞாயிற்றுக்கிழமை மட்டும் நடைமுறைபடுத்தப்படும் ஒரு பொழுது போக்கல்ல. கிறிஸ்தவம் அனுதினமும் நம் சிறந்த நடத்தையை எதிர்பார்க்கிறது.

George Bailey ஒரு முறை இவ்விதமாகச் சொன்னார். உதாரணம் அல்லது மாதிரியைப் போல் பரவுவது எதுவுமில்லை. அப்படியானால், நீங்கள் எவ்வகையான உதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்? அது பரவுகிறதாக இருக்கிறதா? ஜனங்கள் உங்களிடத்திலிருந்து எதைக் கற்றுக் கொள்கிறார்கள்?

✝

---

*வேதாகமம் சொல்வதுபோல் வாழ்வோம்*

- *அவரை அறிந்து கொள்ள தீர்மானித்து*
  *(I கொரிந்தியர் 2:2)*
- *அவருக்குள் விசுவாசமாக ஜீவிக்கிறது*
  *(கலாத்தியர் 2:20)*
- *கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருக்கிறது*
  *(பிலிப்பியர் 2:5)*
- *அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறது*
  *(I பேதுரு 2:21)*
- *கிறிஸ்துவுக்காக மரிக்கவும் துணிகிறது*
  *(பிலிப்பியர் 1:21)*

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை
## எது ஒருவரை தேவனுடைய வேலைக்காரனாக்குகிறது?
## What makes a Servant of God?

Bob Plunket

**1. பெரும்பாலான நேரங்களில் சிறந்த பெற்றோர்களால் இவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.**

எல்க்கானாவும், அன்னாளும் சாமுவேலின் பெற்றோர்களாயிருந்தார்கள். அவள் மலடியாயிருந்தபடியால் பிள்ளை பெற முடியவில்லை. அவள் தனக்கு தேவன் பிள்ளை தர வேண்டுமென்று தேவனிடம் தொடர்ச்சியாக ஜெபித்தாள். உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன் என்று தேவனிடம் ஒரு பொருத்தனை பண்ணினாள். அவளுடைய ஜெபம் கேட்கப்பட்டது, அவள் கர்ப்பமாகி ஒரு குமாரனைப் பெற்றாள். அன்னாள் தேவனிடம் செய்த பொருத்தனையை நிறைவேற்றினாள். எனவே, அவள் பிள்ளையை பால் மறக்கச் செய்து, அவனை தேவனுடைய வீட்டிற்கு அழைத்துச்சென்று தேவ ஊழியக்காரரிடம் அதாவது ஏலியிடம் அழைத்துச் சென்றாள். அன்னாள் சாமுவேலை அதிகமாக நேசித்த படியால் அவனுக்காக ஒரு ஆடையை உண்டாக்கி கொடுத்தாள். நம் பிள்ளைகள் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவரைச் சேவிக்க வேண்டுமென்றால், அவருடைய வீடாகிய ஆலயத்திற்கு முன் கூட்டியே எடுத்துச் செல்லவேண்டும், அடிக்கடி எடுத்துச் செல்ல வேண்டும்.

**2. தேவனுடைய வேலைக்காரன் தேவனுடைய அழைப்புக்கு பதிலளிக்கிறான்.**

தேவன் சாமுவேலை அழைத்த போது கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றான். இன்றையநாட்களில் பல வேலைக்காரர்கள் கர்த்தாவே, உம்முடைய ஊழியக்காரன் சொல்வதைக் கேளும் என்று சொல் என்று சொல்கிறார்கள்.

**2. தேவனுடைய சத்தியத்திற்கு உண்மையாயிருக்கிறான்.**

சாமுவேல் தான் அதிகமாக நேசித்த, தன்னை வளர்த்த ஏலியிடம் அவருடைய குமாரருடைய துன்மார்க்கத்தினால் அவரை தேவன்

தண்டிக்கப்போகிறார் என்று சொல்ல வேண்டியதாயிருந்தது. நாம் நேசிக்கிறவர்களிடத்தில் அவர்கள் விரும்பாத காரியத்தை சொல்ல அதிக தைரியம் தேவைப்படுகிறது. பிற்பாடு சாமுவேல் இஸ்ரவேலர்களைப் பார்த்து நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புகிறவர்களானால், அந்நிய தேவர்களை நடுவிலிருந்து விலக்கி உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்குங்கள் என்று சொன்னார் [I சாமுவேல் 7:3]. பதிமூன்றாம் அதிகாரத்தில் அவர் இஸ்ரவேலின் புதிய ராஜாவை கடிந்து கொள்கிறார்.

**4. தனக்குப் பதிலாக வருபவரை அபிஷேகம் செய்து, முத்தமிடுகிறான்.**

சாமுவேல் தான் இஸ்ரவேலரால் தள்ளப்பட்டிருந்தபடியால் புண்பட்டிருந்தார். ஆனால், தேவன் சாமுவேலிடம் அவர்கள் உன்னைத் தள்ளவில்லை என்னைத் தள்ளினார்கள் என்று சொன்னார். ஒரு தேவதாசன் தேவனுடைய வேலை எந்த ஒரு மனிதனையும் விட பெரியது என்றும். தன்னை விட தேவனுடைய வேலை நிறைவேற்றப்பட வேண்டுமென்பதையே அதிகம் விரும்புவான்.

**5. தேவனுடைய பணியிலிருந்து எப்போது எப்படி விடைபெற வேண்டுமென்பதை அறிந்திருக்கிறான்.**

பன்னிரெண்டாம் அதிகாரத்தில் சாமுவேல் இஸ்ரவேலரைப் பார்த்து நானோ கிழவனும் நரைத்தவனுமானேன். என்னைக் குறித்து சாட்சி சொல்லுங்கள், நான் யாருடைய எருதை எடுத்துக் கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்? யாருக்கு அநியாயஞ் செய்தேன்? சொல்லுங்கள் என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் நீர் எங்களுக்கு அநியாயஞ் செய்யவும் இல்லை; எங்களுக்கு இடுக்கண் செய்யவும் இல்லை; ஒருவர் கையிலும் ஒன்றும் வாங்கவும் இல்லை என்றார்கள். அவர் உண்மையுள்ளவராயிருந்தார்.

வேதாகமத்தில் எங்கேயுமே அவர் உயரமானவர், அழகானவர், சொல்வன்மையுடையவர், பலசாலி, புத்திசாலி என்று சொல்லப்பட வில்லை. ஆனால், அவர் உண்மையாகவும், நேர்மையாகவும் இருந்திருக்கிறார் என்று பார்க்கிறோம். நம்மெல்லோராலும், இப்படி இருக்க முடியும். I சாமுவேல் 1-13 அதிகாரங்களை ஜாக்கிரதையாக சிந்தித்துப் பாருங்கள்.


## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

### பிரசங்கியாராகிய என் அப்பா

### My Daddy, The Preacher

Mark N. Paley

நீங்கள் உலகமெங்கம் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் எனும் வசனப்பகுதி நம் வாழ்வில் எல்லா நாட்களிலும் நமக்கு அழைப்பு விடுத்துக் கொண்டே இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பணி எல்லாப் பணிகளைவிட உன்னதமானது. நான் இப்பூலோக வாழ்க்கை முழுவதும் பிரசங்கிக்கும் பணியை தெரிந்தெடுத்திருக்கிறேன்.



இவ்வுலகில் எத்தனையோ பேர் என் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள், என்னை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள், என்னை நேசித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் என் அப்பா போல் யாருமே இல்லை. இன்னும் சொல்லப்போனால், பிரசங்கியாராகிய என் அப்பா போல் யாருமே இல்லை. என் அப்பா சர்வ சிருஷ்டிப்புக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதை விட வேறொன்றையும் நேசிப்பதில்லை. என் குழந்தைப் பருவத்தின் எல்லா நாட்களிலும் என் அப்பா பிரசங்கத்தை அப்படியே வாழ்ந்து காட்டினதை என் கண்களாலேயே கண்டேன். பிரசங்க பீடத்தில் நான் எதைக் கேட்டேனோ அதை அப்படியே வீட்டில் கண்டேன்.

மாய்மாலம் நிறைந்த இவ்வுலகில் பிரசங்கிக்கிறவைகளை கடைப்பிடிக்கும் பிசங்கியார்கள் அவசியமாயிருக்கிறார்கள். நான் வருங்காலத்தில் என்னவாக வரும்பினேனோ அதை வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே என் அப்பாவினிடத்தில் பார்த்தேன். இதில் அழகான பகுதி என்னவென்றால், அவர் என்ன பிரசங்கித்தாரோ அல்லது எப்படி வாழ்ந்தாரோ அதிலிருந்து மாறவேயில்லை. எந்த சமரசத்தையும் செய்து கொள்ளவேயில்லை, அதேபோல் நானும் என்னவாக

விரும்பினேனோ அதிலிருந்து மாறவேயில்லை. நான் முடிந்த வரை என் வாழ்க்கையில் செய்ய விரும்பியதெல்லாம் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதாகவேயிருந்தது. நான் எப்போதும் என் அப்பா போலவே ஆக விரும்பினேன்.

பிரசங்கிப்பதினால் ஏற்படும் நன்மைகள் ஏராளம். ஒரு பிரசங்கியார் சிறந்தவர்களோடு வேலை செய்கிறார். மகத்தான செய்தியை அறிவிக்கிறார், மாபெரும் தேவனுக்கு சேவை செய்கிறார். நம் உதாரணம் பலரால் பார்க்கப்படும். பிரசங்கியாராகிய என் அப்பாவினிடத்தில் நான் கண்டதெல்லாம் அவருடைய மனநிலை செயல்பாடுகள் மற்றும் அவருடைய எண்ணங்கள் எல்லாம் நன்மை மற்றும் தூய்மையை பிரதிபலிக்கிறதாகவே இருந்தது. திருமணத்தின் போது நானும் மனைவியும் பொருத்தனைகளை பரிமாறிக் கொண்ட போது, என் அப்பா இவ்விதமாகச் சொன்னார். உங்கள் திருமண த்தைப் பார்த்து மற்றவர்கள் திருமணம் செய்ய ஆசைகொள்ளத் தக்கதாக மாதிரியாகவும், மகிழ்ச்சியானதாகவும் இருக்கட்டும். உலகெங்குமுள்ள வாலிபர்கள் மேல்நோக்கி பார்க்கத்தக்கதாக சிறந்த முன்மாதிரிகள் இருந்தால் ஊழியப் பணிக்கு இழுக்கப்படுவார்கள். நம் வார்த்தைகளிலும், வாழ்க்கையிலும், உதாரணங்களிலும் எவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கிறது.

என் மகன் Joshua Posey இப்போது ஒரு முழுநேர ஊழியக்காரனாயிருக்கிறான். எவ்வித சந்தேகமுமின்றி வார்த்தை யிலும், செய்கையிலும் என் முன் மாதிரி தினமும் கண்காணிக்கப் படுகிறது என்பதை நான் அறிவேன். என் அப்பாவைப் போல் நான் வாழ்ந்தால், அதாவது, பிரசங்க பீடத்தில் நான் எதைப் பிரசங்கிக் கிறேனே அதை அப்படியே வீட்டில் அப்பியாசப்படுத்து கிறவனாகயிருந்தால் நிச்சயமாக ஒரு சிறந்த முன் மாதிரியாக இருப்பேன். அது ஊழியப்பணிக்கு புகழ்ச்சியாகவும் இருக்கும். அது தேவனுக்கு மகிமையாகவும் இருக்கும்.

நாளைய பிரசங்கியார்களை உருவாக்குவதற்காக முன்மாதிரி மற்றும் பரிசுத்த வாழ்க்கை வாழும் எல்லா தகப்பன்மார்களையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக. இவ்வுலகிலேயே மிகச்சிறந்த பணி பிரசங்கியார் பணி என்பதை எனக்குக் காட்டியமைக்காக உங்களுக்கு நன்றி அப்பா. ✝

## கிறிஸ்தவ இல்லம்

### திருமணத்தைக் காப்பாற்றுதல்

### Saving a Marriage

Dale Grisson

**உ**லகத்தின் தாக்கம் சபையின் மீது பெருகிக்கொண்டிருக்கிற படியால் கிறிஸ்தவர்கள் மத்தியில் விவாகரத்து அதிகமாகிக் கொண்டிருக்கிறது. சில வேளைகளில் வாழ்க்கை கட்டுப்பாட்டை மீறிப் போய்விடுகிறது. தம்பதியரில் யாரோ ஒருவர் விட்டுக் கொடுக்காமல் இருப்பதால் அவர்களிடையே சிக்கல் ஏற்படுகிறது. தகவல் தொடர்பில் விரிசல் ஏற்பட்டபடியால், அவர்களால் தவறான புரிந்து கொள்ளுதல் இல்லாமலும் ஒருவரையொருவர் காயப்படுத்திக் கொள்ளாமலும் பேசிக்கொள்ளமுடியவில்லை. பொதுவாக, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பெருமையும், பிடிவாதமும் தம்பதியினரிடையே தலைவிரித்தாடுகிறபடியால் அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது.

தம்பதிகள் திருமணம் நன்றாகப் போகவேண்டுமென்று விரும்பினால், அவர்கள் வழியில் வரும் பெருமையையும், பிடிவாதத்தையும் விட்டுவிட்டால், பெரும்பாலான திருமணங்கள் காப்பாற்றப்படும். இருவரும் சம்மதித்தால் கிறிஸ்தவ ஆலோசனை இருவருக்கும் நன்மைப் பயக்கும்.

கிறிஸ்தவ தம்பதிகள் கர்த்தரைவிட்டு விலகத்தொடங்கும்போது கிறிஸ்தவ திருமணங்கள் பிரச்சனைக்குரியதாகிவிடுகின்றன. சில சமயங்களில் அவர்கள் ஆராதனையை அலட்சியப்படுத்துகிறார்கள். தங்கள் தனிப்பட்ட வாழ்வில் அவர்கள் ஜெபிப்பதையும், வேதத்தை படிப்பதையும் புறக்கணிப்பார்கள். அலட்சியம் பாவத்திற்கான பாதையை திறக்கிறது. பாவம் உள்ளே பிரவேசிக்கும்போது, அது காயத்தையும், வலியையும் உண்டாக்குகிறது. அவர்கள் மறுபடியும் தங்கள் உறுதியான உறவுக்கு கிறிஸ்தவ ஆலோசனைகளின்றி திரும்ப முடியாது.

தம்பதியைப் பொறுத்தவரை கர்த்தரை நம்புவதை விட, அவர் மேல் பாரத்தை வைப்பதை விட வேறென்றும் நன்மை பயக்காது. தேவன் நம்மை தம் வார்த்தையினாலே வழி நடத்துகிறார். ஏனென்றால்,

இதுவரை எழுதப்பட்ட புத்தகங்களிலேயே மிகச் சிறந்த புத்தகம் வேதாகமம்தான் மனோதத்துவ துறையில் சிறந்த பாடங்களை வேதாகமத்திலிருந்து நாம் எடுக்க முடியும். சிறந்த திருமணங்கள் தற்செயலாக நடப்பதில்லை. அது கடின உழைப்பின் விளை வாயிருக்கிறது. கணவன்மார்களும், மனைவிமார்களும் வீண் பெருமையையும், அகங்காரத்தையும் அகற்றிவிட்டு தாழ்மையை தரித்துக்கொண்டு வாழ்ந்தால் திருமண வாழ்க்கை சிறப்பாக அமையும். நல்ல திருமண வாழ்க்கை அமைய வேண்டும் என்று விரும்பும் எல்லோருக்கும் **தங்கவிதி** அவசியமாயிருக்கிறது. ''ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள், இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்'' [மத்தேயு 7:12]. இந்த தங்கவிதி பின்பற்றப்பட்டால் காலம் செல்லச் செல்ல ஒவ்வொரு திருமணமும் மேம்படும்.

தேவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்தத் தீர்மானம் எடுங்கள், சிறந்த திருமணத்தைக் கட்ட கடுமையாக உழையுங்கள்.

✝

---

## சுவிசேஷத்தின் வல்லமை

*சீமோனையும், சமாரியர்களையும் ஆச்சரியப்படுத்தியது*
*( அப்போஸ்தலர் 8:11-13)*

*எபேசியர் மறுபடியும் ஞானஸ்நானம் பெறத் தூண்டியது*
*( அக்போஸ்தலர் 19:14)*

*யூதர்களின் இருதயங்களை குத்தியது*
*(அப்போஸ்தலர் 2:37)*

*லீதியாளின் மனதைத் திறந்தது*
*(அப்போஸ்தலர் 16:1-4)*


## கிறிஸ்தவ இல்லம்

### உங்கள் குடும்பம் எப்படி இருக்கிறது?

### How Is Your Family Doing?

John Gip Jon

குடும்பம் வருங்காலத்தின் தொட்டிலாகவும், பாதுகாவலாகவும் இருக்கிறது. ஒரு பிரசித்தி பெற்ற மனோதத்துவ நிபுணர் H.A. Overstreet என்பவர் குடும்பம் என்பது ஒரு குழந்தை அறியாமை யிலிருந்து அறிவுக்கு வளரும் ஓர் இடமாக, பொறுப் பின்மையிலிருந்து பொறுப்புக்கு மாறும் ஓர் இடமாக, பேச்சின்மை யிலிருந்து பேச்சுக்கு மாறும் ஓர் இடமாக, முதிர்ச்சியின்மையிலிருந்து முதிர்ச்சிக்கு மாறும் ஓர் இடமாக, தன்னலத்திலிருந்து மற்றவர்களிடம் அக்கறை காட்டுதலில் வளரும் ஓர் இடமாக'' இருப்பதாக விளக்கம் அளித்தார்.



குடும்பம் முக்கிமில்லை என்று நீங்கள் நினைத்தால் வேதாகமம் ஏன் கணவன் மார்களை தகப்பன்மார்களை, மனைவிமார்களை, தாய்மார்களை, பிள்ளைகளைப் பற்றி அதிகமாகப் பேசுகிறது?

நாம் ஒவ்வொரு முறை யிலும் தாறுமாறான குடும்பங்கள் விதைத்ததை அறுத்துக் கொண்டிருக்கிறோம். அன்பின்மை காரணமாக, பல மோசமான ஆண்களும் பெண்களும் உருவாக்கப்பட்டி ருக்கிறார்கள். ஆரோக்கியமற்ற குடும்ப வாழ்க்கை நம் பள்ளி களிலும், வேலை செய்யும் இடங் களிலும் சபைகளிலும் பொதுவாக நம் சமுதாயத்திலும் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியிருக் கின்றன.

நாம் பரிசோதனை செய்யும் கருவிகளைக்கொண்டு மாணவர்கள் பள்ளிக்கு ஆயுதங்களைக் கொண்டு வருகிறார்களா என்று சோதித்துப் பார்க்கிறோம். குற்றவாளிகளை தங்க வைக்க புதிய சிறைச்

சாலைகளை கட்டுகிறோம். போதைக்கு அடிமைப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு மையங்களைக் கட்டுகிறோம். குடித்து விட்டு வாகனங்களை ஓட்டுபவர்களை கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களை இயற்றுகிறோம். போதை வஸ்துக்களை சட்டப்பூர்வமான வஸ்துவாக்க சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். கருக்கலைப்பு குற்றமில்லை என்று சொல்கிறோம். பாதுகாப்பான உடலுறவை ஊக்கப்படுத்துகிறோம். எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம். இப்படியே பட்டியல் நீள்கிறது.

நாம் நம் குடும்பங்களை ஆரோக்கியமான ஒன்றாக மாற்றாதவரை நம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை.

✝

---

## யோனா – ஜெபங்களின் புத்தகம்

- **கப்பற்காரர் பயந்து தங்கள் தேவர்களை நோக்கி வேண்டினார்கள் [1:5]**
- **மீனின் வயிற்றிலிருந்து யோன ஜெபித்தார் [யோனா 2:19]**
- **நினிவே மக்களின் உபவாச ஜெபம் [யோன 3:59]**
- **தன் ஜீவனை எடுத்துக்கொள்ளும்படி யோன ஜெபித்தார் [யோன 4:3].**

## கிறிஸ்தவ ஓட்டத்திற்கு அவசியமானவைகள்

| | |
|---|---|
| **குறிக்கோள் அல்லது இலக்கு** | **I கொரிந்தியர் 9:25** |
| **பயிற்சி** | **I தீமோத்தேயு 4:78** |
| **சுயக்கட்டுப்பாடு** | **I கொரிந்தியர் 9:25** |
| **பொறுமை** | **எபிரெயர் 12:1** |

**வேதாகமத்தின் மகிழ்ச்சி அதிகாரம்**

The Joy Chapter of The Bible

David Shannon

I **கொ**ரிந்தியர் 13 ஆம் அதிகாரம் வேதாகமத்தின் அன்பின் அதிகாரம் என்றழைக்கப்படுவது போல், லூக்கா 15 ஆம் அதிகாரம் வேதாகமத்தின் மகிழ்ச்சியான அதிகாரம் என்று ஏன் அழைக்கப் படுவதில்லை?

இந்த லூக்கா 15 ஆம் அதிகாரம் எதைப் பற்றியது? இழந்துபோனவைகள் கண்டுபிடிக்கப்பட்டதைப் பற்றியது என்று நீங்கள் பதிலளிப்பீர்களா? அது சரியான பதிலாகத்தான் இருக்கும். ஆனால், வசனப் பகுதியில் எந்த வார்த்தைகள் அதிகமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறதோ அதைப் பற்றியது தான் என்று பதிலளித்தால் அது பொருத்தமாயிருக்கும். லூக்கா 15– ஆம் அதிகாரம் இழந்து போனவைகளை கண்டுபிடிக்கும் போது உணரும் மகிழ்ச்சியைப் பற்றியது. இந்த உவமையில் இயேசு கிறிஸ்து மூன்று சம்பவங்களைப் பற்றி பேசுகிறார்.

**சம்பவம் ஒன்று:**



இச்சம்பவத்தைப் பற்றிய முதல் வசனப்பகுதியில் நூறு ஆடுகளில் ஒரு ஆடு காணாமல் போய்விட்டது என்று சுருக்கமாகத்தான் சொல்லப்பட்டி ருக்கிறது. ஆனால், அந்த மேய்ப்பன் பட்ட சந்தோஷத்தைக் குறித்துத்தான் அதிக மாகப் பேசப்பட்டிருக்கிறது. முதலாவது, அந்த மேய்ப்பன் காணாமல் போன ஆட்டை கண்டுபிடித்தவுடனே அதைக் தோளின் மேல் போட்டுக் கொண்டு **சந்தோஷப்பட்டிருக்கிறான்.** இரண்டாவது, தன் நண்பர்களையும் அயலகத்தாரையும் தன் **சந்தோஷத்தில் பங்கு** பெற அழைத்திருக் கிறான். இயேசு கிறிஸ்து இந்த ஒட்டுமொத்த சம்பவத்தையும் ஏழாம்

வசனத்தில் சுருக்கமாகச் சொல்கிறார். மேலும், இங்கே இயேசு கிறிஸ்து தேடலையோ, இழந்து போனதைப் பற்றியோ அல்லது மேய்ப்பனைப் பற்றியோ விவரித்துப் பேசவில்லை. மாறாக, மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் உண்டாகும் மிகுந்த **சந்தோஷத்தைக்** குறித்துதான் விவரிக்கிறார்.


**சம்பவம் இரண்டு**



காணாமல் போன காசை தேடும் ஸ்திரீயைப் பற்றி ஒரு வசனத்தில் தான் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பெண் காசைக் கண்டுபிடித்த பின்பு, தன் சிநேகிதிகளையும், அயல்வீட்டுக் காரிகளையும் வரவழைத்து தன்னோடு **சந்தோஷப்படும்படி** சொன்னாள்.

பத்தாம் வசனத்தில் முதல் சம்பவத்தில் சொல்லப்பட்ட அதே காரியந்தான் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, பத்தாம் வசனம் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவதூதருக்கு முன்பாக உண்டாகும் **சந்தோஷத்தைப்** பற்றி விவரிக்கிறது.

**சம்பவம் மூன்று**



மூன்றாம் சம்பவம் நீளமானதும் இதுவரை எழுதப்பட்டவைகளில் மிகவும் அழகானதுமாயிருக்கிறது. இவ்வசனப்பகுதியில்

வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு சொற்றொடரும் ஒரு கலைஞனின் கைவண்ணத்தில் தீட்டப்படும் சித்திரமாயிருக்கிறது. இம்மூன்றாம் சம்பவத்தில் முதல் ஒன்பது வசனங்களில் அந்த இளைய குமாரனுடைய ஊதாரித்தனமான வாழ்க்கை தான் விவரிக்கப் பட்டிருக்கிறது. அடுத்த ஐந்து வசனங்கள் அந்த குமாரன் திரும்பி வந்த போது தகப்பனின் வெளிப்பாடுகளை விவரிக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் **சந்தோஷம்** என்று சொல்ல முடியும். மூத்த குமாரனுக்கு தன் தகப்பனுடைய சந்தோஷத்திலும் சந்தோஷமில்லை, இளைய குமாரனுடைய வருகையிலும் சந்தோஷமில்லை. இச்சம்பவத்தின் கடைசி வசனம் தகப்பனுக்கும், மூத்த சகோதரனுக்கும் இடையே காணப்பட்ட உரையாடலை சுருக்கமாகப் பதிவு செய்திருக்கிறது. மேலும், இக்கடைசி வசனம் ஒட்டுமொத்த சம்பவத்தையும் சுருக்கமாகச் சொல்கிறது. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான், காணாமற் போனான் திரும்பவும் காணப்பட்டான், ஆனபடியினாலே, நாம் **சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க** வேண்டுமே என்று சொன்னாள்.

உங்கள் வாழ்வில் எது உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டு வர வேண்டும்? இழந்து போனவர்கள் மறுடியும் மந்தைக்குள் வர வேண்டும் என்று ஏங்குகிற இருதயத்தை வளர்த்துக் கொள்ளுங்கள் அப்படி அவர்கள் திரும்பும் போது உங்களுக்குள் உண்டாகும் மகிழ்ச்சி பரலோகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியை பிரதிபலிக்கிறது. பவுல் பலமுறை இயேசு கிறிஸ்துவின் உவமைகளை எண்ணிப்பார்த்ததால் தான் இப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்ல முடிந்தது. **எங்களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும், மகிழ்ச்சியின் கிரீடமுமாய் யிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது அவருடைய சந்நிதானத்திலே நீங்கள் அல்லவா அப்படி இருப்பீர்கள். நீங்கள் எங்களுக்கு மகிமையும், சந்தோஷமு மாயிருக்கிறீர்கள்** [ I தெசலோனிக்கேயர் 2:19,20].

நீங்கள் அந்த மூத்தக் குமாரனைப் போன்றவரா அல்லது தகப்பனைப் போன்றவரா? எது உங்களை மகிழ்ச்சியாக்குகிறது என்று பாருங்கள். அப்பொழுது நீங்கள் யார் என்பதை அறிந்து கொள்வீர்கள். நாம் சரியாகச் செய்வோமாக [ வசனம் 32]. ✝

வேதாகம கதாபாத்திரங்கள்

# கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய எப்பாப்பிரா

## Epaphras a Servant Of Christ Jesus

Harvey Porter

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவத்தைப் பரப்பும் பணியில் தன்னோடிருந்தவர்களின் பெயர் பட்டியலை பல நிருபங்களில் பதிவு செய்து முடித்திருக்கிறார். பவுல் பெரும்பாலும் தன்னோடு சுவிசேஷப் பணியில் ஈடுபட்டவர்கள் சபையாரால் நேசிக்கப்பட்டார்கள் என்பதை எதினிமித்தம் யாருக்கு எழுதுகிறாரோ அவர்களுக்குத் தகவல் அளித்து விடுவார்.

பவுல் கொலோசெ பட்டணத்து சபைக்கு எழுதும் போது **எப்பாப்பிராவும்** உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான். உங்களைச் சேர்ந்தவனும், கிறிஸ்துவின் ஊழியகாரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலை நிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான் [கொலோசெயர் 4:12,13].

மேலும், இங்கே பவுல் எப்பாப்பிராவைப் பற்றி சொல்லும் போது உங்களைச் சேர்ந்தவன் என்று சொல்கிறார். இது எப்பாப்பிராவின் வீட்டுச் சபையாக இருந்திருக்கிறது. இதன் மூலம் முதல் நூற்றாண்டில் வீடுகளில் சபை கூடி வந்தது நமக்கு தெளிவாகிறது. இந்த எப்பாப்பிரா லவோதிக்கேயா மற்றும் எராப்போலி பட்டணங்களில் இருந்த சக கிறிஸ்தவர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவராக இருந்திருக்கிறார். இந்த எப்பாப்பிரா கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்துதல்களை அனுப்பினபடியால் அவர்கள் எப்பாப்பிராவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். எப்பாப்பிராவும் அவர்களுக்கு முக்கியமானவராக இருந்திருக்கிறார். ஒட்டு மொத்த சபையாரால் நேசிக்கப்படுவதும், அதற்குப் பதிலாக சபையை நேசிப்பதும் ஓர் அருமையான காரியமாகும்.

உண்மையில், எப்பாப்பிரா அந்த சபையாருக்காக தொடர்ச்சியாக ஜெபிக்கும் அளவுக்கு அவர்களை நேசித்திருக்கிறார். இது குறித்து பவுல் சொல்லும் போது தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான் என்று சொல்கிறார். போராடுதல் எனும் வார்த்தையைக் கேட்கும் போது, யாக்கோபு ஜெபிக்கும் போது அந்த

தேவ தூதனோடு போராடியது தான் நினைவுக்கு வருகிறது. போராட்டம் என்பதற்கான கிரேக்க வார்த்தையின் பொருள், சோர்ந்து போகும் அளவுக்கு கடினமாமாகப் பாடுபடுவது என்பதாயிருக்கிறது. இந்த எப்பாப்பிராவைப் போல, எப்பொழுதும் நமக்காக ஜெபிக்கும் கிறிஸ்தவ குணாதிசயத்தை உடைய ஒருவர் நம்மோடிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

எப்பாப்பிராவின் ஜெபங்கள் ஆகாரத்திற்காகவோ, ஆடைக் காகவோ, ஆரோக்கியத்திற்காகவோ அல்லது பணத்திற்காகவோ அல்ல. அவருடைய ஜெபங்கள் சபையார் தேவனுக்கு சித்தமான வைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும், பூரண நிச்சயமுள்ளவர் களாயும் நிலைநிற்க வேண்டுமென்பதற்காகத்தான் இருந்தது. நாம் நேசிக்கும் சபைக்காக ஜெபிக்கும் போது நம்முடைய ஜெபங்களும் இப்படியாகத்தான் இருக்க வேண்டும். தேவனுக்கு சித்தமானவை களெல்லாவற்றிலும் நாம் நிலைநிற்கிறவர்களாயிருந்தால் எப்படிப் பட்ட சபையாக இருப்போம். அனலுமில்லாத, குளிருமில்லாத சபை அங்கத்தினர்கள் நம் மத்தியில் காணப்படமாட்டார்கள். சபை அங்கத் தினர்கள் மத்தியில் இடை நிற்றலும் இருக்காது. சபை கூடுவதை யாரும் விட்டுவிடவும் மாட்டார்கள். இன்றைய நாட்களில் சபையானது தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் நிலை நிற்க வேண்டும்.

எப்பாப்பிரா தானறிந்த எல்லோரும் தேறினவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்பியிருக்கிறார். அந்த ஜெபத்தை நாமெல்லாரும் ஒத்துக் கொள்வோம். சபையில் தேறின அல்லது முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்கள் அவசியமாயிருக்கிறார்கள் – சின்ன பிரச்சனைகளை பெரிதுபடுத்தாத, நமக்கு யாரோடு கருத்து வேறுபாடு ஏற்படுகிறதோ அவர்களை நேசிக்கிற எல்லா பிரச்சனைகளுக்கும் பொறுமையோடு தீர்வு காண்கிற தேறின கிறிஸ்தவர்கள் தேவைப்படுகிறார்கள். முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்கள் சங்கட சமயங்களில் வெளியேறுவதில்லை, கொடுக்கப்பட்ட பணியை விட்டுவிடுவதில்லை அல்லது சேவை செய்வதை நிறுத்திக் கொள்வதுமில்லை. கர்த்தரால் எப்போதும் அவர்களை நம்ப முடியும். ஏனென்றால், அவர்கள் எப்போதும் அங்கே இருக்கிறார்கள்.

எப்பாப்பிரா சபையார் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லா வற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலை

நிற்கவேண்டுமென்று ஜெபித்திருக்கிறார். ஒரு வேலைக்காரன் எஜமானின் ஆணைக்கு அப்படியே கீழ்ப்படிவது தான் இங்கே முக்கியமாக இருக்கிறது. எனவே தான், ஒருவர் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் பூரண நிச்சயமுள்ளவராயிருக்க வேண்டுமென்று சொல்கிறார். முழுமையான தேவசித்தம் நம் வாழ்க்கைக்குப் போதுமானது, நமக்கு வேறொன்றும் தேவையில்லை. எனவே தான், நாம் கிறிஸ்துவோடு சேர்ந்து என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று ஜெபிப்போமாக.

எப்பாப்பிரா அந்த கிறிஸ்தவர்களிடத்தில் அன்புகூர்ந்தான் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஏனென்றால், அவன் அவர்களுக்காக ஊக்கமாக ஜெபம் பண்ணி அந்த சபையார் தேவனுக்கு சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலை நிற்க வேண்டுமென்று, ஜெபங்களில் அவர்களுக்காக எப்பொழுதும் போராடியிருக்கிறான். என்ன ஓர் அருமையான ஜெபம்! இது நம் ஒட்டு மொத்த கிறிஸ்தவ வாழ்க்கை யையும் சில வார்த்தைகளில் அடக்குகிறது. இந்த ஜெபம் நாம் கூடி ஆராதிக்கின்ற சபைக்காக ஜெபிக்க வேண்டுமென்று நம்மை ஊக்கப்படுத்துகிறது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு என்ன தேவைகள் இருந்ததோ அதே தேவைகள் தான் இன்று நமக்கும் இருக்கிறது. நம் தேவனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் நேற்றும், இன்றும் என்றும் ஆசீர்வதிக்க விரும்புகிறார்கள். எனவே, நாமெல்லாரும் ஜெபத்தில் போராடுகிறவர்களாயிருப்போம். ஏனென்றால், நம் சகோதர, சகோதரிகள் நாம் அங்கம் வகிக்கும் சபையில் தான் அவர்களும் அங்கும் வகிக்கிறார்கள். இவ்விதமாக நாம் எப்பாப்பிராவைப் போல் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக இருக்க முடியும். ✝

நாமெல்லாரும் ஜெபத்தில் போராடுகிறவர்களாயிருப்போம்

ஏனென்றால் நம் சகோதர, சகோதரிகள் நாம் அங்கம்

வகிக்கும் சபையில் தான் அவர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

இவ்விதமாக நாம் எப்பாப்பிராவைப் போல் கிறிஸ்துவின்

ஊழியக்காரர்களாக இருக்க முடியும்.

## நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?
## உபாகமம் 4:1-10 வசனங்கள்

1. **வசனம்**

இஸ்ரவேலரே, நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும், உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு கொடுக்கிற தேசத்தில் நீங்கள் பிரவேசித்து அதைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கும் நீங்கள் கைகொள்வதற்கு நான் உங்களுக்குப் போதிக்கிற கட்டளைகளையும், நியாயங்களையும் கேளுங்கள்.

2. **வசனம்**

நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைகொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கும் வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.

3. **வசனம்**

பாகால்பேயோரின் நிமித்தம் கர்த்தர் செய்ததை உங்கள் கண்கள் கண்டிருக்கிறது. பாகால்பேயோரைப் பின்பற்றின மனிதரை யெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இராதபடிக்கு அழித்துப் போட்டார்.

4. **வசனம்**

ஆனாலும், உங்கள் தேவனாகிய கர்த்தரை பற்றிக் கொண்ட நீங்களெல்லாரும் இந்நாள் வரைக்கும் உயிரோடிருக்கிறீர்கள்

5. **வசனம்**

நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு; என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும், நியாயங் களையும் போதித்தேன்.

6. **வசனம்**

ஆகையால், அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள், ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும், விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்.

7. **வசனம்**

நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுது கொள்ளுகிற போதெல்லாம் அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?

8. **வசனம்**

இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும், நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறெ பெரிய ஜாதியும் எது?

9. **வசனம்**

ஓரேபிலே உன் தேவாகிய கர்த்தருக்கு முன்பாக நீ நிற்கும் போது, கர்த்தர் என்னை நோக்கி: ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன். அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக் கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள் என்று சொல்லியுள்ளார்.

10. **வசனம்**

உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காத படிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவை ஜாக்கிரதை யாய்ச் காத்துக்கொள்; அவைகளை உன் பிள்ளைகளுக்கும், உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்.

✝

---

## தற்கால பிரசங்கியார்கள்

- **மக்கள் புண்படாதபடி இதமான வார்த்தைகளை பேசுகிறார்கள்.**
- **பூமிக்குரிய பொக்கிஷங்களை வாக்குத்தத்தங்களாக வாரி வழங்குகிறார்கள்.**
- **பாவத்தை சுட்டிக்காட்டி பயத்தை ஏற்படுத்துவதில்லை, நரகத்தைப் பற்றி அவ்வளவாகப் பேசுவதில்லை.**
- **பூமியில் சிறந்தவைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து பிரசங்கிக்கிறார்கள்.**

## வசன ஆராய்ச்சி

I கொரிந்தியர் 6 : 12 - 20

Mark. N. Posey

- **வ**சன ரீதியாக தவறாக இல்லாத பட்சத்தில் கிறிஸ்தவர்கள் அவர்கள் விரும்பிய எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பது பவுலின் எண்ணமாக இருந்தது (6:12) **சரி / தவறு**

- சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, .................. உரியது, கர்த்தரும் உரியவர் (6:13)

- தேவன் கர்த்தரை எழுப்பினாரே .................. தமது வல்லமையினாலே .................... (6:14).

- உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் ........................ அறியீர்களா? (6:15).

- வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே .................... (6:16).

- இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லி யிருக்கிறதே என்று பவுல் எந்த வசனத்தை மேற்கோள் காட்டுகிறார்? (6:16)

- அப்படியே ...................... அவருடனே ..................... ஆவியாயிருக்கிறான் (6:17).

- வேசித்தனஞ் செய்கிறவனோ எதற்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறதாகப் பவுல் அறிவிக்கிறார்? (6:18).

- நம் சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ................. நீங்கள் ................. அறியீர்களா? (6:19).

- நீங்கள் ................. அறியீர்களா? என்று பவுல் கேள்வி கேட்கிறார் (6:19).

- நம் சரீரங்கள் தேவனுடையவைகளாக இருக்கிறபடியால் அவைகள் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்? – (6:20).

- எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் நான் ஒன்றிக்கும் அடிமைப் படமாட்டேன்.

❇ வயிற்றுக்குப் போஜனமும், போஜனத்திற்கு வயிறும் ஏற்கும் . ஆனாலும் தேவன் இதையும், அதையும் அழியப்பண்ணுவார் சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது. கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.

❇ தேவன் கர்த்தரை எழுப்பினாரே நம்மையும் தமது வல்லமை யினாலே எழுப்புவார்.

❇ உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர் களா?அப்படியிருக்க, நாம் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.

❇ வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமா யிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமா யிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே.

❇ அப்படியே கர்த்தரோடிருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்

❇ வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்கு புறம்பாயிருக்கும். வேசித்தனஞ் செய்கிற வனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.

❇ உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலேப் பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கி பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?

❇ கிரையத்துக்கு கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியி னாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

**பரீட்சை**

**மனிதர்களாகிய நம்மை எப்போதுமே பரீட்சை பயம் பற்றிக்கொள்கிறது. பள்ளி, கல்லூரி பரீட்சைகளைவிட வாழ்க்கை பரீட்சையே கடினமானது. ஒவ்வொரு வருக்கும் வித்தியாசமான கேள்வித்தாள் தரப்படுகிறது என்பதை உணராத பலர் மற்றவர்களைப் பார்த்து வாழ முயற்சிப்பதால் தோற்றுப் போகிறார்கள்.**

## அவர்கள் ஏன் கிறிஸ்தவர்களென்று அழைக்கப்பட்டார்கள்?

**அ**ப்போஸ்தலர் 11:26) ல் ஒரு முக்கியமான வாக்கியத்தை நாம் காண்கிறோம். முதல் முதல் அந்நியோகிவிலே சீஷர்களுக்கு **கிறிஸ்தவர்கள்** என்கிற பேர் வழங்கிற்று. அப்போஸ்தலனாகிய பேதுரு நாம் கிறிஸ்தவர் என்னும் பெயரைத் தரித்துக்கொள்வதில் பெருமை கொள்ள வேண்டுமென்று சொன்னார். **ஒருவன் கிறிஸ்தவனாய் இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படா மலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்** (I **பேதுரு 4:16).**

ஏன் ஆதிக்கிறிஸ்தவர்கள் முதன்முதலில் எருசலேமில் இல்லாமல் அந்தியோகியாவில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்? சபை ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் ஆன போதிலும் கூட (அநேகமாக 10 வருடங்கள்) ஏன் அந்நியோகிவிலே சீஷர் களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கப்பட்டது? எருசலேமிலே சீஷர்களுக்கு ஏன் கிறிஸ்தவர்கள் என்ற பேர் வழங்கப்படவில்லை? முதன் முதலில் சபை யூதர்களை மட்டும் உள்ளடக்கிய ஒன்றாகத்தான் இருந்தது. எனவே, இது யூத மார்க்கத்தின் ஒரு பிரிவாகத்தான் கருதப்பட்டது. ஆனால், அந்நியோகியாவிலே காரியம் அப்படியாயிருக்கவில்லை. அது புறவினத்து மக்களை அதிக எண்ணிக்கையில் கொண்ட சபையாக இருந்தது. அந்நியோகியா சபையிலே யூதர்களும், புறவினத்தாரும் சமமாக நடத்தப்பட்டார்கள், எனவே, இந்த ஜனங்களை அடையாளப்படுத்த, ஒரு புதிய பெயர் அவசியப்பட்டது. கிறிஸ்துவின் சுவிசேஷம் இருதிறத்தாரையும் இணைத்துவிட்டபடியால் அங்கே இனப்பாகுபாடு அறவே இல்லா திருந்தது. அப்போஸ்தலர் 11:26ல் லூக்கா பதிவு செய்திருக்கும் செய்தியை கவனித்தால் வெளியே உள்ளவர்கள் கூட தேவனுடைய பிள்ளைகளை அடையாளப்படுத்த கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைத் தான் விரும்பியிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எவ்விதமாக அடையாளப் படுத்தப்பட்டார்கள் என்பதை அறியும் போது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இன்றைய நாட்களில் நாம் கிறிஸ்துவோடு நெருக்கமான உறவை வைத்துக் கொள்ளும்போது, நாமும் அவ்விதமாகத்தான் அடையாளப்படுத்தப்படுவோம். ஜனங்கள் நம்முடைய வாழ்க்கையைப் பார்த்து உடனடியாக இயேசு கிறிஸ்துவின் போதனைகளை நினைத்து, நம்மை அவரோடு அடையாளப்படுத்த வேண்டும். இது உங்கள் வாழ்க்கையில் உண்மையாக இருக்கிறதா?

## சத்திய வழி

❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி**


❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**

❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி

❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்


<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் :**சகோ. P.C. பிலேமோன் ராஜா**

❖ தமிழன்/நம்பிக்கை :ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி

❖ பைபிள் பாடங்கள் :அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை


❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | TV | வெள்ளி | காலை | 7:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

**மாத இதழ் : திருமறை ஆசான்**

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு
இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள்** (Tracts) **வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**

E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382
P.R. **சுவாமி** : 098440 70763
P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420
B. **அர்ஜுனன்** : 994435 58041

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ..................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ____________________

தெரு / ரோடு : ____________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________________

மாநிலம் : ____________________

# ✯ சத்தியத்தின் குரல் ✯


## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
86-A, Dharapuram Road,
Kangayam - 638701. TN. India.
Cell : 98427 30382, 99655 30385

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
Cell : 92 4421 4421, 92 4420 4420

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
Cell : 94435 58041


## 5 நிமிட வேத பாடம்

### கர்த்தர் என்னை அறிந்திருக்கிறார்

Paula Bates

1. கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து ........ என் உட்காருதலையும், என் எழுந்திருக்குதலையும் நீர் ............., என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர் [சங்கீதம் 139:1,2].

2. ........... அவர்கள் நினைவுகளை அறிந்து, நீங்கள் உங்கள் இருதயங்களில் .............. , .............. ? மத்தேயு 9:4.

3. அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் ........... அவர்களை நம்பி இணங்கவில்லை. ............ அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் ............. கொடுக்கவேண்டிய தாயிருக்கவில்லை [யோவான் 2:24, 25].

4. உன் ..........., உன் ......., உன் வரவையும் நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன் [ II ராஜாக்கள் 19:27]

5. ஆகிலும் உங்களில் ........... சிலர் உண்டு என்றார், விசுவாசியாதவர்கள் ............ தம்மை காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும் ஆதி முதலாக இயேசு .............. அவர் பின்னும் [யோவான் 6: 64].

6. எல்லாருடைய ............... அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய ............... போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக [அப்போஸ்தலர் 1:24].

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்



### இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**
**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்
நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்
‘ திருமறை ஆசான் ’
‘ கிருபையுள்ள வார்த்தை ’
‘ வேர்டு ஆப் கிரைஸ்ட் ’


மேலும் விபரங்களுக்கு : E.Z.S. ராஜநாயகம், தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385



சத்தியத்தின் குரல் Volume - 41 THE VOICE OF TRUTH INTERNATIONAL